PL

எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

Aasiriyam (pedagogy)

# ஆசிரியம்

ආසිරියම්

## எண்ணிம சமூகமும் கல்வியும்



ISSN 2021-9041

"அறிவுச் சமூகத்தின் வேட்கை விளைத்திறன் மிக்க ஆசிரியர்"

இதழ் 37-38

மே-ஜூன் 2014


...பா துசன நூலகம்
யாழ்ப்பாணம்

## புதிய ஆசிரியர் அதிபர் சேவைகள் "கந்த"லாகிப் போகுமா?

100/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகத்தின்
# புதிய வெளியீடு




**விலை 340.00**

## சேமமடு பொத்தகசாலை

யூ.ஜி.50 பீப்பிள்ஸ் பார்க் கொழும்பு–11
தொ.பே: 011–2472362 தொ.ந: 011–2448624
மின்னஞ்சல் : chemamadu@yahoo.com
இணையம் : www.chemamadu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே-ஜுன் 2014 இதழ் - 37-38

# உள்ளே...


- "கல்வி என்னும் பல்கடல்...
  சிவ.இராசையா
  சோ.அதியன் - 05
- புதிய ஆசிரியர் அதிபர் சேவைகள்...
  அன்பு ஜவஹர்ஷா - 09
- இன்றைய பாடசாலைக் கல்வியில்...
  எஸ்.எல்.மன்சூர் -16
- இலங்கையும் கல்வி சமவாய்ப்பும்...
  சி.லோகராஜா - 21
- புதிய கல்விச் சீர்திருத்தமும்...
  கி.புண்ணியமூர்த்தி - 34
- எண்ணிம சமூகமும் கல்வியும்
  சபா.ஜெயராசா - 40
- சுதேச மயமாகும் சர்வதேசப்...
  சோ.சந்திரசேகரன் - 44
- க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான.
  ஆ.நித்திலவர்ணன் - 48
- கற்றலுக்கான பழக்கவழக்கங்களை...
  க.சுவர்ணராஜா - 56
- கல்வியின் பண்புத் தரவிருத்தி...
  சசிகலா குகமூர்த்தி - 66


"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"


தொடர்புகளுக்கு:

தெ.மதுசூதனன்

077 1381747 / 011 2366309/ 021 2227147

காசுபதி நடராஜா - 0777 333890
மர்சூம் மௌலானா - 077 4747235
அ.ஸ்ரீகாந்தலட்சுமி - 0777 286211

படைப்புகள் அனுப்ப:

*aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*

பணம் அனுப்ப:

Chemamadu book centre - BOC Bank
A/C- NO :8081150

Chemamadu book centre - COM Bank
A/C- NO:1120017031


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2021-9041

# ஆசிரியம்

இதழ் 37-38

**ஆசிரியர்:**
தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள்:**
அ.ஸ்ரீகாந்தலட்சுமி
எம்.என்.மர்சூம் மௌலானா, காசுபதி நடராசா

**ஆசிரியர் குழு:**
பேரா.க.சின்னத்தம்பி, பேரா.சபா.ஜெயராசா
பேரா.சோ.சந்திரசேகரன், பேரா.எம்.ஏ.நு.்.மான்

**சிறப்பு ஆலோசகர்:**
அன்பு ஜவஹர்ஷா

**ஆலோசகர் குழு:**
பேரா.மா.கருணாநிதி,
பேரா.மா.செல்வராஜா, பேரா.தை.தனராஜ்,

**நிர்வாக ஆசிரியர்:**
சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு:**
வை.கோமளா

**Printed by: cbc press**
Tel : 0777 345 666

**தொடர்புகளுக்கு:**
**"Aasiriyam"** 180/1/50 People's Park, Colombo -11,Tel: 011-2331475
E-mail : aasiriyam@gmail.com, Web:www.chemamadu.com/aasiriyam.aspx

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த காலடியும்... அறிகை விசையும்...

தற்போது வெளிவரும் இந்த இதழுடன் "ஆசிரியம்" தனது மூன்றாண்டு களைப் பூர்த்தி செய்து, அடுத்த ஆண்டில் காலடி வைக்கின்றது. இந்தத் தருணத்தில் ஆசிரியத்துடன் நேரடி, மறைமுகத் தொடர்புகளை வைத்துக் கொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நமது நன்றி உரித்தாகட்டும்.

சமகால தமிழ் கல்விப் புலம் ஏனைய அறிவுப் புலங்களை விட மிக மோசமான நெருக்கடிகளையும் இழப்புகளையும் முகங்கொடுத்துள்ளது. இந்நிலையில் 'ஆசிரியர் பணி' தொடர்பில் பல்வேறு நுட்பமான ஆழமான விமரிசனங்கள் முன்வைக்கப்படுகின்றது.

சமகால ஆசிரியரை 'நவீன ஆசிரியர்' என்றும் அழைக்கலாம். இந்த ஆசிரியர் பல்வேறு திறன்களைக் கொண்டவராக இருத்தல் வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது. ஆசிரியருக்குரிய தேர்ச்சிகள் பன்முகப் பரிமாணம் கொண்டவை. இருப்பினும் நாம் அவற்றை நான்கு வகைப்பாட்டுக்குள் அடக்க முடியும். அவை : 1. அறிவாற்றலும் விளக்கமும், 2. கற்பித்தல், வகுப் பறை முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் 3. நெறிகை செய்தல், கணிப்பீடு செய்தல், பதிவுகளை மேற்கொள்ளல் மற்றும் பொறுப்புக் கூறல் 4. வாண்மை சார்ந்த வேறு செயற்பாடுகள் என்று வகைப்படுத்திப் புரிந்துகொள்ளலாம். இதைவிட உள்ளக மேற்பார்வை, புறநிலை மேற்பார்வை, பெற்றோருக்குரிய அவதானிப்புக்கள் முதலியவற்றை அடியொற்றி ஆசிரியருக்குரிய தேர்ச்சிக் குறைபாடுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. ஆனால் நமது சூழலில் இவ்வாறான மதிப்பீடுகள் செய்வதற்கான அணுகுமுறைகள் முறையாகப் பின்பற்றப்படாமல் இருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பொதுவாக ஆசிரியர் ஒற்றைப் பரிமாணத்திலே கற்பித்தலை முன்னெடுத்துச் செல்லாது வகை வகையான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்பவராய் இருத்தல் வேண்டும். நம்மிடையே ஆசிரியத்துவம் சமூகச் செயற்பாடுகளின் தேவையாகவே முகிழ்த்தெழுகின்றது. அதாவது சமூகம் நிலைபேறு கொள்வதற்குரிய அறிவுக் கையளிப்பிலே ஆசிரியத்துவத்தின் பங்கு தவிர்க்க முடியாதது.

இன்றைய தமிழ்ச் சூழலில் ஆசிரியத்துவம் அறிவு, ஆற்றுகை நிலைகளில் மட்டுமல்ல பண்புசார்ந்த மனப்பாங்கு நடத்தைக் கோலங்களிலும் பெரும் பின்னடைவுகளை வீழ்ச்சிகளை கண்டு வருகின்றது. 'ஆசிரியத்துவ படிமம்' தொடர்பில் பல்வேறு பரிசீலனைகளை விளக்கங்களை கல்விச் சமூகம் வேண்டியுள்ளது. தொடர்ந்து புதிய ஆசிரியத்துவ மரபை உருவாக்குவதற் கான புலமை நியாயப்பாடுகளை ஆழப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகளும் உருவாகி உள்ளன.

ஆசிரியத்துவத்தின் உன்னதம் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்வதோடு இணைந்தது. இங்கு தலைமைத்துவம் ஒரு செயல்முறை ஆகின்றது. அதாவது பாடசாலையில் தலைமைத்துவம் மாணவர் மீது செல்வாக்கை ஏற்படுத்தும் செயல்முறை ஆகின்றது. இந்தச் செயல்முறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக கற்றலின் இலக்குகள் எட்டப்படுகின்றன. ஆசிரியர் மாணவர் மீது செல்வாக்கை ஏற்படுத்துதல் போன்று மாணவரும் ஆசிரியர் மீது செல்வாக்கை ஏற்படுத்துவர். இந்நிலையில் ஆசிரியர் தலைவராக மட்டுமன்றி இணைந்து கற்பவராகவும் செயற்படுகின்றார்.

தற்போது ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய பாத்திரங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. சமகால ஆசிரியர் வகிக்க வேண்டிய பாத்திரங்களை நாம் பட்டியலிட்டால் அந்தப் பட்டியல் பலவாறு உயர்ந்து செல்லும். இந்தப் பட்டியல் களை பட்டியலிட்டு நுண்ணியதான விளக்கம் கொடுக்கும் கல்வியியலாளர் பலர் தம்மளவில் சுய முரண்களுடன் இயங்குவதையும் இங்கு நாம் சுட்டிக் காட்ட வேண்டும். இப்போது எதையும் பணம் சார்ந்து மட்டும் அளவீடு செய்யும் புலமையாளர்கள் நம் மத்தியில் உருவாகி உள்ளனர். இவர்களால் கல்விப் புலம் சார்ந்த அற மதிப்பீடுகள் மாசுபட்டுச் செல்வதையும் மறுப்பதற் கில்லை. முன்பு அறஒழுக்கங்களை கறாரான முறையில் வளர்த்தெடுத்தல் ஆசிரியரின் பொறுப்பாக இருந்தது. ஆனால் இன்று ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு அறவொழுக்கம் போதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

ஆசிரியத்துவத்தில் வலியுறுத்தப்படும் சிறப்புத் திறனாக கற்றல் - கற்பித்தல் இடம்பெறுகின்றது. ஆசிரியர் தொழில்நுட்பத்திறன், மனிதத்திறன், எண்ணக்கரு சார்ந்த திறன் முதலானவற்றைப் பயன்படுத்தி கற்றலையும் கற்பித்தலையும் முன்னெடுக்கும் பொழுது வளமானதும் உயிர்ப்பு மிக்கது மான தலைமைத்துவ நிலை வகுப்பறையிலே தோற்றம் பெறும். மாணவரு டன் இங்கிதமாகப் பழகுதலும், கற்றல் கற்பித்தலை மேம்படுத்தும் இடைவினை களை மேற்கொள்ளலும், கல்வி இலக்குகளை நோக்கி மாணவர்களை அழைத்துச் செல்லும் மானிடத் திறன்களில் உள்ளடங்குகின்றன. இந்தத் திறன்களுக்கு முரணாக இயங்கும் மாசுபட்ட கல்விச் சூழல் நிலைபெற்று வருகின்றது. இந்த நிலைமையை நாம் எச்சரிக்கையுடன் உணர்ந்துகொள்ள வேண்டும். கல்விசார் அந்தஸ்து, அதிகார வகிபங்குகளை தவறாகப் பிரயோகிக்கும் சூழமைவு உயர்கல்வி நிறுவனங்களில் கலாசாரமாக மாறி வருகின்றது. இதனுடன் தொடர்புடைய தலைமைகளின் போலி முகத்திரை கிழித்தெறியப்பட வேண்டும்.

இன்று கல்வியியலை கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் கல்விப்புல அறிவை இயந்திரப் பாங்கில் செயற்கையாக நெட்டுருப்படுத்தும் உயிர்ப்பற்ற அறிவுக் கையளிப்பாக மட்டுமே சுருக்கி வருகின்றனர். இந்த ஆசிரிய கல்வியாளர்களிடமிருந்து கல்வியைக் காப்பாற்ற வேண்டும். கல்வியை பொருளியல் மயப்படுத்தாமல் மானிடப்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களிடம் கல்விப்புலம் கையளிக்கப் படுவதற்கான சமூக சனநாயகம் மீள் எழுச்சி பெற வேண்டும். நவீன கல்வி நுட்பங்கள் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளவும், தமது வெளிபாட்டு ஆற்றலையும் உறங்கும் ஆற்றலையும் உய்த்தறிந்து கொள்ளவும் சாதகமான சூழலை உருவாக்குகின்றது. ஆகவே தமது கற்றலையும் தமது தொழிற்பாடு களையும் தாமே வளம்படுத்துவதற்கு உரிய திறன்களை வளர்த்துக்கொண்டு மேலே செல்வது இன்றைய காலத்தின் தேவையாகின்றது.

**தெ.மதுசூதனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## "கல்வி என்னும் பல்கடல் பிழைக்கும் ..."

■ சிவ.இராசையா
■ சோ.அதியன்

***பெரிய பாடசாலைகளுக்கும் கிராமத்து சிறிய பாடசாலை களுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் என்ன?***

பொதுவாக பெரிய பாடசாலைகள் குறுகிய உளப்பாங்கையும் குறுகிய தனிமனித வாதத்தையும் மிகவும் மட்டரகமான சுயநலத்தையும் வளர்ப்பதில் முன்னின்று உழைக்கின்றன. இங்கு மாணவர்களிடையே ஒத்துழைப்பையும் சகோதரத்துவத்தையும் காண்பது அரிது. நன்றாகக் கற்கும் மாணவரின் காலை வாரிவிடுதல் கூட இங்கு சக்ஜம். அதிலும் வறிய மாணவர்கள் பெரிய கல்லூரி களில் உளநெருக்குவாரங்களையும் மனத்தாங்கலையும் தொடர்ந்து அனுபவித்து வருகின்றனர். இங்கு பாடசாலைப் பண்பாடு எப்போதும் எதிர்மறையில் வளர்ந்து வருகிறது. இதனோடு வளர்ந்து வருபவர்கள் சமூகநலன் கருதாது குறுகிய நலன் சார்ந்து வடிவமைக்கப்படுகின்றனர்.

***பெரிய பாடசாலையின் பண்பாட்டுக் கோலம்?***

பெரிய பாடசாலையில் கற்போர் தமக்குரிய அந்தஸ்து சின்னங்களாக மோட்டார் சைக்கிள், நவீன கையடக்கத் தொலைபேசி, மடிக்கணினி முதலியவற்றை வைத்திருக்கின்றனர். அதேவேளை அங்கு கல்வி கற்கும் ஏழை மாணவர்கள் அவற்றை வாங்க முடியாத உளச்சிக்கலுக்கும் தாழ்வுச் சிக்கலுக்கும் உள்ளாகின்றனர். இது இவர்களது கல்விச் செயற்பாட்டைப் மிகவும் பாதிக்கின்றது. அத்துடன் வசதிமிக்க மாணவர்கள் மது அருந்துத லையும் போதைவஸ்துப் பொருட்கள் பாவித்தலையும் அந்தஸ்து சின்னங்களாக கருதுகின்றனர். சமூக நோக்கும் சகோதரத்துவமும் இவர்களது பண்பாட்டில் அற்றுப் போகின்றது. இன்னொரு வகையில் தமிழ்ப் பண்பாட்டைக் கைவிட்டு மலினமான மேலைத்தேசப் பண்பாட்டுக்கு அடிமையாகும் நிலையே இங்கு காணப்படுகின்றது.

***பெரிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியத்துவப் பண்பாடு?***

இங்குள்ள ஆசிரியர்கள் கிராமப் பாடசாலைகளில் பணியாற்றுவதைக் காட்டிலும் பெரிய பாடசாலைகளில் பணியாற்றுவதை உயர்வான அந்தஸ்து சின்னமாகக் கருதுகின்றனர். இவர்களும் எதிர்மறைப் பண்பாட்டோடு இழுபட்டுச் செல்பவர்களாகவன்றி இவற்றை மாற்றியமைத்து புதுயுகம் படைப்போராக காணப்படுபவராக இல்லை. இன்னொருபுறம் பெரிய பாடசாலைகளுடன் இணைந்த வகையில் தனியார் வகுப்புகளை கட்டி வளர்ப்பதிலும் ஈடுபாடு காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து பெரிய பாடசாலைகளிலேயே கற்பிப்பதில் அதிகம் ஈடுபாடு காட்டுகின்றனர். கிராமப்புற பாடசாலைகளுக்கு செல்வதை தடுத்து வருகின்றனர். மேலும் வாசிப்புத் திறனை வளர்ப்பதில் போதிய நாட்டம் இல்லாதிருப்பதும் இவர்களின் உளப்பாங்கில் ஊடுருவி உள்ளது. வாசிப்புப் பின்னடைவு கற்றல் கற்பித்தலிலும் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

மாணவர்கள் ஆசிரியர் வழங்கும் வழமையான குறிப்புகளில் தங்க வைப்போராக மாற்றப்படுகின்றனர். புதிய விடயங்களோடு உறவாடாத நிலையில் பொதுப் பரீட்சைகளிலும் மாணவர்கள் பின்னடைய நேரிடுகின்றது.

வளர்ந்துவரும் அறிவைக் கையளிக்கும் நூல்களை வாங்கி கல்லூரிகளின் நூலகங்களை வளப்படுத்தாது வினாவிடை புத்தகங்களை வாங்கி நூலகங்களை அலங்கரிக்கும் முறைகளும் வளர்ச்சியடைகிறது. அதனால் மாணவர்களின் அறிவு தொடர்ந்து மட்டுப்பாடுகளுக்குள் வைக்கப்படுகிறது. வினா விடைகளை நம்பி படிக்கும் மாணவர்கள் பரீட்சைகளில் நவீன வினாக்கள் வரும்போது விடையளிக்க முடியாது திணறுகின்றனர். உயர்நிலையான வாசிப்பின் பின்னடைவு அனைத்துத் துறைகளிலும் பின்னடைவை ஏற்படுத்துகின்றன.

இங்கு பணியாற்றும் அதிபர்கள் பெரும்பாலும் பாடசாலை முகாமைத்துவத்தில் நேரத்தை உச்ச நிலையில் விளைவு தர கூடியவாறு பயன்படுத்தும் செயற்பாட்டில் இல்லை. இவர்களிடம் வாசிப்பும் தேடலும் அரிதாக உள்ளது. மற்றவர்களுக்கு முன்மாதிரியான தற்படிமத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் இல்லாதவர்களாக உள்ளார்கள். போலிமையும் பொய்யும் கொண்டவர்களாக தமது இருப்பை பாதுகாக்கின்றனர். குறிப்பாக பெரிய பாடசாலை அதிபர் பண்பாட்டு இவ்வாறுதான் மையம் கொண்டிருப்பதை எவரும் மறுக்க முடியாது. ஆசிரியத்துவத்துக்கும் அதிபருக்கும் இடையே எதுவித உறவும் இல்லாதது போல் மனபாங்கை வெளிப்படுத்துகின்றனர்.

***தற்போது அதிபர் ஆசிரியர் ஆகியோரிடத்து புலமைத்துவ வீழ்ச்சி கண்டு வருதல் கண்டறியப்பட்டுள்ளது இது உண்மையா?***

ஆம்! தற்றுணிவுடன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தலிலும் பின்னடைவுகள் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் இலங்கையே வியக்குமளவிற்கு புலமையாற்றலும் தற்துணிவும் உள்ள அதிபர்களும் ஆசிரியர்களும் தமிழ்ப் பிரதேசங்களில் கடமையாற்றினர். அத்தகைய நிலையை இன்று காணுவது அரிதாக உள்ளது.

சுயவிமர்சனமும் கல்வி தொடர்பான விமர்சனங்களும் ஆசிரியர்களிடத்தும் அதிபர்களிடத்தும் வறிதாகவே காணப்படுகிறது. மேலும் பாடசாலையை அரசியல்மயப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக அதிபர்கள் இயங்கி வருவதையும் இங்கு குறிப்பிடலாம். ஒவ்வொரு அரசியல் வாதிகளையும் நக்கிப் பிழைத்து தமது இறுப்புக்கான அந்தஸ்தை பொய்யாக உறுதி செய்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்போது பெரிய கல்லூரிகளை மையமாகக் கொண்டு இயங்கும் பழைய மாணவர் சங்கமும் கல்வி நோக்கில் விமரிசனத்துக்குரியவையாக உள்ளன?**

# 7

பழைய மாணவர் சங்கம் குறுகிய உணர்ச்சிகளின் தளங்களாக செயற்படுகின்றன. பெரிய கல்லூரிகளுக்கு அருகாமையில் வசதி குன்றிய நிலையிலும் வறுமை நிலையிலும் உள்ள பாடசாலைகள் பல காணப்படு கின்றன. தமது நிதி வளத்தின் சிறுபகுதியேனும் இவர்கள் சிறிய பாடசாலை களுக்கு கொடுத்து உதவுபவர்களாக இல்லை. மிகவும் வறிய நிலையில் உள்ள பெற்றோரின் பிள்ளைகள்தான் வசதி குன்றிய அந்த சிறிய பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர்.

இன்று உலகம் முழுவதும் சமூகநீதி பற்றிய சிந்தனைகள் உலகம் முழுவதும் பலவாறு கிளைகள் பரப்பும் நிலையில் உள்ளன. ஆனால் பெரிய பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கம் இதனைப் புரிந்துகொள்வதாக இல்லை. சங்கம் வறியதாகவே உள்ளது.

பெரிய பாடசாலைகளுக்கு கொடுத்து உதவும் பணத்தின் சிறிய பகுதியேனும் அருகில் உள்ள சிறிய பாடசாலைகளுக்கு கொடுப்பது இல்லை. பழைய மாணவர் சங்கம் குறுகிய மனப்பாங்கைக் கொண்டியங்குகின்றனர். ஏனைய பாடசாலைகளையும் செயற்பாடுகளையும் வரவேற்காத குறுகிய மனோபாவம் இவர்களிடம் காணப்படுகிறது.

பழைய மாணவர்களே பாடசாலையை வழிநடத்த வேண்டுமென்ற குறுகிய மனோபாவத்தால் ஆற்றல்மிக்க அதிபர்களும் ஆசிரியர்களும் கல்லூரிகளுக்கு கிடைக்காமல் போய் விடுகின்றனர். ஆற்றல் குறைந்தவராக இருந்தாலும் பழைய மாணவராக இருந்தால் கல்லூரி அதிபராக வருவதற்கு போதுமானது என்ற நிலையை பழைய மாணவர் சங்கம் உருவாக்குகின்றது.

முன்னர் உன்னதமான பெறுபேறுகளை உண்டாக்கிய கல்லூரிகள் இன்று வீழ்ச்சியடைந்து செல்வதற்கு பழைய மாண்வர் மனோபாவமும் ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

**பெரிய பாடசாலைகளோடு ஒப்பிடும் போது சிறிய பாட சாலைகள் கணிசமான சமூகப் பங்களிப்பை வழங்குகின்றன?**

அப்பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் ஒப்பீட்டளவில் சமூக நோக்கும் மனிதநேயமும் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். தாம் வாழும் சமூகத்தினதும் கிராமத்தினதும் மேம்பாடு பற்றி சிந்திக்கிறார்கள். சரியான முறையில் இவர்கள் வழிநடத்தப்படுவார்களாயின் இவர்களிடமும் உயர்ந்த பெறுபேறுகளை உருவாக்க முடியும்.

பெரிய கல்லூரிகளில் கற்போர் சமூகத்தையும் நாட்டையும் விட்டு பெயர்ந்து செல்வது போல் கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் எண்ணுவது இல்லை. தமது கிராமத்தோடும் தமது கோயில்களோடும் தமது சுற்றத்தவர்களோடும் தொடர்ந்து வாழ்தலையே இவர்கள் விரும்புகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ப்புறக் கவர்ச்சியும் வேற்றுநாட்டு கவர்ச்சியும் பெரிய கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு இருத்தல் போன்று கிராமிய பாடசாலைகளில் படிப்பவர்களுக்கு இல்லை. இங்கு தான் உண்மையான மானிடப்படுத்தலைக் காண முடிகிறது. உயிர்ப்பான கல்விச் செயற்பாடுகளும் கிராமப் புறங்களை ஒட்டிய பாடசாலைகளில் தான் வலுவாக உள்ளது. பாடசாலை பண்பாடு சமூகம் தழுவிய கூறுகளை உள்வாங்கியவாறு வெளிப்பட்டு வருகின்றது.

***பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் கல்வியியல் ஆய்வுகள் பள்ளிக்கூடங்களின் கல்வித்தர மேம்பாட்டுக்கும் சமூகத்தின் மேம்பாட்டுக்கும் நேரடியான பங்களிப்பை செய்வதாகத் தெரியவில்லை?***

இங்கு மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் பரீட்சைக்குரியதான ஆய்வுகளாக இருக்கின்றனவேயன்றி சமூகத்துக்குரிய ஆய்வுகளாக இல்லை. புள்ளியியல் உபாயங்களை பயன்படுத்தி இருக்கின்ற நியாயங்களை பாதுகாக்கின்றன வேயன்றி அல்லது அதற்கு மேல் இவர்களால் பாய முடியாதுள்ளது. மேலும் புள்ளிவிபரவியல் ஆய்வுதான் ஒரேயொரு ஆய்வு என்று எண்ணுகின்றார்கள். கல்வி வளர்ச்சிக்கு வேண்டப்படும் பிரயோக ஆய்வு, இனவரைபியல் ஆய்வு, கோட்பாட்டு ஆய்வு முதலியவை இவர்களால் முன்னெடுக்கப்படுவது இல்லை.

வினாக்கொத்துகளை கொடுத்தலும் துலங்கலை திரட்டலும் இவற்றை எளிமை யான புள்ளிவிபரவியல் அடிப்படையில் விளக்குவது தான் ஆய்வு என்று நினைக் கிறார்கள். இவற்றுக்குத்தான் பட்டங்களும் வெகுமதிகளும் வழங்கப்படுகின்றன.

பெருமளவிலான நேரவிரயத்தைக் கொண்ட ஆய்வுகளினால் சமூகத் துக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கப்பெறுதல் இல்லை. பட்டம் ஒன்றை இலகுவாகவும் சுலபமாகவும் பெறுதலைப் பற்றி சிந்திக்கிறார்களே அன்றி சமூக நோக்கமும் சமூக தர்மமும் இவர்களிடையே வறிதாகவே காணப்படுகிறது.

M.Ed, M.pil முதலான பட்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க தம்மைப் பற்றி கரிசனை பெறுகிறார்கள் அன்றி கல்விச் சமூகத்தை முன்னேற்றும் கரிசனை குன்றியவர்களாக காணப்படுகின்றனர். M.Ed, பட்டம் பெறுவது இன்று ஒரு எழுகோலமாக மாறியுள்ளது. ஒரு மேட்டுப்படிப்பாக இது இருக்கிறதேயன்றி வாண்மைப் பயிற்சியற்ற வாண்மையில் இருந்து விலகிச் செல்லும் பயிற்சியாகவே இருக்கிறது.

மருத்துவம், பொறியியல் போன்ற வாண்மைத்துவ தொழில்கள் முதுபட்டப் படிப்புகள் செயல்முறைப் பயிற்சிகளுடன் இணைந்துள்ளன. ஆனால் M.Ed, பட்டப் படிப்பு ஏட்டுப்படிப்பில் தான் தங்க வைக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய விமரிசனங்கள் சிங்கள/ ஆங்கில இதழ்களில் முன்வைக் கப்படுகின்றன. ஆனால் M.Ed தொடர்பான தரமும் வாண்மை நிலை தொடர்பான விமரிசனங்கள் தமிழ் இதழ்களில் முன்வைக்கப்படுவதாக இல்லை. தமிழ்ச் சூழலில் உருவான கல்வியியலாளர்கள் சமூகம் தழுவிய சமூக மேம்பாட்டுக்கு உதவக் கூடிய கல்விப் பிரச்சினைகளை ஆய்வுப் பொருளாகக் கொண்டு ஆய்வு செய்யும் மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளாதவர்களாகத்தான் பெரும்பாலோர் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆசிரியர் அதிபர் சேவைகள் "கந்த"லாகிப் போகுமா?

■ அன்பு ஜவஹர்ஷா

9

2008.10.06 அன்று ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடக்கம் புதிய ஆசிரியர் சேவை தொடர்பாக பல்வேறு ஆக்கங்கள் கட்டுரையாளரால் எழுதப்பட்டுள்ளது. கல்வி அமைச்சு 40 பக்கங்களுக்கு மேல் தகவல்களைக் கொண்ட புதிய பிரமாணக் குறிப்பின் விடயங்களை வெளியிட்டிருந்தது. பின்னர் திருத்தப்பட்ட பிரமாணக் குறிப்பையும் இணையத்தளத்தில் வெளியிட்டது. இன்றும் அதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. புதிய ஆசிரியர் சேவை, அதிபர் சேவையென்று ஆசிரியம், தினக்குரல், வீரகேசரி, தினகரன் ஆகிய ஊடகங்களில் பல ஆக்கங் களை எழுதி ஆசிரியர்கள் அதிபர்கள் இடையே எதிர்பார்ப்பை எண்டாக்கிய கடந்த 6 ஆண்டு காலமாக அவை சாத்தியமாகாமையால் குற்ற உணர்வொன்று எனக்குள் உள்ளது.

இவைகள் எல்லாவற்றையும் விட இந்த பிரமாணக் குறிப்புக்குரிய சம்பளத் திட்டத்தையும் இணைப்பாக வழங்கும் முறையையும் கொண்ட 06/2006 (VIII) இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையும் வெளியிடப்பட்டிருந்தது. இந்த இரண்டு வரைபுகைளயும் சுற்றிக்கைகளை யும் கொண்டே முதல் பந்தியில் சொல்லப்பட்ட ஆக்கங்கள் வெளியிடப் பட்டன. சகலதையும் உறுதி செய்த மேல் குறிப்பிடப்பட்ட 06/2006 (VIII) இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 2010.01.05 அன்று வெளியிடப்பட்டது.

புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பொன்று தொடர்பான ஆசிரியர் சங்கங்களுடனான கலந்துரையாடலொன்று ஏப்ரல் ஏழாம் திகதி சிரேஷ்ட அமைச்சரின் செயலாளர் காரியாலயத்தில் நடைபெற்றது. கல்விச் சேவைகள் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள புதிய குழுவில் தாபன பணிப்பாளர் நாயகம், சம்பள ஆணைக்குழு செயலாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட இறுதித் தீர்மானம் எடுக்கக்கூடிய பல அதிகாரிகள் இடம்பெற்றிருக்கிறார்கள். இவர்களின் கலந்துரையாடலில் பிரதான ஆசிரியர் தொழில் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பின் போது புதிய ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பானது வரிக்கு வரி வாசிக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டது.

கட்டுரையாளர்
ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியத்துவம் கல்வி சார்ந்து பல்வேறு கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சம்பளத் திட்டமே இப்பிரமாணக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 3-1, 3-11 வகுப்புகளுக்கு 13410 - 145x6-180x7-215x1-15755ரூபா என்ற சம்பளத் திட்டமுடன், 2-11, 2-1, 1 வகுப்புத்தரங்களுக்கு 16100 - 240x5 - 330x5-400x7-645x20-34650 என்ற சம்பளத் திட்டமும் இந்த புதிய பிரமாணக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டின் இந்த சம்பளத் திட்டம் 2014 ஆம் ஆண்டுக்கு எந்த வகையிலும் பொருத்தமானதல்ல என இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட பிரதான சங்கங்கள் இதை முழுமையாக இந்தச் சந்திப்பின் போது நிராகரித்தன.

முன்னைய வரைபில் இருந்த சிறப்புத் தரத்தை ஆரம்பம் முதலே பிரதான ஆசிரியர் தொழிற்சங்கங்கள் எதிர்த்து வந்தன. 06/2006 (VIII) இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையில் உள்ள அந்த சிறப்புத் தரத்திற்கான சம்பளத் திட்டமானது பின்வருமாறுள்ளது.

ரூபா 22100-645x11-790x13-39465 என்றவாறு இருந்த சம்பளத் திட்டமும் சிறப்புத்தர படியும் புதிய வரைபில் நீக்கப்பட்டுள்ளது. கல்வி நிர்வாக சேவையின் இரண்டாம் வகுப்பு வருடாந்த சம்பள உயர்ச்சியான 790 ரூபா சம்பள உயர்ச்சி இதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஆனால் ஏப்ரல் ஏழாம் திகதி கலந்துரையாடலில் இது நீக்கப்பட்ட பிரமாணக் குறிப்பே கலந்துரை யாடப்பட்டது. ஆசிரியர் சங்கத்தின் எதிர்ப்பை தமக்குச் சார்பாக பயன்படுத்திக் கொண்ட அதிகாரிகள் முதலாம் வகுப்பு ஆசிரியர்களுக்கு கிடைக்கவிருந்த பதவி உயர்வையும் 790 ரூபா வருடாந்த சம்பள உயர்ச்சியை இல்லாமல் செய்துவிட்டார்கள். சிறப்புத் தரத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்த சில தொழில் சங்கங்கள் சாதித்து விட்டதாக நினைத்தாலும் பெரும் பாதிப்பொன்று உண்டாகியுள்ளதை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

முன்னைய வரைபில் சிறப்புத் தரத்தில் பெரும்பாலும் ஆசிரியர் ஆலோச கர்கள் உள்ளீர்ப்பு செய்யப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டு இருந்தாலும் முதலாம் வகுப்பு ஆசிரியர்களுக்கும் அப்பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பி ருந்தது. சிறப்புத் தரத்தில் 3,379 ஆசிரியர் ஆலோசகர்களும் 9,295 சிரேட்ட ஆசிரியர்களும் உள்ளீர்ப்புச் செய்யப்படவும் பதவி உயர்வு பெறவும் முன்னைய வரைபில் வாய்ப்பு இருந்தது.

சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்படும் பின்வரும் வகையினரான ஆசிரியர்களின் சம்பளம் 06/2006 (VIII) இலக்க சுற்றறிக்கையில் பின்வருமாறு இருந்தது.

| வகை | சம்பளம் |
|---|---|
| டிப்ளோமாதாரிகள் | 14,280/- |
| பயிற்றப்பட்டவர்கள் | 14,640/- |
| பட்டதாரிகள் | 15,540/- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஏழாம் திகதி விளக்கப்பட்ட வரைபில் அது பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

| வகை | சம்பளம் |
|---|---|
| டிப்ளோமாதாரிகள் | 14,280/- |
| பயிற்றப்பட்டவர்கள் | 15,000/- |
| பட்டதாரிகள் | 15,540/- |

இதில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் ஆரம்ப சம்பளமானது இரண்டுபடி நிலையால் அதாவது 360 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. 06/2006 (VIII) இலக்க சுற்றறிக்கையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கும் இடையே இருந்த 5 படிநிலைகள் வித்தியாசம் இப்புதிய குறிப்பில் 3 படிநிலைகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. இரண்டு குறிப்புகளிலும் பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம் 15, 540 ரூபாவாக இருந்தாலும், பட்டதாரி ஆசிரியர் சங்கங்கள் முன் இருந்த 5 படிநிலை இடைவெளியை கோரி நிற்கின்றன.

06/2006 (VIII) இலக்க சுற்றறிக்கையின் சம்பள உள்ளீர்ப்பில் 2-11, 2-1, 1 வகுப்புத் தரங்களில் பயிற்றப்பட்ட, பட்டதாரி, டிப்ளோமா பட்டதாரி, முதுநிலை பட்டதாரி என நான்கு சம்பள நிலைகள் இருந்தன.

புதிய குறிப்பில் 2-11 தரத்தில் மட்டுமே இது காட்டப்பட்டுள்ளது. 2-1, 1 ஆம் வகுப்புகளில் இது காட்டப்படவில்லை. ஆகவே இங்கு ஒரு முரண்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

புதிய பிரமாணக் குறிப்பானது ஆசிரியர்களின் கல்வித் தகைமையையும் தொழில் தகைமையையும் அதிகரித்து விரைவில் பதவி உயர்வு பெற வழி செய்யும் என்று சொல்லப்பட்டது. சகல ஆசிரியர்களும் பட்டதாரி ஆசிரியர்களாக ஆக்க ஊக்குவிக்கும் வழிவகைகள் உள்ளதாக ஆரம்பம் முதலே கூறப்பட்டது.

அதேபோல முன்னர் வெளியிடப்பட்ட வரைபுகளிலும் சுற்றறிக்கையிலும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பலவித சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் ஏழாம் திகதி கலந்துரையாடல் தொடர்பாக பட்டதாரி ஆசிரியர் சங்கங்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளன. முன்னர் வெளியிடப்பட்ட 06/2006 (VIII) இலக்க சுற்றறிக்கையில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள நிலை உட்பட பல்வேறு ஊக்குவிப்புகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதாக இந்த சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன. அத்தோடு இதைத் தயாரித்த குழுச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் தொடர்பாக விரிவாக விளக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

கல்வி முதுமாணி பட்டதாரிகளுக்கு மட்டுமே விசேட சம்பளப்படி 2-11 வகுப்புத் தரத்தில் உள்ளது. மற்றைய பாட ரீதியான முதுமாணி பட்டதாரிகளுக்கு எந்தவித ஊக்குவிப்புகளும் இல்லை என இந்தச் சங்கங்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளன.

பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கும் கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கும் 2ஆம், 3ஆம் படி நிலைகள் இருந்தன. புதிய திட்டத்தில் இருபாலாரும் ஒரே சம்பளத் திட்டத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள். இதுவும் ஒரு குறைபாடாகவே காட்டப்பட்டுள்ளது.

சகல வகுப்பு தரங்களிலும் தடை தாண்டல் எல்லையும் (E.B) கால வரையறையும் உண்டு. இது தொடர்பாக விளக்கம் இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளரால் கோரப்பட்டது. முதலாம் வகுப்பு செல்லும் ஒரு ஆசிரியர் 24 ஒப்படைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டபோது இதை மதிப்பீடு செய்வது யார் என்பது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

1994.10.06 தொடக்கம் செயற்பட்ட பிரமாணக் குறிப்பில் நிலையியல் குழுவொன்று இருந்தது. ஆசிரியர் சேவை தொடர்பாக உண்டாகும் பிரச்சினைகளை இதன் மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. இக்குழு நியமிக்கப்படவும் செயற்படவும் இல்லையென்றாலும் சட்ட ரீதியான ஏற்பாடு ஒன்று இருந்தது. ஆனால் தற்போது சமர்ப்பிக்கப்பட்ட வரைபில் இப்படியொரு ஏற்பாடு இல்லை. சகலவற்றுக்கும் அரச சேவை ஆணைக்குழுவை நாட வேண்டி இருக்கும்.

3-1 தரத்தில் இருக்கும் ஆசிரியர் 1 ஆம் வகுப்பை அடைய 20 புள்ளிகள் போதுமானதாக இருந்தது. ஆனால் புதிய திட்டப்படி இது 21 புள்ளியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தொழிற்சங்கங்கள் முறைப்பாடு தெரிவித்தபோது தெளிவான பதில் எதுவும் கலந்துரையாடலில் சொல்லப்படவில்லையாம்.

புதிய பிரமாணக் குறிப்புக்கான உள்ளீர்ப்புத் திகதி 06/2006 (VIII) இலக்க சுற்றறிக்கையில் 2008.07.01 ஆக இருந்தது. தற்போது அது 2011.01.01 என சொல்லப்பட்டது. இதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. 2010.12.31 வரை பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளமையால் இத்திகதி 2011.01.01 ஆகவே இருக்கும் என்பது அதிகாரிகளின் வாதமாக இருந்தது. 2009.11.13 தொடக்கம் நியமிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான அதிபர் நியமனம் பெற்றவர்கள் இந்தத் திகதி மாற்றத்தால் பாதிக்கப்படுவார்கள்.

சம்பள நிலுவையானது 2011.01.01 தொடக்கமே வழங்கப்படும் என இந்தக் குழு தெளிவாக தெரிவித்தது.

உச்ச நீதிமன்றம் 2008.10.06 அன்று வழங்கிய தீர்ப்பில் மேலதிகமாக சம்பள படியேற்றமொன்றை வழங்குமாறு தீர்ப்பு சொல்லியிருந்தது. புதிய ஆலோசனையில் அது உள்ளடக்கப்படவில்லை என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரித கதியில் பதவி உயர்வு பெறும் முறைகள் சகல அரசாங்க சேவைகளுக்கும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளதால் ஆசிரியர் சேவைக்கும் இம்முறை அமுல் நடத்தப்படமாட்டாது எனக் கலந்துரையாடலில் உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது. ஆகவே 12 வருடத்தில் முதுமாணி பட்டதாரிகள் பரீட்சை எழுதி முதலாம் வகுப்புக்கு செல்லலாம் என்ற எதிர்பார்ப்பு புஸ்வாணமாகியுள்ளது.

சுமார் நான்கு மணித்தியாலம் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் புதிய வரைபின் பிரதி எழுத்து மூலம் தொழிற் சங்கங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதிகாரிகள் பொத்தி வைத்துக்கொண்டு வாசித்து சொல்லப்பட்ட சில சிறு திருத்தங்களை குறித்துக் கொண்டார்கள்.

இப்படி பொறுப்பான தீர்மானம் எடுக்கக்கூடிய அதிகாரிகள் கலந்துகொண்டு நீண்டநேரம் கலந்துரையாடிய நிகழ்வுகள் அபூர்வமான தாகும். சம்பளம் முறைகள் தொடர்பாக தொழிற்சங்கங்களின் அபிப்பிராயங்கள் பெரும்பாலும் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. ஏனென்றால் இது தொடர்பாக இறுதித் தீர்மானமொன்றை எடுத்த பின்னரே இப்படியான கலந்துரையாடல்களை நடத்துவார்கள். அந்த அடிப்படையை வைத்துக் கொண்டே புதிய பிரமாணக் குறிப்பை வரைந்துள்ளார்கள்.

ஆகவே சம்பள முறைகளில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. ஆனால் உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின்படியிலான மேலதிக சம்பளமாற்றமொன்றை வழங்க வேண்டியத கட்டாயமானதாகும்.

ஏப்ரல் 14ஆம் திகதிக்கு முன்னா இறுதி ஆலோசனைகளைத் தருமாறும் 21 ஆம் திகதி பூரணப்படுத்தப்பட்ட பிரமாணக் குறிப்பு அரச சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் என்றும் கால அட்டவணையொன்று வார அடிப்படையில் சொல்லப்பட்டது.

மீண்டும் ஒரு மாதத்திற்குப் பின்னர் மே ஏழாம் திகதி இதேபோன்ற கலந்துரையாடலொன்று நடைபெற்றது. சிறு மாற்றங்களுடன் அதே விடயத்தை மடிஹேவா குழுவானது வைத்து கலந்துரையாடியது சம்பளம் தொடர்பாக தாங்கள் தீர்மானமொன்றை எடுக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் தான் இக்குழு இருந்தது.

புதிய பிரமாணக் குறிப்பு 2008.07.01 தொடக்கமே ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஆசிரியர் சங்கங்களின் நிலைப்பாடாகும். தடை தாண்டல் (E.B) தொடர்பாக தெளிவான, திறந்த தகுதியான ஆளணியினரைக் கொண்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஆசிரியர் சங்கங்கள் அழுத்தமாக வலியுறுத்தின. கடந்த நான்கு வருட காலமாக வழங்கப்படாதுள்ள பதவி உயர்வு தொடர்பாகவும் ஆசிரியர் தொழில் சங்கங்கள் கோரிக்கைகளை முன்வைத்தன.

இலங்கை அதிபர் சேவை தொடர்பாகவும் மே மாதம் நான்காம் திகதி கலந்துரையாடலொன்று நடைபெற்றது. அதிபர் சேவைக்கான ஆட்சேர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் வகுப்பில் மட்டுமே நடைபெற வேண்டும் எனவும் சேவையில் உள்ளவர்கள் இரண்டாம் வகுப்புக்கும் முறையே முதலாம் வகுப்புக்கும் உரிய கால எல்லையையும், நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னர் பதவி உயர்த்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. புதிய சேவையில் 1,2,3 என மூன்று வகுப்புக்களே இருக்கும் எனவும், தற்போது இச்சேவையில் இருப்பவர்கள் இவ்வகுப்புகளுக்கு உள்ளீர்ப்பு செய்யப்படுவார்கள் என்றும் விளக்கப்பட்டது.

ஆசிரியர் சேவை அதிபர் சேவை தொடர்பான புதிய வரைபு பிரதிகளை தருமாறு ஆசிரியர், அதிபர் சங்கங்கள் கோரிக்கை விடுத்தாலும் அவை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்ட பின்னரே தொழில் சங்கங்கள் இடம் ஒப்படைக்கப்படும் என திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டது.

மேல்சொல்லப்பட்ட மூன்று கலந்துரையாடல்களிலும் கலந்து கொண்ட பெரும்பாலான தொழில்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்து என்னவென்றால் இந்த உயர்மட்டக் குழு உறுப்பினர்களுக்கு இச்சேவைகள் தொடர்பாக முன்னறிவு இருக்கவில்லை என்பதாகும். எப்படியாவது இதை முடித்து ஒப்படைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில்தான் இக்குழுவின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

1994.10.06 தொடக்கம் செயல்படுத்தப்பட்ட ஆசிரியராக சேவை பிரமாணக் குறிப்பினதும் 1997.01.01 தொடக்கம் மாற்றியமைக்கப்பட்ட பிரமாணக் குறிப்பினதும், குறைபாடுகளை நீக்கவே கோரிக்கைகள் விடுக்கப்பட்டு போராட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன. 20 வருடங்களின் பின்னரும் "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற கதையே தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. நியமிக்கப்பட்ட எத்தனையோ குழுக்களின் அறிக்கைகள் கிடப்பில் கிடக்கின்றது. இரண்டு பாலார்களும் ஒரு எல்லையைத் தொடாத வகையிலேயே செயற்பாடுகள் தொடர்கின்றன. ஆகவேதான் மீண்டும் கந்தலாகிப் போகுமா என்ற தலைப்பு இடவேண்டியதாயிற்று.

ஆசிரிய ஆலோசகர்களுக்கு புதிய சேவையொன்று உருவாக்கப் படவுள்ளதால் ஆசிரியர், அதிபர் சேவைகளோடு சம்பள சேவை முரண்பாடு ஒன்று உண்டாக இடமுள்ளது. ஆசிரியர் ஆலோசகர்களாக முதலாம் வகுப்பு ஆசிரியர்களோடு பெரும் எண்ணிக்கையான 3-1, 2-11, 2-1 தர ஆசிரியர்களும் கடமையாற்றி வருகின்றார்கள். 2-1, 1ஆம் வகுப்பு ஆசிரியர்களினதும் சம்பளத்தை விடப் புதிய ஆசிரியர் ஆலோசகர் சேவை சம்பளமானது அதிகரிக்கப்படுமானால் புதிய முரண்பாடு ஒன்று தோன்றும்.

புதிய கல்வி நிருவாக சேவையின் வரைபிலும் 25,45,30 என்ற வீதம் 50, 30, 20 என்று மாற்றப்படவுள்ளது. இதிலும் ஆசிரியர் அதிபர்களுக்குள்ள பதவி உயர்வு வாய்ப்புக்கள் குறையப் போகின்றன. உள்ள பிரச்சனைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வு காணாமல் தேவையற்ற பிரச்சனைகளை உருவாக்கவே கல்வி அமைச்சு அதிகாரிகளை முயன்று வருகின்றார்கள்.



தற்போது உள்ள சுற்றறிக்கைகளுக்கும் பரஸ்பரமான விளக்கங்கள் கல்வியமைச்சால் வழங்கப்படுவதால் மாகாண, வலயக் கல்விக் காரியாலயங்கள் முடிவு எடுக்க முடியாமல் தடுமாறுகின்றன.

பயன்தரு பாடசாலையும், முழுமையான கல்வி வளர்ச்சியும் யாரின் பங்களிப்பில் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து அவர்களின் பிரச்சனைகள் தீர்க்க சாத்தியமான வழிவகைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

**33ஆம் பக்... தொடர்ச்சி**

இதிலிருந்து வளமான நாடுகள் பிள்ளைகளின் கல்வியில்கூடிய கவனமெடுத்து வளங்களை சமமாக பங்கிட்டு எல்லோரும் கல்வியில் தேர்ச்சி அடைவதில் அக்கறை செலுத்துகின்றனர். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகள் வளப்பற்றாக்குறையினால் சமமற்ற முறையில் வளங்களை பங்கிட்டு பாராபட்சம் காட்டுவதால் ஒரு பகுதியினர் தேர்ச்சியடைய மற்றொரு பகுதியினர் தேர்ச்சிபெற முடியாதவர்களாகின்றனர்.

ஒரு பிள்ளையின் வளர்ச்சிக்கு தேவையான வசதிகளும் வாய்ப்புக்களும் வழங்கப்படும் போது அப்பிள்ளை தன்னிடமுள்ள ஆற்றல்களை வெளிக்கொணரவும் சமூகத்திற்கு உகந்த பிள்ளையாக மாறவும் வாய்ப்பு ஏற்படும். ஒரு பிள்ளை எங்கு பிறக்கின்றது என்பது முக்கியமல்ல அப்பிள்ளை வளர்ந்து வரும் போது போதியளவு கல்வி வாய்ப்புக்களை பாராபட்சமின்றி வழங்கப்படின் கிராமங்களிலுள்ள பிள்ளையும் சமூகத்தில் தன்னை முன்னிலைப்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

ஆனால் இந்நாட்டில் உருவாக்கப்படும் பிரஜைகள் சமநிலை ஆளுமை கொண்டவர்களாக, எதிர்காலத்தில் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாக உருவாக்கப்பட வேண்டும் என்ற எமது நாட்டின் கல்விக் கொள்கை எல்லோருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கப்படாததால் நிறைவு செய்யப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

# இன்றைய பாடசாலைக் கல்வியில் மாணவர் போக்கும் ஆசிரியர்களின் வகிபங்கும்

■ எஸ்.எல்.மன்சூர்

எதிர்காலத் திட்டமிடலில் சீனா எந்த இடத்திலுள்ளது என்பதற்கு பின்வரும் விடயமானது நல்ல உதாரணமாகும். அதாவது கண்டுபிடிப்புகளுக்குப் பெயர்பெற்ற சீனா குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காகக் கொண்டு வந்துள்ள ஒரு புதிய திட்டமே சீனா விசன் 2050 என்ற தொலைநோக்குத் திட்டமாகும். இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2010ஆம் ஆண்டிலிருந்து பிறந்த குழந்தைகளை ஆரோக்கியத்தில், கல்வியில் சிறந்தவர்களாக வளர்க்க நுணுக்கமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. அதில் ஒன்று, குழந்தைகள் சரியான தூரத்தில் வைத்துப் படிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள கருவி. இந்தக் கருவியின் உதவியுடன் படிக்கும் குழந்தைகளுக்கு கண் பார்வை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படாதாம். இப்படிப் படிக்கும் குழந்தைகள் 20 வயதினை அடையும்போது கண்பார்வைக் குறைபாடு இல்லாத இளைய சமுதாயத்தைச் சீனா பெற்றிருக்கும். வருங்கால சந்ததியினரை மனதில் வைத்து, இதுபோன்ற பல திட்டங்களைச் சீனா செயல்படுத்த உள்ளது.

நமது எதிர்காலச் சிந்தனைகளில் நம்மில் எத்தனைபேர் இதுவரை பேசும்படியாக ஏதாவது செய்துள்ளோமா என்றால் அது கேள்விக்குறியாகவே உள்ளது. நமது இன்றைய பாடசாலைகளில் காணப்படுகின்ற மாணவர்களை சிறந்த கல்வியின் ஊடாக நற்பிரஜைகளாக்க முனைந்துள்ள எமது கல்விச் சிந்தனைகளில் எவற்றையாவது ஒழுங்குமுறையுடன் மேற்கொண்டு வந்திருக்கிறோமா? அல்லது அரசு முன்வைத்திருக்கின்ற தேசிய குறிக்கோள்களின் அடிப்படையிலான கற்றல் செயற்பாடுகளை முழுமையாக மாணவர்கள் அடைந்து கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கிறோமா? அல்லது அடிப்படைத் தேர்ச்சிகளிலாவது முழுமையான பங்களிப்பினை மனநிறைவோடு மேற்கொண்டு வந்திருக்கிறோமா? எல்லாமே அறைகுறையோடு முடிந்த கதையாகவே இருக்கிறது. தேசிய கல்வி முறைமைக்கான இலக்குகளை உள்வாங்கி மாணவர்களை வளர்த்தெடுத்தெடுத்திருக்கிறோமா?

உதாரணத்திற்கு ஒரு சம்பவம். அண்மையில் ஒரு பாடசாலைக்குச் சென்றபோது அந்தப் பாடசாலையில். ஐந்து வகுப்புக்களிலும் ஐந்து

கட்டுரையாளர்

கல்வியியல் தொடர்பில் தொடர்ந்து கட்டுரைகள் ஆய்வுகள் மேற்கொண்டு வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் காணப்பட்டனர். ஆனால் ஒவ்வொரு வகுப்பிலும் பத்துக்குட்பட்ட மாணவர்களே கற்றலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பொதுவாகவே அந்தப் பள்ளியில் மாணவர்களின் தொகை குறைவானதாகும். ஏனெனில் விவசாயப் பிரதேசத்தை உள்வாங்கிய அந்தச் சூழலிலுள்ள பெற்றோர்களும் விவசாயிகள். கூலித்தொழிலாளிகள். தங்களுடைய குழந்தைகளின் கல்வியில் அக்கரைகொள்ளாமல் தானுண்டு தன்தொழில் உண்டு என்று உலாவுகின்றவர்கள். இந்நிலைமையிலும், அரசு அந்தப் பிரதேசத்து பிள்ளைகளும் கற்பதற்காக பாடசாலையைக் கட்டி ஆசிரியர்கள், அதிபரையும் வழங்கி, கல்விக் காரியாலத்திலிருந்தும் அடிக்கடி அதிகாரிகள் மேற்பார்வை செய்யப்பட்டு வந்திருந்தாலும் தரம் ஐந்தில் கற்கின்ற மாணவர்களில் பலருக்கு சரியாக எழுதவோ, வாசிக்கவோ முடியாத நிலையிலேதான் அந்த பாடசாலை மாணவர்கள் காணப்படுகின்றனர்.

பார்க்கின்றபோது ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். ஐந்து வருடங்களுக்கும் மேலாக சில ஆசிரியர்கள் அங்கு தொடர்ந்து கற்பித்துக் கொண்டு இருப்பவர்களும் உண்டு. மாற்றத்தைக் காணவில்லை. பயிற்சிக் கொப்பிகளில் எதுவும் இல்லை. கேட்டால் "வீட்டில் படிக்கிறார்கள் இல்லை. பெற்றோர் பாடசாலக்குள் எட்டிப்பார்ப்பதே இல்லை. இவர்கள் பாடசாலையில் மாத்திரம் படித்துவிட்டால் போதுமா என்ன? வீடுகளிலும் படித்தால்தானே ஏதாவது தெரியும். கொடுக்கின்ற பயிற்சிகளை செய்வதில்லை...இவ்வாறு மாணவர்கள் சார்பான குற்றச்சாட்டுக்கள் அதிகமாகவே கூறப்பட்டன. ஆனால் ஆசிரியர்கள் சார்பில் பார்த்தால் அங்கு நீண்டகாலமாக சேவையாற்றுகின்ற ஆசிரியர்களை நோட்டமிட்டால் அவர்களிடம் பாடத்திட்டம், பாடக்குறிப்பு, மாணவர்கள் பற்றிய தெளிவான அறிக்கை, மாணவர்களது சுயவிபரங்கள், கற்பித்தலுக்கான உபகரணப் பயன்பாடுகள், பரிகாரக் கற்றல் செயற்பாடுகள், கற்றலில் ஈடுபடுகின்ற நேரம் குறைவு, நேரம்பிந்து செல்வது, நேரத்தோடு வீடு திரும்புவது, மாணவர்களுக்கேற்ற கற்றல் முறைமைகளைப் பின்பற்றாமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களை ஆசிரியர்களது பக்கத்திலிருந்து காணலாம்.

அதேவேளை இப்பாடசாலையில் கற்பிக்கின்ற ஒருசில ஆசிரியர்களை அப்பிரதேசத்திலுள்ள எந்தப் பாடசாலையும் ஏற்றுக்கொள்ளாத நிலையில், இப்பாடசாலையிலாவது இவர்கள் ஏதாவது செய்யட்டும் என்கிற நிலமையிலுள்ள ஆசிரியர்களே இது போன்ற பாடசாலைகளில் நிரப்படுகின்றனர். இவர்களிடமிருந்து எதனை எதிர்பார்ப்பது. இவர்களிடமிருந்து மாணவர்களும், அந்தப் பின்னடைவான சமூகமும் எதனை எதிர்பார்க்கப் போகின்றது. மற்றொரு முறையில் கூறுவதானால் இதுபோன்ற ஆசிரியர்களுக்காகவே கட்டப்பட்டுள்ள பாடசாலைகளாகவே இதனைக் நினைக்க வேண்டியுள்ளது. சம்பளம் மட்டுமன்றி, தூரப்பிரதேசத்து மேலதிகப் கொடுப்பனவையும் பெற்று வருகின்ற இவர்களிடமிருந்து தேசிய கல்வி முறைமைக்கான இலக்குகளாக தேசியக் குறிக்கோளில் கூறப்படுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களில் எவற்றையாவது மாணவர்கள் அடைவதற்கான வழிகளையாவது எதிர்பார்க்கத்தான் முடியுமா?

தினைவிதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதுபோலவும், "If you have a lemon, Make a Lemonade" எனும் பழமொழியின் கருத்தாக அதாவது தங்களிடம் ஓர் எழுமிச்சம் பழம் இருப்பினும்அதிலிருந்து எழுமிச்சம்சாறு செய்யலாம் எனும் நம்பிக்கை. அவ்வாறு தொடங்கினால்தான் பின்னர் தோடம்பழச்சாறு பற்றியோ அல்லது பெரிய தொழிற்சாலை பற்றியோ சிந்திக்க முடியும். இதுபோன்றதுதான் நமது மாணவர்களினது கல்வியின் நிலைமையும். ஒரு பாடசாலையில் அந்த ஆசிரியர் ஆரம்ப வகுப்புக்களில் சரியான கற்றலை முறையாக வழங்காதபோது அந்த மாணவர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கின்ற அடைவினை பெறமுடியுமா? தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளியினை எதிர்பார்க்க முடியுமா?

ஐந்து வருடங்கள் சுமார் ஆயிரம் பாடசாலை நாட்களில் இந்த அந்த ஆசிரியரும், அந்த மாணவர்களும் சேர்ந்து எதனைச் சாதித்தார்கள். இறுதியில் எதுவுமேயின்றி இடைவிலகளும், அல்லது சாதாரணதரப்பரீட்சையில் தன்னுடைய மொழிப்பாடத்திலேனும் சாதாரண சித்தியடைந்து கொள்ளாமலே பாடசாலையை விட்டு விலகிச் செல்கின்ற மாணவர் கூட்டமொன்றில் இவர்களும் இணைந்து கொள்கின்றனர். அவர்கள் நாட்டில் உலாவந்து கொண்டிருக்கின்றனர். இவ்வாறு பிரச்சினைக்குரிய சந்ததி ஒன்றை பதினொரு வருடங்களாக பாடசாலைகளில் பயிற்சி வழங்கி உருவாக்கியிருக்கின்றோமே என்கிற விடயமாவது தெரிகின்றதா? அப்படியானால் நமது கல்விச் சிந்தனைகளும், நமது கல்வியறிக்கைகளும், நமது கற்பித்தல் முறைமைகளும் எங்கே போய்விட்டன. அனைவரும் சிந்திக்க வேண்டிய விடயம் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

பொதுவாகப் பார்க்குமிடத்து, ஒவ்வொரு மாணவனினதும் கற்றல் அளவானது நம்பிக்கை சார்ந்தாகவே அடித்தளமிடப்படுகின்றது. இந்த வகையில் இன்றைய நிலையில் பாடசாலைகள், பத்திரிகைகள், கல்வியியல்சார்ந்த அமைப்புக்கள், நிறுவனங்கள், சஞ்சிகைகள், போன்றன இதற்கான உந்துதல்களையும், உறுதுணையையும், பலமான நம்பிக்கையினையும் வழங்குவதில் பாரிய முயற்சி காட்டி வந்திருந்தாலும் மேற்கூறப்பட்ட பாடசாலைகளில் இந்த நம்பிக்கையை கட்டியெழுப்புவதிலுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கான வாய்ப்புக்கள் வசதிகளை யார் ஏற்படுத்துவது. அவ்வாறுதான் ஏற்படுத்தினாலும் நாம் நினைக்கின்றளவுக்கு அடைவினை பெற்றுக் கொள்ளவே முடியாத நிலையும் காணப்படுகின்றது. பொதுவாக இவ்வாறான சூழ்நிலைக்குள் இருந்து விடுதலை பெறவேண்டுமாக இருந்தால் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும், தியாக சிந்தனையும், எடுக்கின்ற சம்பளத்திற்காவது வேலை செய்கின்ற மனோநிலையில் மாற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படாதவரை மாற்றத்தை எதிர்பார்க்கவே முடியாது என்பதுதான் என் தாழ்மையான கருத்து.

கல்வியினை போதிக்கின்ற பாடசாலைகளாகட்டும், நிறுவனங்களாகட்டும், உலக மாற்றங்களுக்கு ஏற்ப இயைந்து கொடுக்கக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தலில் புதுப்புது திறன் விருத்திகள், கல்வியியல் முறையில் விசேட சீர்திருத்தங்கள் போன்றன உள்வாங்கப்பட்டு இயக்கத்திறன், ஆக்கத்திறன் அதிகரித்து வருகின்றமை நாமறிந்ததே. உலகில் மாத்திரமன்றி நமது நாட்டிலும் பாரிய மாற்றத்தை நோக்கியதாகவே கல்வித்திட்டம் காணப்படுகின்றது."இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்" என்கிற ரீதியில் மாணவர் சமுதாயத்தினை கல்வி அறிவில் முன்னேற்றுதல் எதிர்கால சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய ஆளுமையும் திறனும் கொண்டவர்களாக உருவாக்குதல், அவர்களை முழுமையான மனிதர்களாக்குதல் போன்ற பணிகளில் பாடசாலையானது மிகப் பெரிய வகிபங்கினைக் கொண்டுள்ளது. அது ஆசிரியர்களினது தலையின் சுமத்தப்பட்டுள்ளன என்பதை நாம் அறிவோம்.

பாடசாலைகளின் வகுப்பறையிலிருந்தே நற்பிரஜைகள் என்கிற அந்தஸ்துடைய மாணவர்களையும், நாளைய சிறந்த தலைவர்களையும் வளர்த்தெடுப்பதற்குரிய சிறந்த கற்றல் கற்பித்தல் முறைமைகளை ஆசிரியர்கள் சரியான முறையில் முன்னெடுக்கின்றபோது அது சாத்திய மாகும். ஆனால் இந்த நிலைமை மாற்றத்திற்குள்ளாகுமாக இருந்தால் நிலைமை தலைகீழாகவே மாறிவிடும். அப்படியானால் ஆசிரியரின் பணியானது மிகவும் முக்கியத்துவமிக்கதாகவே காணப்படுகின்றது.

"குழந்தையானது கேள்வி கேற்கின்ற போதுதான் மனிதன் தனக்கு எவ்வளவு குறைவாகத் தெரிந்திருக்கின்றது என்பதனை உணருகின்றனர்" என *Michael Block Fort* என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார் அதாவது இன்றைய நவீன உலகின் போக்குகள் அறிவுடைமைச் சமுகத்தை உருவாக்கியுள்ள நிலையில் பிள்ளைகள் பல்வேறு கோணங்களில் திறன்படைத்தவர்களாகக் காணப்படுகின்றனர். இதற்கு ஏற்றவகையில் முகங்கொடுக்கக் கூடியவர்களாக ஆசிரியர் சமூகமும் மாற்றமடைந்து காணப்படவேண்டும். அதற்குரிய தயார்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய நிலையும் உள்ளது. ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களை வெற்றி கொள்வது என்பது ஓர் இலகுவான காரியம் எனக்கூறிவிட முடியாது. ஒவ்வொருவரின் சிந்தனையும், செயற்பாடும், தொனியும் வெவ்வேறு குடும்பச் சூழலிலிருந்து வரும் வகையில் பரந்துபட்டதாகக் காணப்படுகின்றது.

அதாவது தரம் ஒன்றுக்குள் நுழையும் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு விதமான மனநிலையுடனேதான் காலடி எடுத்துவைக்கின்றனர். சிலமாணவர்கள் இயல்பூக்கம் கொண்டவர்களாகவும், சில மாணவர்கள் சாதாரன நிலையிலும் காணப்படுகின்றனர். சிலர் கூச்ச சுபாவம், அதீத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி, குறும்புத்தனம், அழுகை போன்ற பல மனப்பாங்குடன் காணப்படுவர். இந்நிலையில் ஒவ்வொருவரையும் அடையாளம் கண்டு அவரவர் நடத்தைக்கேற்பவும், மனநிலைக்கேற்பவும் அணுகி சமநிலைப்படுத்தும் திறன் ஆசிரியரிலேயே தங்கியுள்ளது. ஆசிரியரின் நடத்தைக் கோலங்களை மாணவர்களுக்கேற்ற விதமாக மாற்றியமைக்க வேண்டியதும் கட்டாயமாகும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கின்ற நற்பிரஜைகளைத் தோற்றம் பெறச் செய்யலாம்.

மாணவர்களின் இயலுமை, இயலாமையை கண்டறிந்து மாணவர்களின் தேவைக்கேற்ப கற்றல் முறைமைகளைக் கொண்டு கற்றலில் ஈடுபடுதல் அவசியமாகும். மாணவர்கள் ஆசிரியர் கற்பிக்கின்றபோது சுமார் 7 - 10 நிமிடங்களுக்குள் மாத்திரம்தான் கவனித்துக் கொண்டிருப்பான். அதன் பின்னர் அந்த மாணவரின் கவனம் வேறுபக்கமாகிவிடும். கவனத்தினை திசை திருப்பாத வண்ணம் ஒரு பாடத்தினுள் பல்வேறு கவர்ச்சியான உபகரணங் களைக் கொண்டு கற்பித்தலில் ஈடுபட்டு மாணவர்களின் அடைவினை மேம்படுத்துவதுடன் களிப்பூட்டும் இடமாக வகுப்பறைககள் காணப்படுதல் முக்கியமாகும்.

முன்னாள் முன்பள்ளிப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை பணிப்பாளர் கலாநிதி சுரணிமல அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறியிருந்தார். அதாவது "தமது வகுப்பறையில் ஆசிரியரானவர் கற்றல் கற்பித்தல் பணியினை ஒழுங்கு செய்து கொள்ளும் பொறுப்பு ஆசிரியர்களையே சாரும். ஆரம்பப்பிரிவு மாணவர்கள் ஆக்கச் சிந்தனையும், சமூகத்திறன்களும், ஆளுமைப் பண்புகளும் விருத்தியடைந்து இசைவடையும். எனவே, இவர்களுக்கான கற்றல் அனுபவங்களை திட்டமிட்டு செயற்படுத்துதல் வேண்டும். மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் பணிகளை ஒழுங்குபடுத்தும்போது மாணவர்களது சூழலை பொருளுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்கள் முயற்சி செய்தல் வேண்டும். வகுப்பறை பிள்ளை நேயமிக்கதாகவும் அமைந்திருக்க வேண்டும்" என்று கூறியிருந்தார்.

எனவே, இன்றைய ஆசிரியர்களின் வகிபங்கானது மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் பாரிய பங்கு வகிக்கின்றது. மாணவர் மையக் கற்றல் அமுலிலுள்ள இன்றைய வகுப்பறைகள் காட்சிப்படுத்தப்பட்டு கற்றலுக்கான சூழ்நிலைகளுக்குள் காணப்படுமாக இருந்தால் மேற்கூறப்பட்டுள்ள பாடசாலைகளில் பின்னடைவான மாணவர்கள் உருவாக்கப்படுவார்களா? ஆசிரியர்கள் நினைத்தால் எதனையும் சாதிக்கலாம். ஆனால் மாற்றம் வேண்டி நிற்கும் பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படுகின்ற பாடசாலை மாணவர்களும் இந்நாட்டின் பிரஜைகள் என்பதை உணர்ந்து சீரிய கல்வியினை சிறந்த முறையில் வழங்குவதற்குரிய வகிபங்கில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துகின்றபோது நாடும், கல்வியியலாளர்களும், சமுகமும் எதிர்பார்க்கின்ற நற்சமுகத்தை கட்டியெழுப்பலாம் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

# இலங்கையும்
# கல்விச் சமவாய்ப்பும்

■ சி.லோகராஜா

இலங்கையில் மட்டுமல்ல உலகம் முழுவதிலுமே "கல்வியில் சமவாய்ப்பு" எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கை முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகிறன. எனினும் எந்தவொரு நாட்டிலும் இன்னும் முழுமையான சமவாய்ப்புக்கள் வழங்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

ஆசிய நாடுகளுள் கல்வி வளர்ச்சியில் யப்பானுக்கு அடுத்ததாகக் குறிப்பிடப்படும் இலங்கை நீண்ட கால கல்வி வரலாற்றை கொண்டது. "அனைவருக்கும் கல்வி" என்பது எமது நாட்டின் நோக்கங்களில் ஒன்று. பிறப்பால் அனைவரும் சமம் ஆதலால் சகலருக்கும் கல்வியை வழங்குவது எமது நாட்டின் நோக்கமாக உள்ளது. மேலும் விசேட தேவையுள்ளவர்களுக்கு விசேட கல்வியை அளிப்பதன் மூலம் அனைவரையும் எதிர்கால உலகில் இயைபுற்று வாழ்வதற்குத் தகுதியான கல்வியினை வழங்குதலும் எமது நாட்டின் கல்வி நோக்கமாகும். இக்கல்வி 5 வயது தொடக்கம் 16 வயது வரையுள்ள பிள்ளை ஒவ்வொன்றிற்கும் பயன் நிறைந்த முறைமையான கல்வியைப் பெற்றுக்கொடுப்பது கல்வி அமைச்சின் திட்டமாகும். பாடசாலைக் கல்வியூடாக தேசியக் கல்வி இலக்குகளை அடைய கல்வி அமைச்சு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து செல்கிறது.

இலங்கைக் கல்விக் குறிக்கோள்களில் ஒன்று "இந்நாட்டில் உருவாக்கப்படும் பிரஜைகள் சமநிலை கொண்டவர்களாக எதிர்காலத்தின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல் பெற்றவர்களாக உருவாக்கப்பட வேண்டும்" என்பதாகும். இப்பண்பை வளர்க்க வேண்டுமாயின் ஒவ்வொரு பிரஜைக்கும் கல்வி கற்பதற்கு சமமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

1943ம் ஆண்டு இலங்கையின் கல்வி முறைமையிலிருந்த குறைபாடுகளையும் கட்டுப்பாடுகளையும் ஆராய்ந்து அறிக்கை வழங்கும்படி கலாநிதி. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களின் தலைமையில் கல்வி சிறப்புக் குழு அமைக்கப்பட்டது. குழுவின் தலைமைப் பொறுப்பை கன்னங்கரா அவர்கள் ஏற்றிருந்தமையால் அந்த அறிக்கை "கன்னங்கரா கல்விக் குழுவின் அறிக்கை" என்றும் குறிப்பிடப்படும். இச்சிறப்புக் குழுவின்

கட்டுரையாளர்
ஆசிரியராக மட்டக்களப்பு கொத்தியாபுலை கலைவாணி வித்தியாலயத்தில் பணிபுரிகின்றார்.

ஆசிரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிக்கை 1943ம் ஆண்டின் XXIV பருவப்பத்திரமாக வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையில் "அடிப்படை எழுத்தறிவும் கல்வியிலே சமசந்தர்ப்பமும் அவசியம்" என்பதை வலியுறுத்தியுள்ளது. பாலர் வகுப்பு தொடக்கம் பல்கலைக்கழகம் வரை கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

"தரமான சமூகத்திற்கு தரமான கல்வி" *(Quality Education for a Quality Society)* என்பது இலங்கைக் கல்வி அமைச்சின் கல்விக் கோட்பாடுகளில் ஒன்று "யாவருக்கும் கல்வி" "கட்டாயக் கல்வி" "வாழ்நாள் முழுவதும் கல்வி" என்ற பல கல்வி தொடர்பான கருத்துக்கள் கல்வி கோட்பாடுகளாக முன்வைக்கப்படுகிறது. "தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள்" *(Quality Teacher for Quality Education)* எனக் கல்வியின் தரம் ஆசிரியரின் தரத்திலேயே தங்கியுள்ளது என்பதும் உணரப்பட்ட விடயமாகவுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் மனித உரிமை பிரகடனத்தின் 26ம் சரத்து பின்வருமாறு கூறுகின்றது.

1. கல்வி கற்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. கல்வி இலவசமாய் இருத்தல் வேண்டும். குறைந்தது ஆரம்ப அடிப்படை நிலைகளிலேனும் அவ்வாறிருத்தல் வேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வியாய் இருத்தல் வேண்டும். கலைத்துறைக்கல்வியும், தொழில் முறைக்கல்வியும் பொதுவாக யாவருக்கும் கிடைக்கூடியனவாய் இருத்தல் வேண்டும். உயர்தரக் கல்வி திறமையை அடிப்படையாகக் கொண்டு எல்லோராலும் பெறக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

2. மனிதனின் தனிப் பண்பை பரிபூரணமாக வளர்க்கவும் மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் மதிக்கப்படுவதை உறுதிப்படுத்தவும் கல்வி பயன்படல் வேண்டும். நாட்டிற்குள்ளும், இனங்களுக்குள்ளும், மதங்களுக்குள்ளும் நல்லெண்ணம், சமரச மனப்பான்மை, நட்பு ஆகியவற்றை வளர்ப்பதோடு சமாதானத்தை நிலைநாட்டுவதில் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பணிகளுக்கு கல்வியானது உதவியாய் இருத்தல் வேண்டும்.

3. தங்களுடைய குழந்தைகளுக்கு எவ்விதமான கல்வி அளிக்கப்படல் வேண்டும் என்பதை தேர்வதற்கு பெற்றோருக்கே முதலுரிமை உண்டு.

இலங்கையின் அரசியல் யாப்பில் கல்விக்கான உரிமை பற்றி வெளிப்படையான முறையில் கூறப்படாத போதும் அரசியல் யாப்பின் 12 (1) வது சரத்து உறுப்புரிமையின் வாசகங்கள் கல்விக்கான உரிமையையும் உட்கிடையாக கொண்டுள்ளன எனச் சட்டவிளக்கம் தரப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் யாப்பின் 12 (1) வது சரத்து பின்வருமாறு கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சட்டத்தின் முன் ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாப்பதற்கு உரித்துடையவர்கள்"



இக்கூற்று எல்லோரும் ஒரே மாதிரியான உரிமைகளைப் பெற வேண்டியவர்கள் என்பதையும் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதையும் வெளிப்படுத்துவதாகவுள்ளது.

"வாழ்வதற்கான உரிமை" அடிப்படை உரிமைகளில் ஒன்றாக இந்திய அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் எமது யாப்பில் இது பற்றி வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை. (சுப்பிரமணியம்.அ.1952) மனிதன் பிறப்பு முதல் இவ்வுலகில் வாழ்வதற்கு தம்மை தயார் நிலைப்படுத்த அடிப்படை திறன்கள் வளர்க்கப்படல் அவசியம். குழந்தைகள் கல்வியின் மூலம் சில அடிப்படை திறன்களைப் பெறுகிறார்கள். அத்தகைய அடிப்படை திறன்களை பெறத்தவறும் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது வாழ்வதற்கு அவசியமான அடிப்படை திறன்கள் அற்றவர்களாகின்றார்கள். அதனால் கல்வியை மறுத்தல் வாழ்வதற்குரிய அவசியமான உரிமைகளை பறித்தலுக்கு நிகரானது. கல்வி பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. "அனைவருக்கும் கல்வி" என்பது வாழ்வதற்கான அறிவை அனைவருக்கும் வழங்குவதையே குறிப்பிடுகின்றது. எமது அரசியல் யாப்பில் கல்வி ஓர் அடிப்படை உரிமை என வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும் சர்வதேச சட்டங்கள் சுட்டிக்காட்டும் போது அதனை மதித்து ஒழுகும் கடப்பாடு எமது அரசுக்கு உண்டு.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினது அதன் பிற துணை நிறுவனங்களினதும் ஆவணங்களில் கல்விக்கான உரிமை பற்றிய பல விடயங்கள் எடுத்துக்கூறப்படுகின்றது. அவற்றுள் பிரதானமானதே மனித உரிமை பற்றிய சர்வதேச பிரகடனம் *(Universal Declaration of Human Rights)* ஆகும். இப்பிரகடனத்தின் படி ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வியைப் பெறும் உரிமை வழங்கப்பட்டிருப்பதுடன் ஆரம்பக் கல்வியை இலவசமாக வழங்க வேண்டுமென்பதும், ஆரம்பக் கல்வி கட்டாயமானது என்பதும் வெளிப்படையாக கூறப்படுகின்றது.

இலவசமாக எல்லோருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்பதை அகில உலக மனிதப் பிரகடனத்திற்கு முன்னரே 1945ல் கலாநிதி C.W.W கன்னங்கராவினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1943ம் ஆண்டின் XXIV பருவப்பத்திரத்தில் பின்வருமாறு அவா தெரிவித்திருந்தார்.

"அதிக செலவில் வழங்கப்பட்ட கல்வி இலவசமாக வழங்கப்படுவதற்கு திட்டமிடல் வேண்டும். மூடிய புத்தகமாக இருந்தவை திறந்த கடிதங்களாக மாற்றப்படல் வேண்டும். செல்வந்தர்களின் ஏகபோகமாக விளங்கிய கல்வி வறியவர்களின் வழிச்சொத்தாக வேண்டும்" (தேசிய அறிக்கை 2007 ஏப்பிரல்)



முதன் முதலில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்திய நாடாக எமது நாடு காணப்படுகிறது. இலவசக் கல்வியை தொடர்ந்து மாணவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை வலுப்படுத்த அவர்களது கற்றல் உரிமையை நிலைநிறுத்த அரசு இலவச புத்தகம் வழங்கல், இலவச சீருடை வழங்கல், இலவச உணவு வழங்கல், புலமைப்பரிசில் திட்டம் போன்ற பல செயற்றிட்டங்களையும் முன்வைத்து மாணவர்களின் கற்றலை உறுதிப்படுத்த அரசு முயற்சித்து வருகின்றது. கல்விக்கான உரிமை யாவருக்கும் உண்டு என்பதை மையமாகக் கொண்டு 5 -16 வயது வரை "கட்டாயக் கல்வி" சட்டமாக்கப்பட்டுள்ளமை முக்கிய விடயமாகும்.

சர்வதேச ரீதியாக 1924ம் ஆண்டு ஜெனிவா சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்ட போதும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் பின்னர் 1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அனைத்துலக மனிதப் பிரகடனத்தில் சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் மனித உரிமைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் போதியனவாக காணப்படாமையால் 1959ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாகியது. மேலும் சிறுவர் உரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் 1989ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிறுவர் உரிமைகள் மீதான சமவாயம் உருவாக்கப்பட்டது. இச்சமவாயத்தை 1991ம் ஆண்டு இலங்கை பின்னுறுதிப்படுத்தியதுடன் அதன் ஏற்பாடுகளை இலங்கையில் பயனுறச் செய்வதற்காக "சிறுவர் உரிமைப் பட்டயம்" என்பதனை உருவாக்கியது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் காணப்படுகின்ற சிறுவர்களுக்கான சில முக்கிய உரிமைகளை நோக்குவோமெனின் அதன் உறுப்புரிமை 02 இல் "இச்சமவாயத்தின் உரிமைகள் எல்லாப் பிள்ளைகளுக்கும் எவ்வேறுபாடுகளுமின்றி உறுதிப்படுத்தல் வேண்டும்". (அதாவது பால், மொழி, மதம், இனம் போன்ற வேறுபாடுகள்)

உறுப்புரிமை 28 இல் பின்வருமாறு விளக்கப்படுகின்றது. "கல்வி பயிலும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு. ஆரம்பக் கல்வி இலவசமாக வழங்கப்படல் வேண்டும். இலங்கையில் 14 வயதுக்குட்பட்டவர்கள் கட்டாயமாக கல்வி கற்க அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் குற்றம் புரிந்தவர்களாகக் கருதப்படுவர்". இலங்கை அரசியல் யாப்பின் அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளும் அடிப்படைக் கடமைகளும் என்ற அத்தியாயத்தின் உறுப்புரிமை (27)2 பின்வருமாறு கூறுகின்றது.

"எழுத்தறிவின்மையை முற்றாக இல்லாது ஒழித்தலும் சமத்துவமான கல்வி வாய்ப்புக்கான உரிமையை எல்லாப் பிரஜைகளுக்கும் உறுதிப்படுத்தலும் அரசின் கடமையாகும்".



உறுப்புரை 32 "பிள்ளையின் கல்விக்கு பாதிப்பான எத்தகைய வேலையிலிருந்தும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையின் 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயதிற்கு உட்பட்டவர்கள் எத்தகைய வேலைகளிலும் ஈடுபடுவதற்கு தடைசெய்யப்பட்டிருப்பதுடன் அவ்வாறு வேலைக்கமர்த்தும் தொழில் தருநர் குற்றம் புரிந்தவராவார்" என்றும் குறிப்பிடப்படுகின்றது.

எனவே இலங்கையில் கட்டாயக் கல்வியும், கல்வியில் சமவாய்ப்பு வழங்கலும் சட்டபூர்வமாக்கப்பட்ட விடயமாகும். எனினும் எல்லோருக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றதா? என்பது வினாக்குறியாகவே உள்ளது. நகர்புற மாணவர்களுக்கு கூடுதலான வசதி வாய்ப்புக்களும் கிராமப்புற மாணவர்களுக்கு குறைவான கல்வி வசதிகளும் வழங்கப்படுவது அவதானத்தின் மூலம் அறியப்படுகின்றது. படித்த சமூக சூழலைக் கொண்ட பிள்ளைகள் கூடுதலான வசதி வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள பாமர மக்களின் குழந்தைகள் கல்வி பயிலும் பாடசாலைகளில் வளம் குறைந்தவையாகக் காணப்படுகிறது. மற்றுமொரு முக்கிய விடயம் கூடிய வசதி வாய்ப்புக்களை அனுபவிக்கும் பிள்ளைகளின் பெறுபேறுகள் உயர்வானதாகவும் கிராமப் பிள்ளைகளின் அதாவது வசதி வாய்ப்புக்கள் குறைந்த பிள்ளைகளின் பெறுபேறுகள் அல்லது அடைவு மட்டம் குறைவானதாகவும் காணப்படுகின்றமை பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் வாயிலாக அறியமுடிகிறது.

2003ம் ஆண்டில் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் (NEREC) தரம் 4 மாணவர்களின் அடைவை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வொன்றை மேற்கொண்டது. கணிதம், தாய்மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான விசேட வினாத்தாள் தயாரிக்கப்பட்டு மாதிரித் தெரிவின் அடிப்படையில் மாணவர்களுக்கு வழங்கி ஆய்வொன்றை மேற்கொண்டது. இவ்வாய்வில் மாவட்ட, வலய மொழிமூலம், பால்நிலை மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன.

இவ்வாய்வில் 1AB வகைப் பாடசாலைகளின் அடைவுகள் உயர்வானதாகவும், 1C தரம், தரம் III வகைப் பாடசாலைகளின் அடைவுகள் இடைத்தரமானதாகவும் தரம் II வகைப் பாடசாலைகளின் அடைவுகள் குறைவானதாகவும் காணப்பட்டுள்ளது. அத்துடன் போதனா மொழி அடிப்படையில் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் கூடிய அடைவைக் காட்டின. இடவமைவு ரீதியாக நகரப் பாடசாலைகளும், மாகாண ரீதியாக மேல் மாகாணமும் எப்போதும் முன்னணியில் உள்ளமை அவதானிக்கப் பட்டது. (NEREC ஆய்வறிக்கை 2007 ஏப்பிரல்)

மேற்கூறப்பட்ட ஆய்வின் நோக்கம் "நாட்டிலுள்ள சகல பிள்ளைகளும் அடிப்படை கல்வி வாய்ப்பினை பெற்றுப் பூர்த்தி செய்வதனை உறுதிப்படுத்துவதன் மூலம் நியாயத்தன்மையை மேம்படுத்துல்" ஆகும்.

இவ்வாய்வின் பின் 2007 இல் தரம்8, தரம் 10 மாணவர்களுக்கான முதல் மொழி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கணிதம் ஆகிய பாடங்களில்





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுச்சோதனை நடாத்தப்பட்டது. அவ்வாய்வின் மூலமும் நகரப் பாடசாலையில் கூடிய அடைவு மட்டமும் கிராமப் பாடசாலைகளில் குறைந்த அடைவு மட்டமும் அவதானிக்கப்பட்டது. கொழும்பு மாவட்டம் சிறப்பாக செயலாற்றும் மாவட்டமாகவும் நுவரெலியா, திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்கள் பின்தங்கிய நிலையிலும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட ஆய்வு முடிவுகளை வெளியிட்ட NEREC நிறுவனம் மாணவர்களின் கற்றல் அடைவில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக பாடசாலைப் பின்னணி தொடர்பான முக்கியமான மறைநிலை மாறிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளது பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள பௌதிகவள, மனிதவள வசதிகள், கற்றல் ஒழுங்கு முறைகள், ஆசிரியரது பின்னணி, கண்காணிப்பும் மேற்பார்வையும், கற்பித்தல் முறைகள், மாணவர், பெற்றோர், அதிபர் ஆகியோருடன் வகுப்பாசிரியர்கள் கொண்டுள்ள இடைத்தாக்கம் போன்றவற்றுடன் பாடத்திட்டம், பாடநூல், ஆசிரியர் வழிகாட்டிகள் நூலக வசதிகள் என்பவையும் அதிபரின் தரம், அதிபரின் கல்வித்தகைமைகள், பகுதித் தலைவரின் கல்வித்தகைமைகள் என்பனவும் காரணங்களாக அமைவதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஒரு மாணவர் கல்வி கற்பதில் மகிழ்ச்சிகரமாக ஈடுபடுவதற்கு அவருக்கு வகுப்பறை வசதி, தளபாட வசதி, பொருத்தமான சூழல் உருவாக்கப்படுவது அவசியமாகும். அரசு கட்டிட வசதிகளை வழங்கும் போது இடத்திற்கிடம் வேறுபாடு காட்டுகின்றது. நகரப் பிரதேச பாடசாலைகளை நோக்குகின்ற போது அடைக்கப்பட்ட, மின் விசிறி பொருத்தப்பட்ட மின் இணைப்புகள் கொண்ட வகுப்பறைகளாக காணப்பட கிராமப்புற பாடசாலைகள் அடைக்கப்படாத, திறந்த வகுப்பறைகளாக காணப்படுகின்றன. வகுப்பறை வசதிகள் இல்லாத கிராம பாடசாலைகளும் இருக்கவே செய்கின்றன. தற்காலிக கொட்டில்கள், மரநிழல்கள், தாழ்வாரங்களின் கீழ் வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலைகள் கிராம பகுதிகளில் காணப்படுகின்றன. அவ்வாறான நிலைமைகளில் மாணவர்களின் கவனத்தை பாடத்தின் பால் ஈர்த்து கற்றலில் ஈடுபடுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இது பாடசாலைகள் மத்தியில் வேறுபாடு காட்டப்படுவதை உறுதிப்படுத்து கின்றது. பாடசாலைகளுக்கிடையில் கட்டிட வசதிகள் சமமாக பகிரப்படவில்லை என்பதையே இந்நிலைமை எடுத்துக்காட்டுகின்றது.

தளபாட வசதிகளை நோக்குகின்ற போது நகர்புற பாடசாலைகளில் மேல்மிகையாக தளபாடங்கள் இருக்க கிராமப்புற பாடசாலைகளில் தளபாட பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவே காணப்படுகின்றது. சில கிராமிய பாடசாலைகளில் மாவர்கள் தரையில் அமர்ந்து கல்வி கற்பதை காணமுடிகின்றது. உபகரணங்கள் வழங்குவதிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றது. பாடசாலை ஆவணங்களை பாதுகாப்பதற்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுமாரி கூட இல்லாத பாடசாலைகளும் இருக்கவே செய்கின்றன. ஆனால் வகுப்றை தோறும் நவீன அலுமாரிகள் வழங்கப்பட்டிருக்கும் நகரப் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் பாடசாலை தோறும் நவீன முறையில் அமைக்கப்பட்டிருக்கும். அங்கு விஞ்ஞான உபகரணங்கள், இரசாயன பொருட்கள், ஆய்வு கூட உபகரணங்கள் தாராளமாக காணப்படும். ஆனால் கிராமபுற பாடசாலைகளில் இத்தகைய வசதிகள் இல்லையென்றே கூறலாம். இதன் காரணமாக கிராமிய பாடசாலை மாணவர்கள் பரிசோதனை முறையில் செய்து பார்த்து கற்கும் வாய்ப்பை இழக்க வேண்டி இருக்கின்றது.

நகர் புற பாடசாலைகளில் கணினிகள் இல்லாத பாடசாலை இல்லையென்றே கூறலாம். ஆனால் நகர்புற மாணவர்கள் நவீன உலகிற்கு ஏற்ப தம்மை தயார்படுத்திக் கொள்வதுடன், சுயகற்றல், சுயதேடல் என்பவற்றின் மூலம் சுருங்கி வரும் உலகுடன் இலகுவாக தம்மை இயைபுபடுத்திக் கொள்கின்றனர். வீட்டுக்குவீடு கணினி என்ற நிலைமை நகரத்தில் காணப்பட கிராமபுறத்தில் கணினியை காணாத மாணவர்களே அதிகளவில் உள்ளனர் என்பது வருத்தமான உண்மையாகும். கிராமிய பாடசாலை மாணவர்களுக்கு கணினிக் கல்வி பெரும்பாலும் எட்டாக் கல்வியாகவே காணப்படுகின்றது. அதனால் கிராமிய மாணவர்கள் நகர பாடசாலை மாணவர்களை சந்திக்கும் போது தாழ்வுச்சிக்கலை வெளிப்படுத்துவதுடன், கற்றலிலும் பின்தங்கியவர்களாகவே காணப்படு கின்றனர். எனவே கூடுதலான பௌதிக வளங்களை கொண்ட பாடசாலை மாணவர்கள் கல்வியில் மேம்பட, பௌதிகவளம் குறைவாகப் உள்ள பாடசாலை மாணவர்கள் கற்றல் அடைவுகளில் பின்தங்கியிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். எனவே வளப்பங்கீட்டில் பாடசாலைகளுக் கிடையில் சமவாய்ப்பு வழங்கப்படுதல் அவசியமாகும்.

கற்றலுக்கு மிக முக்கியமான வளம் ஆசிரிய வளமாகும். உரிய பாடங்களில் அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற தரமான ஆசிரியர்கள் கற்பிக்கும் போது மாணவர்களின் கற்றலில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். நகர்ப்புற பாடசாலைகளை நோக்குகின்ற போது மேல் மிகையான ஆசிரியர்கள் குவிந்து காணப்பட, கிராமிய பாடசாலைகளில் உரிய பாடங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வழங்கப்படாமையும், ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் காணப்படுவதையும் அவதானிக்கலாம். உதாரணமாக 30 ஆசிரியர்கள் இருக்கவேண்டிய பாடசாலை ஒன்றுக்கு 18 ஆசிரியர்கள் மட்டுமே வழங்கப்பட்டால் அம் மாணவர்களின் கல்வி கற்கும் உரிமை பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. அதிகளவான பாடசாலைகளில் குறிப்பிட்ட பாடத்தில் பயிற்சி பெறாத ஆசிரியர்களினால் அப்பாடங்கள் கற்பிக்கப்படுவதையும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக கணித பாடமல்லாத ஒரு ஆசிரியர் அப்பாடத்தையும் கற்பிக்க வேண்டி இருக்கின்றது. அதனால் கல்வியின் தரம் குறைகின்றது. பெரும்பாலான கிராமிய பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு மற்றும் அழகியல் பாடங்களை அப்பாடங்களில் பயிற்சி பெறாத பிறிதொரு பாடத்திற்குரிய ஆசிரியர்களே கற்பிக்கின்றனர். இதனால் அப்பாடங்களுக்குரிய பூரணமான விடயங்கள் மாணவர்களைச் சென்றடைகின்றதா? என்பது பிரச்சினைக்குரிய ஒன்றாகவே காணப்படுகின்றது. இந்நிலைமைகள் அனைத்தும் பாடசாலைகளுக்கிடையில் சமவாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதையே சுட்டிநிற்கின்றன.

இருபத்தோராம் நூற்றாண்டிற்கான நவீன இலத்திரனியல் தொழிநுட்ப உலகை நோக்கிய பயணத்தில் இலங்கையும் முன்னேறிச் செல்கிறது. ஆதற்கேற்ப செயற்றிறன் வாய்ந்த கல்வியை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். 1998ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்த கல்வி முறையின் செயற்பாடுகள் பற்றி தேசிய கல்வி ஆணைக்குழு ஆராந்தபோது பல குறைபாடுகளைக் கண்டறிந்தது. ஆவற்றுள் சில பின்வருமாறு,

- சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு விளக்கம், செயற்றிறன்கள், மனப்பாங்குகளைக் கொண்ட மாணவர்களை கல்வி முறை உருவாக்கத் தவறிவிட்டது.
- ஆக்கத்திறன் சுயதூண்டல், ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத்தன்மை, நாட்டுப்பற்று, புரிந்துணர்வு என்பனவற்றையும் மற்றும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட பூரண ஆளுமை விருத்தியை மாணவர்களில் ஏற்படுத்த தவறிவிட்டது.
- சகல இனங்களுக்குமான சமமான கல்வி வாய்ப்பு, பாரபட்சமின்மை, தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பு என்பவற்றை உருவாக்கவில்லை.

இதிலிருந்து கல்வி முறையானது எல்லா மாணவர்களுக்கும் சமமாக அமையவில்லை என்பது புலனாகின்றது. இதனால் தேசிய கல்வி ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி அவர்களால் கல்விச் சீரமைப்பை விரைவுபடுத்துவதற்காக "பொதுக்கல்வி சீர்திருத்தத்திற்கான துரித நடவடிக்கைக் குழு " அமைக்கப்பட்டது. இக்குழு 1998 ஆம் ஆண்டு "புதிய கல்வி சீர்திருத்த கொள்கை" களை முன்வைத்தது. இப்புதிய கல்வி சீர்திருத்தத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளில் சில பின்வருமாறு:

- கல்வியில் சமவாய்ப்பை வழங்குதல்.
- 5 வயது முதல் 14 வயது வரையான பிள்ளைகள் அனைவருக்கும் கட்டாய கல்வியை வழங்குதல். ( இது ஏற்கனவே 1939 ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க கல்விச் சட்டத்தில் குறிப்பிட்டிருந்த போதிலும் வலுவாக அமுல்படுத்தப்படவில்லை )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான சகல உள்ளீடுகளையும் கொள்வனவு செய்வதற்குரிய அதிகாரம் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்படும். அது தவிர உள்ளீட்டு நிதி பாடசாலைகளுக்கு நேரடியாக வழங்கப்படும்.
- தரம் 1 இல் இருந்தே வாய்மொழி ஆங்கிலத்தை அறிமுகப்படுத்துதல்.
- தரம் 6 இல் இருந்து 11 வரை மதிப்பீட்டிற்கு பதிலாக கணிப்பீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல்.
- மாணவர்களின் கற்றல் திறனையும், வாசிப்பு திறனையும் அதிகரிக்கும் வகையில் நூலக அபிவிருத்தியை மேம்படுத்துதல்.

இவ்வாறு இன்னும் பல்வேறு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டாலும் "கல்வியில் சமவாய்ப்பு" என்பது நடைமுறையில் இன்று வரை சமவாய்ப்பு இல்லாத நிலையே காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேற்குறிப்பிட்ட பிரேரணையில் "கல்வியில் சமவாய்ப்பு" வழங்கலின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது. எல்லா மாணவர்களும் சமமானவர்கள் அவர்கள் ஒவ்வொருவரினதும் ஆற்றல்கள் வெளிக் கொணரப்படுவது அவசியமானதாகும். நகர்புற பாடசாலை மாணவர்கள் உச்ச வளப் பயன்பாட்டின் மூலம் தமது ஆற்றல்களை வெளிக்காட்டி சமூகத்தில் பிரகாசித்து உயர்தொழில் வாய்ப்புக்களைப் பெற்று அனுபவிக்க, வளப்பங்கீட்டில் பாரபட்சம் காட்டப்பட்ட கிராமிய பாடசாலை மாணவர்கள் சமூகத்தில் பின்தங்கியவர்களாக திறன்களை வெளிக் கொணராதவர்களாக, உயர் தொழில் வாய்ப்புக்களை பெறமுடியாதவர்களாக ஓரங்கட்டப்படுவது கவனிக்கப்பட வேண்டிய கவலையான விடயமாகும்.

1998ம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தம் கூட எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை என்பதைப் பல கல்வியியலாளர்கள் இன்று சுட்டிக்காட்டுகின்றனர். மிகச் சிறந்த கல்விச் சீர்திருத்தம் என ஆரம்பத்தில் பிரகாசப்படுத்தப்பட்ட போதும் பத்து வருடங்களின் பின்னர் அதில் பல குறைபாடுகளைக் காட்டுகின்றன.

- கல்விக்காக செலவிடும் பணத்தின் பெரும்பகுதி துஷ்பிரயோகம் செய்யப்படுதல்.
- கிராமப்புற மாணவர்களுக்குப் பொருத்தமானதாக அமையவில்லை.
- தேசிய உணர்வையும் நாட்டுப்பற்றையும் ஊட்டத்தவறியமை.
- கல்வியில் சமவாய்ப்பை ஏற்படுத்தத் தவறியமை.
- பொருத்தமாக பாடநூல்கள் மற்றும் உள்ளடக்கங்கள் இன்மை. குறிப்பாக தமிழ்மொழி மூலத்தில் இவை குறைவாகவே வெளியிடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்விக்கான வளங்களில் சமபங்கீடுகள் இடம்பெறவில்லை.
- இக்கல்வித் திட்டமும் பரீட்சை மையக் கலைத்திட்டமாகவே இருப்பதால் தனியார் கல்வி நிலையங்களை மாணவர்கள் நாடும் நிலை தொடங்குகின்றது.
- மனித, பௌதிக வளப்பாடுகளில் சமனற்ற நிலை காரணமாக நகர கிராமப்புற வேறுபாடுகள் தொடர்ந்தும் நிலவுகின்றன.
- வளங்களை வினைத்திறன் உள்ள நிலையில் பயன்படுத்தாத நிலையில் வள விரயம் பாரிய அளவில் காணப்படுதல்.
- ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமலே 90 வீதமான கிராமப்புற பாடசாலைகளில் ஆங்கிலப் பாடம் கற்பிக்கப்படாத நிலை காணப்படுகின்றமை.
- பொருத்தமான கணிப்பீட்டுக் கருவிகளினூடாக பாடசாலை மட்டக் கணிப்பீட்டினை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளத்தவறும் ஆசிரியர்கள் இதனை சுமையாகக் கருதி தமது பொறுப்புக்களை தட்டிக்கழிக்கும் போக்கு காணப்படுகின்றது. இதனால் பாடசாலை மட்டக் கணிப்பீட்டுத் திட்டம் *(School Base Assesment)* எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை.
- பாடசாலையின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக பாடசாலைக்கு வழங்கப்படும் தர உள்ளீட்டு நிதி *(Qality input Funt)* பல பாடசாலைகளில் விரயமாக்கப்படுவதுடன் கல்வி அபிவிருத்தியை இலக்காக கொண்டு செயற்படாத நிலை பல அதிபர்களிடம் காணப்படுதல்.

மேற்கூறப்பட்ட விடயங்கள் கல்வியில் எல்லாப் பிள்ளைகளுக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுதலின் முக்கியத்துவத்தை காட்டுகின்றது.

உலக நாடுகள் அனைத்தும் எல்லாக் குழந்தைகளுக்கும் "கல்வியில் சமவாய்ப்பு" வழங்கப்பட வேண்டும் என்பதை சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்கின்றன. எமது அண்மைய நாடான இந்தியாவை எடுத்துக் கொள்வோமாயின் அவர்களும் "எல்லோருக்கும் கல்வி" என்பதிலும் "எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச ஆரம்பக் கல்வி வழங்குதல்" என்ற கல்விக் கொள்கையை கொண்டுள்ளனர். அவர்களும் வளர்முக நாடாக காணப்படுவதனாலும் கல்விக்கு செலவிடக்கூடிய பொருளாதார வளம் குறைவாக உள்ளமையினாலும் எல்லோருக்கும் கல்வி வழங்க முடியாத நிலையும் காணப்படுகின்றது. 1991ல் இந்தியாவின் எழுத்தறிவு வீதம் 53.1 ஆனால் தற்போது 62 வீதமாக உயர்ந்துள்ளது. காரணம் இன்னும் விரிவான முறையில் தொடக்கக் கல்வியை உறுதி செய்ய முடியாதிருக்கின்றது. மாநிலத்திற்கு மாநிலம் வாய்ப்புக்கள் வேறுபடுகின்றன. மத்திய அரசு கல்விக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையை உருவாக்குகின்றது. நிர்வாகப் பொறுப்புக்கள் அனைத்தும் மாநில அரசிடமே பொறுப்பளிக்கப்பட்டிருக்கின்றது. பாடசாலைகளே இல்லாத கிராமப்புறங்கள் இராஜஸ்தான் போன்ற இடங்களில் காணப்படுகின்றது. "எல்லோருக்கும் கல்வி" என்னும் கொள்கையின் கீழ் அரசினால் எல்லோருக்கும் கல்வி வழங்க முடியாத நிலையில் தனியார் நிறுவனங்களிடமும் கல்வி வழங்கல் செயற்பாடு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களில் கல்வி கற்கும் பிள்ளைகள் நன்கு கவனிக்கப்படுகிறார்கள் என்றும் அங்கு மாணவர் வருகை 83 சதவீதத்திற்கும் அதிகமாகவுள்ளது என்றும் கற்றல் கற்பித்தல் மாணவர் ஒழுங்கு ஆகியவற்றில் கூடிய கவனம் எடுக்கப்படுகின்றது என்றும் அரச பாடசாலைகளில் வளப்பற்றாக்குறையும் ஒழுங்கற்ற நிர்வாகச் செயற்பாடுகளும் காணப்படுகின்றது என்றும் இந்தியாவின் "1999ன் பொது அறிக்கை" *(Public Report on Basic Education in India 1999)* குறித்து நிற்கின்றது. மேலும் கிராமங்களில் 6 - 11 வயதுப் பிள்ளைகளில் 50 வீதத்தினர் எப்பாடசாலைகளிலும் சேரவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தியாவிலும் 1947 முதல் கட்டாயக் கல்வி 5 - 14 வயது வரை இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்பது பெரிதும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. 1993ல் UNDP ஆய்வொன்றை மேற்கொண்ட போது 85 மில்லியன் பிள்ளைகள் பாடசாலையை எட்டியும் பார்க்கவில்லை என்ற கணக்கொன்றை வெளியிட்டிருந்தது. எழுத்தறிவற்றோர் தொகையும் காலத்திற்கு காலம் அதிகரித்தே செல்கின்றது. 1981ல் 350 மில்லியனாக இருந்த எழுத்தறிவற்றோர் தொகை 1991ல் 371 மில்லியன்களாக அதிகரித்திருந்தது. 1999ல் பொது அறிக்கையில் ஒரு கூற்று பின்வருமாறு அமைந்திருந்தது.

"பொதுத் துறை ஊழியர்கள், விவசாயிகள், தொழிலதிபர்கள், ஆயுதப்படையினர் தமது மானியங்களுக்காக நிர்ப்பந்திப்பது போன்று பிள்ளைகள் தமது கல்வி வாய்ப்பிற்காக ஆட்சியாளர்களை நிர்ப்பந்திக்கும் நிலை இந்தியாவில் இல்லை".

இது பிள்ளைகளுக்கு "கல்வி வாய்ப்பு" சமமாக வழங்கப்படவில்லை என்பதை குறித்து நிற்கின்றது. 1986ல் தேசிய கல்விப் பிரகடனம் முன்வைக்கப்பட்ட போது "14 வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் கட்டாயக்கல்வி" எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1992ல் திருத்திய தேசிய கல்விக் கொள்கையில் "புதிய நூற்றாண்டிற்குள் நுழையுமுன்னர் 14 வயதிற்குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும்" என குறிப்பிட்டிருந்தது. எனினும் கல்வி ஆவணங்களில் சமத்துவக் கோட்பாடும் நடைமுறையில் சமத்துவம் இன்மையும் இந்தியாவில் தொடர்ந்து இருந்து வருகின்றது. 1999ன் பொது அறிக்கையின் படி 94 வீதமாக பிள்ளைகள் கற்பதற்குரிய பாடசாலைகள் உள்ளதாக கூறப்படுகின்றது. ஆனாலும் சாதி அடிப்படையில் கிராமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கப்பட்டமையும் ஒரு பிரிவிலுள்ள பிள்ளைகள் மற்றப் பிரிவிலுள்ள பாடசாலைக்குச் செல்ல தயக்கம் காட்டுகின்ற தன்மையும் கிராமிய இந்தியாவில் 50 சதவீதமானவற்றில் மட்டும் ஆரம்பப் பாடசாலைகள் உள்ளதாகக் காட்டகின்றது. எனவே அண்மை நாடான இந்தியாவிலும் பிள்ளைகள் அனைவருக்கும் "கல்வியில் சமவாய்ப்பு" வழங்கப்படாத நிலையைக் காணமுடிகிறது.

நோர்வே போன்ற ஐரோப்பிய நாடுகளில் ஆரம்பக் கல்வி பெறாத எவரும் இல்லை என்றே கூறலாம். அங்கு கல்வியைப் பெறும் உரிமை அனைவருக்கும் சமமாக வழங்கப்படுகின்றன. எல்லாப் பிள்ளைகளுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படுகின்றன. உயர்தரக் கல்வியைப் பெறுவதற்கு கல்லூரிகளுக்குச் செல்ல மாணவர் ஒவ்வொருவருக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. கலைத்திட்டம் நவீன உலகிற்கேற்ப கல்வியியலாளர்களால் முன்வைக்கப்பட்டு கல்வி நிர்வாகத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

எல்லா நாடுகளும் சகல பிள்ளைகளுக்கும் கல்வி வழங்கலை குறிக்கோளாகக் கொண்டவையே. தாய்லாந்து நாட்டை நோக்குவோமெனின் 1965ல் அங்கு சகல உயர்கல்வி நிறுவனங்களும் தாய்லாந்தின் தலைநகரம் பாங்கொக்கிலே இருந்தன. இதனால் உயர்கல்வி கற்க தலைநகருக்கே வரவேண்டிய நிலை காணப்பட்டது. 65 வீதமான இடைநிலைக் கல்வி மாணவர்கள் தலைநகரிலேயே கற்றனர். சமவாய்ப்பு வழங்கப்படவில்லை. ஆனால் 1967 இன் பின் மூன்று 5 ஆண்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு ஆரம்பக்கல்வி, இடை நிலைக்கல்வி, பல்கலைகழகக்கல்வி என்பன பரவலாக்கப்பட்டு நாட்டின் எப்பகுதியிலும் வாழும் பிள்ளைகளும் கல்வியில் சமவாய்ப்பு பெற வாய்ப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

தென்கொரியாவின் கல்விச் செயற்பாட்டை நோக்குவோமெனின் அவர்களும் கட்டாய இலவச ஆரம்பக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அங்கு 100 வீதமான பிள்ளைகளும் ஆரம்பக்கல்வியை பெறவது குறிப்பிடத்தக்க விடயம். இந்நாட்டில் பெண் கல்விக்கு முக்கியத்துவமில்லை. 90 வீதமானவர்கள் உயர் கல்வியைப் பெறுகின்றனர். இங்கும் ஓரளவு சமவாய்ப்பு வழங்கப்படுகிறது எனினும் நகரப் பிரதேசப் பாடசாலைகளுக்கு கூடுதலான வளங்கள் இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஐக்கிய அமெரிக்காவின் கல்வி நிலையை நோக்குவோமெனின் மாணவர்களின் நுண்ணறிவுத் திறனுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆரம்பப் பாடசாலைகளிலிருந்தே நுண்ணறிவு கூடிய மாணவர்கள் மீது விசேட கவனம் செலுத்தும் நாடு. இங்கு 1960 களில் எல்லோருக்கும் கல்வியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை. 1980 - 2000 ஆண்டு காலப்பகுதியில் கல்விச் சீர்திருத்தம் (அதியுன்னத யுகம் (Excellence Era) என்ற எண்ணக்கருவில் முன்வைக்கப்பட்டு இன்று முன்னணி நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி நிர்வாகம் அரசிடம் இருந்து மாநிலங்களுக்கும் மாநிலங்களிலிருந்து கல்வி மாவட்டங்களுக்கும் கல்வி மாவட்டங்களிலிருந்து பாடசாலை களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. தனியார் கல்வி நிலையங்களும் மாநில நிர்வாக கட்டுப்பாட்டுக்குட்பட்ட கல்வி நிலையங்களும் உண்டு. மேற்பார்வை இங்கு முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு "கல்வியில் சமவாய்ப்பு" வழங்கப்பட்டாலும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடு காணப்படுகிறது. இங்கு ஒரு வீதமானவர்கள் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் நாடு இன்று கல்வியில் முன்னணியில் நிற்கும் நாடு. ஏனைய நாட்டுக் கல்வியியலாளர்கள் ஜப்பான் சென்று அவர்களது கல்வி முறையை ஆய்வு செய்து தத்தமது நாடுகளுக்குச் எடுத்துச் செல்கிறார்கள். ஜப்பானில் தனியார் பாடசாலைகள் உள்ளது எனினும் 99 வீதமானவர்கள் அரசினால் நடாத்தப்படும் பொதுப் பாடசாலைகளிலேயே சேருகின்றனர். ஒரு வீதமானவர்களே தனியார் பாடசாலைகளில் சேருகின்றனர். ஆரம்பக் கல்வி இலவசமாகவே வழங்கப்படுகிறது. இடைநிலைக் கல்வியைப் பொறுத்தவரை 5 வீதம் தனியார் பாடசாலைகளாக உள்ளன. பொதுப் பாடசாலைகளை விட தனியார் பாடசாலைகளில் செலவு அதிகமாக உள்ளது. ஜப்பானில் எல்லா மாணவர்களுக்கும் கல்வியில் சமவாய்ப்பு வழங்கப்படுகிறது. அரசினால் திட்டமிடப்பட்டு வாழ்க்கை நீடித்த கல்விக்கான நேர் மனப்பாங்கினை கொண்ட கல்வியாக வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். ஜப்பானில் இறுக்கமான கல்வி முறை காணப்படுகிறது. கடும் உழைப்பு எதிர்பார்க்கப்படுவதனால் வேலைப்பழு அதிகமாகவுள்ளது. எல்லாப் பிள்ளைகளும் சமமான வாய்ப்புக்களை அனுபவிக்கின்றனர்.

சிங்கப்பூர் கல்வி முறைமையும் எல்லாப் பிள்ளைகளுக்கும் சமவாய்ப்பை வழங்குகின்றது. பிள்ளைகளின் சுயமான கற்றலுக்கும் பயிற்சி பெறலுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. சிங்கப்பூரில் 1997ல் விசேட கல்வித் திட்டம் முன்வைக்கப்பட்டது. 2001ல் "எல்லா ஆசிரியர்களும் தகவல் தொடர்பாடல் நுட்பத்தை அறிந்திருப்பர்" என்ற திட்டம் முன்வைக்கப்பட்டு முழுமை பெற்றது. 2002ல் "இரு மாணவர்களுக்கு ஒரு கணனி" என்ற திட்டம் முன்வைக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. "பாடங்களை கற்பிப்பதில் 30 வீதம் தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் கற்பிக்கப்படும்" என்ற திட்டம் முன்வைக்கப்பட்டது. தற்போது "பாடசாலை விட்டு வெளியேறும் அனைவரும் கணினி தொடர்பான பணியில் தகுதி பெற்றிருப்பர்" என்ற செயற்றிட்டத்தின் கீழ் எல்லா மாணவர்களுக்கும் எல்லா வளங்களும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இந்நாட்டில் மாணவர்கள் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்கப்படுகின்றது. (சந்திரசேகரம்.சோ. 2006)



தொடர்ச்சி 14ஆம் பக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34

# புதிய கல்விச் சீர்திருத்தமும் யூலியஸ் நியரரேயின் கல்விச்சிந்தனையும்

■ கி.புண்ணியமூர்த்தி

இலங்கையின் கல்வித்துறையில் காலத்துக்குக் காலம் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. 2015ம் ஆண்டில் இலங்கையின் கல்வி அமைப்பு முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்படும் எனப் பலராலும் எதிர்பார்க்கப்படும் இச் சூழ்நிலையில் யூலியஸ் நியரரேயின் கல்விச் சிந்தனை எந்தளவு பொருத்தப்பாடுடையதாக அமையும் என்பது தொடர்பாக இக் கட்டுரையில் ஆராயப்படுகின்றது.

ஆபிரிக்காவின் சமூகவாதக் கோட்பாட்டாளர்களில் முன்னணி வகிப்பவர் யூலியஸ் நியரரே ஆவார். மத்திய காலத்தில் மூன்றாம் உலக நாடுகளில், எதிர்காலத் திட்டமிடலில் சாதனை படைத்தவராக யூலியஸ் நியரரே விளங்குகின்றார். நீண்ட காலமாகக் குடியேற்ற நாடுகளின் ஆக்கிரமிப்பின் கீழிருந்த நாடுகளில் மிகவும் வறிய நாடாக இனங் காணப்பட்ட நாடுகளில் ஒன்றாகவே தன்சானியா இருந்தது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமானால் அது கல்வியின் மூலமே சாத்தியமானதாக அமையும் எனப் பொருளியல் வல்லுனர்கள் அடிக்கடி குறிப்பிட்டு வருகின்றனர். அந்த வகையில் தன்சானியாவின் பொருளியல் சூழ்நிலையை மாற்றியமைக்க நியரரே கையாண்ட வழிமுறைகள் நமக்கும் பாடமாக அமையலாம்.

1960 களில் தன்சானியா உலகிலுள்ள மிகவும் மோசமான வறிய நாடுகளில் ஒன்றாகக் காணப்பட்டது வெளிநாட்டு உதவிகள் குறைவாகவே கிடைத்தன. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விலை குறைவடைந்தது. இதனால் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை அந்த நாடு எதிர்நோக்கியது. இதற்காக நியரரே முன்வைத்த தீர்வுகள் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தல், கிராம எழுச்சி வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் *(Villagization)* என்பன போன்றவையாக அமைந்திருந்தன. இச் செயற்பாடுகள் மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றிணைந்த விசேடமான கலப்பாக உருவாக்கம் பெற்றன.

கட்டுரையாளர்

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிப்புரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியரரே தனது அரசியல், பொருளாதார, சமூகக் கருத்துக்களை முன்வைத்தார். அவர் 1967 ம் ஆண்டு முன்வைத்த **அருஷா வெளியீடு** *(Arusha Declaration)* ஊடாக அவர் சமூகத்தின் பார்வையைத் தன்பக்கம் திருப்பினார். இலங்கையில் இதுவரை காலமும் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களில் விவசாயம், மனைப்பொருளியல், தொழில்நுட்பவியல் போன்ற செயற்பாடு சார்ந்த பாடங்கள் கோட்பாடு சார்ந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்த அளவுக்குப் பிரயோக ரீதியான முக்கியத்துவம் பெறவில்லை. நியரரேயின் கிராம எழுச்சி வேலைத்திட்டம் இலங்கையின் சீர்திருத்த நடைமுறைகளில் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாக அமைந்துள்ளது. இலங்கையிலும் தற்போது கிராம எழுச்சி பற்றி அதிகளவு பேசப்படுகின்றபோதும் அது எதிர்பார்த்த மட்டத்தில் முன்னேற்றத்தைக் கொடுக்கவில்லை அவை பாடசாலைகளினூடாக நடைமுறைப்படுத்தப் படாமையும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

தன்சானியாவின் சமூகக் குறிக்கோள் ஒவ்வொரு பிரஜைக்கும் சமமான உரிமைகளையும், சமமான வாய்ப்புக்களையும் வழங்குவதாக மாற்றியமைக் கப்பட்டது. போதைக்கு அடிமையாகாமல் தமது அயலவர்களுடன் சமாதானமாக வாழ ஒவ்வொருவரும் ஊக்குவிக்கப்பட்டனர். சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு முன்னர் ஒவ்வொரு பிரஜையையும் மிகக் குறைந்த மட்டத்திலாவது வாழச் செய்தல் வேண்டும் என்பதும் அவர்களது அடிப்படை சுகாதார வசதிகளை விருத்தி செய்தல் வேண்டும் என்பதுமே நியரரேயின் அடிப்படைக் குறிக்கோள்களாக இருந்தன. இதனைக் கல்வியினூடாகச் சாதிக்கவே அவர் முயற்சி செய்தார்.

இலங்கையில் பாடசாலை மட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. பாடசாலை மாணவர்கள் பெருமளவில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர். அண்மைக் காலத்தில் எயிட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய் மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த வேளையில் நியரரேயின் அடிப்படை சுகாதார வசதிகளை விருத்தி செய்யும் செயற்பாடுகளை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்த முயற்சிக்கலாம்.

தன்சானியாவின் இயல்பிற்கேற்ப கிராமிய அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளை ஒழுங்குபடுத்தப்பட்ட கிராமங்களில் *(Ujamma)* கூட்டுறவு அடிப்படையின் கீழ் செயலாற்றுவதற்கு மக்களை ஊக்குவித்தல் வேண்டும் என நியரரே குறிப்பிட்டார். **உஜம்மா** குடியேற்றத்தின் நோக்கம் ஒவ்வொரு குடும்பத்துக்கும் *(Family hood)* தன்சானியாவைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஒப்படைப்பதாகும்.

உஜம்மா குடியேற்றத்தைப்போல் இலங்கையிலும் கிராமிய ரீதியில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் இலங்கையைக் கட்டியெழுப்பும் பொறுப்பு வழங்கப்படுதல் வேண்டும் இதற்கான விழிப்புணர்வூட்டல், பாடசாலைகளி னூடாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்சானியாவின் கல்வி, சுகாதாரம், அரசியல் ஆகிய துறைகளின் விருத்திக்காக நியரரே மேற்கொண்ட முயற்சிகளைப் பின்வரும் இரண்டு அடிப்படைகளில் நோக்கலாம்

1. சுய ஆற்றலை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலைக் கல்வியையும், வளர்ந்தோர் கல்வியையும் விருத்தி செய்தல்.

2. வாழ்க்கை நீடித்த கல்வியும், விடுதலை தொடர்பான கல்வியும் வழங்கப்படுதல்.

நியரரே தனது கல்விக் கொள்கையினை மகாத்மா காந்தியின் கல்விக் கொள்கையிலிருந்தும் கால்மாக்சின் கல்விக் கொள்கையிலிருந்தும் கட்டியெழுப்பினார். மகாத்மா காந்தியும், நியரரேயும் ஏகாதிபத்திய வாதிகளினால் அடிமைப்படுத்தப்பட்ட கல்வியை மீட்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். நடைமுறையிலுள்ள கல்விமுறைமை ஐரோப்பியர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதாகவே அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் கல்வித்துறையில் தற்போது சர்வதேச பாடசாலைகளின் ஆதிக்கமும், வெளிநாட்டுத் தனியார் கல்வி நிறுவனங்களின் ஆதிக்கமும் அதிகரித்து வருவதால் இலங்கையின் சமூக பொருளாதார கலாசார சூழ்நிலைக்குப் பொருத்தமான கல்வியை உருவாக்குவதற்கான தேவை தோற்றம்பெற்றுள்ளது.

யூலியஸ் நியரரே முறைசார் கல்வி தொடர்பாகப் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார்

1. முறைசார்கல்வி வசதிபடைத்தவர்களின் வாழ்க்கையை அடிப் படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்தக் கல்வி வைத்தியர் களையும், பொறியியலாளர்களையும், சட்டத்தரணிகளையும் உருவாக்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. நடைமுறையிலுள்ள கல்வி முறைமை அதில் பங்குபற்றுபவர்களை சமூகத்திலிருந்து வெகுதூரத்துக்குத் தள்ளிவைக்கின்றது.

3. கல்வி என்பது முறைசார் பாடசாலைக்குச் செல்லுதல் என்னும் கருத்தையே சமூகத்தில் தோற்றுவித்துள்ளது. மனிதர்களின் திறனையும், ஆற்றலையும் அளப்பது பரீட்சைகளில் வெற்றியடைவதிலும், சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதிலுமே தங்கியுள்ளது.

4. தற்போது நடைமுறையிலுள்ள முறையியல்களில் கல்வி கற்கும் மாணவர்கள், விளைதிறன்மிகு உற்பத்திச் செயன்முறைகளில் பங்குபற்ற முடியாதவர்களாகவேயுள்ளனர். தேசிய பொருளாதார விருத்திக்கு இந்த நாட்டின் கல்வி பங்களிப்புச் செய்யாது என்பதையே இது காட்டுகின்றது. உடலுழைப்புத் தொடர்பாக மாணவர்களிடம் மிகக் குறைந்த மட்டத்திலான மனப்பாங்கே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எமது ஆரம்பப் பாடசாலைக் கல்வி மாணவர்களை இடைநிலைப் பாடசாலைகளுக்குத் தயார்ப்படுத்துவதாகவேயுள்ளது.

மேற்கூறப்பட்ட நியரரேயின் கருத்துக்கள் இன்றைய இலங்கையைப் பிரதிபலித்துக் காட்டுவதுபோலவே அமைந்துள்ளன. இலங்கையிலும் அறிவை மதிப்பிடுவதிலும் கல்விச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதிலுமே கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது. மாணவர்களின் சுய ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள் பயனளிப்பதாகத் தெரியவில்லை. உடலுழைப்புத் தொடர்பான கவனம் மாணவர்கள் மத்தியில் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது பெருமளவு பாடசாலை மாணவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதே இதற்கு எடுத்துக்காட்டாகும். மாணவர்கள் ஓய்வொழிச்சலின்றியும், விளையாட்டுச் செயற்பாடுகளின்றியும் பாடநூல்களை மனனம் செய்வதிலேயே தமது காலத்தைக் கழிக்கின்றனர்.

நியரரே கல்வி, சுய நம்பிக்கையைக் *(Educaion for Self reliance)* கட்டியெழுப்புவதாகவும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாகவும், கூட்டுறவை விருத்தி செய்வதாகவும் அமைதல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். இதற்காக அவர் பின்வரும் சிபாரிசுகளைச் செய்துள்ளார்

1. கல்வியைக் கிராமிய வாழ்க்கைக்குப் பொருத்தமானவாறு மாற்றியமைத்தல் வேண்டும்.
2. ஆசிரியர்களும் மாணவர்களும் விளைதிறன்மிகு செயற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும். இச் செயற்பாடுகளைத் திட்டமிடும்போதும் ஒழுங்கமைக்கும் போதும் மாணவர்கள் பங்குபற்றுதல் வேண்டும்.
3. பாடசாலைக் கலைத்திட்டத்தில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளாக ஆக்கச் செயற்பாடுகள் இடம்பெறுதல் வேண்டும்.
4. பரீட்சைகளுக்கான முக்கியத்துவத்தைக் குறைத்தல் வேண்டும்.
5. ஆரம்பக்கல்வி, இடைநிலை வகுப்புகளுக்கான பிரவேசத்துக்காக மாணவர்களைத் தயார்ப்படுத்துவதாக மாத்திரம் அமைதல் கூடாது. மாணவர்களின் சுய நம்பிக்கையையும், கூட்டுறவாகக் கல்வி கற்கும் நடத்தையையும் விருத்தி செய்யும் அதேவேளை அவர்களை விமர்சன ரீதியாகக் கற்பவர்களாக மாற்றுதல் வேண்டும்.

இலங்கையிலும் ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்விக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதாகவே அமைந்துள்ளது மாறாக நியரரே குறிப்பிடுவது போல் ஆரம்ப வகுப்புகளிலிருந்து சமநிலை ஆளுமையுள்ள மாணவர்களை உருவாக்குவதையே புதிய கல்விச் சீர்திருத்தம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
பொது சன நூலகம்.
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் கல்வி, செயன்முறைக்கல்வி, தாய்மொழிக்கல்வி ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதே நியரரேயின் குறிக்கோள்களாக இருந்தன.

"அருஷா" வெளியீட்டில் அவர் வளர்ந்தோர் கல்வியின் தேவை தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளார். இதனை அவர் இரண்டு அடிப்படைகளில் மேற்கொள்ள முயற்சித்தார்

1. மாற்றம் அவசியம் எனும் மனப்பாங்கை விருத்தி செய்தலும் அந்த மாற்றத்தை நோக்கிப் பயணிக்கச் செய்தலும்.

2. மனிதர்களுக்குத் "தாம்" தொடர்பாகத் தீர்மானமெடுப்பதற்கு உதவி செய்வதும், அந்தத் தீர்மானத்தை அவர்களே பயன்படுத்தச் செய்தலும்.

கல்வியின் பிரதான நோக்கமாக அமைவது மனிதனின் விடுதலையே என இவர் குறிப்பிடுகிறார். மனிதன் உடல் ரீதியாக விடுதலை பெற்றிருந் தாலும் உண்மையிலே அவன் விடுதலை பெறவில்லை. மனிதனை முழுமையாக விடுதலை அடையச் செய்யக் கல்வியால் மாத்திரமே முடியும். 1976ம் ஆண்டு "வளர்ந்தோர் கல்வியும் அபிவிருத்தியும்" என்னும் தலைப்புத் தொடர்பாக உரையாற்றும் போது அபிவிருத்தி என்பது "மனிதனால் மனிதனுக்காக மேற்கொள்ளப்படும் மனித செயற்பாடாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி என்பது மனித, பௌதிக வகுதிகளை வேறுபடுத்துவதாக அமைதல் கூடாது. மனிதனை அபிவிருத்தியடையச் செய்வதற்கும், முன்னேற்றமடையச் செய்வதற்கும் உதவி செய்யும் அதேவேளை தமது குறிக்கோளுக்குப் பொருத்தமான வகையில் கருமமாற்ற வழிகளைத் தேடிக்கொள்வதற்கும் தமது தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் ஆற்றலைப் பெற்றுக்கொள்வதற்கும் கல்வி மனிதனுக்கு உதவுவதாக அமைதல் வேண்டும் என நியரரே வலியுறுத்துகின்றார்.

இலங்கையில் எதிர்பார்க்கப்படும் புதிய கல்விச் சீர்திருத்தமும் அபிருத்தியை மையமாகக் கொண்டதாக அமைதல் வேண்டும். தத்துவ ரீதியான பாடப் பரப்புக்கள் குறைக்கப்பட்டு அபிவிருத்திக்கு வழிகாட்டும் பிரயோக ரீதியான பாடங்களுக்கு முதன்மையளிக்கப்படுதல் வேண்டும். வளர்ந்தோர் கல்வி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போது நியரரே மாணவர்களை வகுப்பறைக்கு வெளியே அழைத்துச் சென்று கற்பித்தல் வேண்டும் என்கிறார்.

வளர்ந்தோர் கல்வி தொடர்பாக நியரேயின் கருத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இலங்கையில் வளர்ந்தோர் கல்விச் செயற்பாடுகள் கூட வகுப்பறைக்குள்ளேயே இடம்பெறுகின்றமை மாற்றியமைக்கப்பட்டு பெருமளவில் களச் செயற்பாடுகள் கலைத்திட்டத்தில் புகுத்தப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் பொதுமக்களின் சேவகர்களாவர், பொதுமக்களின் அபிவிருத்தியே அவர்களது நோக்கமாக இருத்தல் வேண்டும் என்கிறார். அத்துடன் மனிதர்கள் உலகத்தைப் பார்க்கும் பார்வையை மாற்றமடையைச் செய்ய ஆசிரியர்கள் உதவுதல் வேண்டும் என்கிறார்.

இலங்கையில் ஆசிரியர்களின் வகைகூறும் தன்மை குறைவடைந்தே செல்கின்றது. சேவை மனப்பாங்குக்கு அப்பால் பெருமளவு ஆசிரியர்கள் பிரத்தியேக வேலைகளிலும் தனியார் வகுப்புகளிலுமே தமது காலத்தைக் கழிப்பதைக் காணமுடிகின்றது. நியரரே எதிர்பார்த்த இலட்சிய ஆசிரியர்களை உருவாக்கும் வகையில் இலங்கையில் ஆசிரியர்கள் அரசினால் ஊக்குவிக்கப் படுதல் வேண்டும். அவர்களது சேவைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்போது அவர்களில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

கற்றல், கற்பித்தல் முறையியல் பற்றி நியரரே குறிப்பிடும்போது கல்வியியலாளர்கள் தாம் கற்றவற்றை மற்றவர்களுக்கு ஒப்படைப்பதைவிட கற்பதற்கான ஆற்றலை அவர்களுக்குள் ஏற்படுத்துதல் வேண்டும் என்கிறார். எனினும் அவர்களுள் அது தொடர்பான விளக்கம் இல்லாமல் இருக்கலாம். அதனால் கல்வி கற்கும் தனியாட்களில் உள்ளடங்கியிருக்கும் அறிவினை வெளிக் கொணர்ந்து கற்பதற்கு அவர்களிடம் இருக்கும் பொருத்தப் பாட்டினை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்குக் கல்வியியலாளர்கள் முயற்சித்தல் வேண்டும். இதற்காக ஆசிரியர் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. கற்பவரிடையே சுய நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் வேண்டும். அதாவது அவர்களைக் கருத்து வெளிப்பாட்டுக்குத் தூண்டுதல் வேண்டும்.

2. தனியாட்களை, அனுபவம் மூலம் கற்பதற்கும், அவதானத்தின் மூலம் கற்பதற்கும் ஊக்குவித்தல் வேண்டும்

நியரரேயின் கல்விச் சிந்தனை இலங்கையின் தற்கால கல்விச் சூழ்நிலைக்குப் பொருத்தமாக அமையும் அதேவேளை புதிய கலைத்திட்ட உருவாக்கத்துக்கும், ஒழுங்கமைப்புக்கும் உதவுவதாக அமையும்.

விஞ்ஞானிகள் தமது நம்பிக்கைகளையும், வினைப்பாடுகளையும் வரன்முறையான மொழியிலும், வரன்முறை சாரா மொழியிலும் வேறு வேறு வகையாக வெளிப்படுத்துகின்றனர் என்பது ஆய்வுகளின் வழியாகக் கண்டறியப்பட்டுள்ளது. விஞ்ஞான முடிவுகளை எழுதும் பொழுது மனித மனவெழுச்சிகள் கலக்கப்படாத தருக்க மொழியைக் கையாளுகின்றனர். அதேவேளை சமூகம் மற்றும் தனியாள் காரணிகளை வெளிப்படுத்தும் பொழுது அத்தகைய வரன்முறை இயல்பு காணப்படுதல் இல்லை.

- சபா.ஜெயராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40

# எண்ணிம சமூகமும் கல்வியும்

■ சபா.ஜெயராசா

எண்ணிம (Digital) தொழில்நுட்பம், கல்வியின் அனைத்துத் துறைகளிலும் ஊடுருவத் தொடங்கியுள்ளது. சமூகமே எண்ணிம சமூகமாக வளர்ந்து வரும் நிலையில் கல்வியும் அதனுடன் இணைந்து கொள்கின்றது.

தொழில்நுட்ப வளர்ச்சி மிகையானதும், சமநிலை பிறழ்வுற்றதுமான வளர்ச்சியாகின்றது. மிகையான இலாபநோக்கை அடைவதற்கும், சுரண்டலைப் பரந்த அளவில் மேற்கொள்வதற்கும் தொழில்நுட்ப அறிவு தீவிரமாகப் பயன்படுத்தப்படுகின்றது. பன்னாட்டுப் பெரும் நிறுவனங்களின் இலக்குகளை எட்டுவதற்கு விஞ்ஞானிகள் பயன்படுத்தப்படுகின்றனர்.

கல்விநிலையில் 2001ஆம் ஆண்டில் அறிமுகமாகிய "விக்கிப்பீடியா" பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியது. அறிவைக் கூட்டாகத் திரட்டிக் கொள்வதற்கும், பகிர்ந்துகொள்வதற்கும் அது வழிவகுத்தது. தொடர்ந்து வளர்ச்சி பெறத் தொடங்கிய பல இணைய வடிவங்கள் நேர்நிலையில் மட்டுமன்றி எதிர்நிலையிலும் கல்விச் செயற்பாடுகளிலே தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன.

2010ஆம் ஆண்டில் அறிமுகமாகிய "அப்பிள் ஐபாட்" (மடிகை) என்பது எடுத்துச் செல்லப்படக்கூடிய வகையில் இணைய வசதிகளைப் பயன்படுத்தும் செயற்பாட்டை ஏற்படுத்தியது. கைப்பேசிகளுக்கும் அந்தத் தொழில்நுட்பம் நீட்சி கொண்டது.

நேர்நிலையில் இணையம் என்பது ஒரு கல்விக் கண்ணாடியாக வளர்ச்சி கொண்டு வருகின்றது. அறிவை மக்களாட்சிப்படுத்துவதற்கு அது அனுகூலமாக இருக்கின்றதாயினும் அதன் நன்மைகள் சமூகத்தின் அடித்தளத்தினருக்கும் விளிம்பு நிலையினருக்கும் சென்றடையவில்லை. மத்தியதர வகுப்பினரே கல்வி நிலையில் அதன் நன்மைகளைக் கூடுதலாக அனுபவிக்கின்றனர்.

நீண்ட நேர விரயத்துடன் தேடப்பட்ட தகவல்களும் அறிவும் மிக விரைவாகக் கைகளுக்குள் வந்துவிடும் செயற்பாட்டை இணையம் தந்துள்ளது. மிகப் பெரிய நூலகம் கைகளுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. திரையோடு உறவாடும் புதிய கற்றல் முறையொன்று உருவாக்கம் பெற்றுள்ளது. முன்னர் நிலவிய கற்றல் பற்றிய சிந்தனைகளும் எடுகோள்களும் மாற்றமுறத் தொடங்கியுள்ளன.

கட்டுரையாளர்
கல்வியியல்துறைப் பேராசிரியர் (ஓய்வு)
பன்னூல் ஆசிரியர்.

ஆசிரியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றலிலே "தற்றுணிவு" *(Assertative)* தொழில்நுட்பம், இணைய வழியாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. கற்றலுக்கு பிறர் மீது ஆளிடைத் தொடர்பாக முற்றுமுழுதாகத் தங்கியிருக்கும் நிலையிலிருந்து கற்போர் விடுவிக்கப்படுகின்றனர். அதேவேளை அளவுக்கு அதிகமான தகவல்களும் அறிவும் இணையத்தளம் வழியாக வரும்பொழுது அவற்றை முகாமை செய்யும் திறனை வளர்க்கும் ஆற்றலைக் கற்பித்தலில் முன்னெடுக்க வேண்டியுள்ளது. "புதிய ஆசிரியத்துவம்" இத்துறையில் ஊன்றிய கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

எண்ணிமச் சூழல், எண்ணிம நூலகம், எலத்திரன் நூல்கள், *(e-Books)* எலத்திரன் சஞ்சிகைகள் என்பவற்றினூடே நவீன கற்றலும் கற்பித்தலும் முன்னெடுக்கப்படுகின்றன. அவ்வகைப் புதிய உளவியற் சூழலுடன் இசைந்து கற்பதற்குரிய மனக்கட்டமைப்பை ஏற்படுத்துதலும் வலுவூட்டுதலும் புதிய கல்விச் செயற்பாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

மாதிரி வடிவமைப்பை *(Simulation)* உருவாக்கிக்கற்றல் முன்னேற்றகரமான செயற்பாடாகக் கருதப்படுகின்றது. அத்தகைய ஒரு செயற்பாட்டை முன்னெடுப்பதற்கும் கணினி வழிக்கல்வி துணை நிற்கின்றது. நிஜமான ஒரு சூழலை மாதிரிகை வடிவில் உருவாக்கிக் கற்றலே மாதிரி வடிவமைப்புக் கற்றலாகும்.

புதிய எண்ணிமச் சூழல் மூளையின் செயற்பாடுகளிலும் செல்வாக்குகளை ஏற்படுத்துவதாக ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். கற்கும் ஊடகங்கள் மூளையின் தொழிற்பாடுகள் மீதும் நடத்தைகள் மீதும் செல்வாக்குகளை ஏற்படுத்துதல் மனித அனுபவங்கள் வாயிலாக அறியப்பட்டதொன்றாகும்.

வாய்மொழிக் கற்கும் மரபை எழுத்துவழிக் கற்றல் மரபு மாற்றியமைத்தது. அந்நிலையில் மனிதரின் மனனம் செய்யும்திறன் வீழ்ச்சியடைந்து விடும் என்ற பயம் அக்காலத்து ஆசிரியர்களிடத்து நிலவியது. அச்சுப் பொறி கண்டுபிடிக்கப்பட்டு நூல்கள் பெருமளவில் வரத் தொடங்கிய சூழலில் பெருந்தொகுதியான அறிவுத் தொகுதியை மாணவர் எவ்வாறு கையாளப் போகின்றனர் என்ற கேள்வி எழுந்தது.

புகழ்பெற்ற இருத்தல் வாத மெய்யியலாளராக விளங்குபவர் நித்சே அவர்கள் அவருக்குக் கண் சுகயீனம் ஏற்பட்ட வேளை, கையால் எழுதுவதைவிட்டு, தட்டச்சு வழியாகத் தமது எழுத்தாக்கங்களை மேற்கொண்டார். அந்த அமைப்பியல் மாற்றம் அவரின் எழுத்து நடையில் மாற்றங்களை ஏற்படுத்தியதென ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர். அதனை அடியொற்றி மாற்றமுறும் மூளையின் செயற்பாடும் அளிக்கை முறையும் தொடர்பான உளவியற் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

நவீன எண்ணிமச் சூழலில் பேனாவும் கடதாசியும் கைவிடப்பட்டு, விசைப்பலகையுடன் தொழிற்பாடும் நிலைதோற்றம் பெற்று வருகின்றது. அந்தச் செயற்பாடு ஆக்கமலர்ச்சி வெளிப்பாட்டிலும் ஒருவருக்குரிய எழுத்து நடையிலும் செல்வாக்குகளை ஏற்படுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய எண்ணிமச் சூழல் படைப்பு மலர்ச்சிச் செயற்பாட்டுக்கு வலுவூட்டியுள்ளதா? அல்லது வலுவிழக்கச் செய்துள்ளதா? என்ற வினாவும் எழுப்பப்பட்டு வருகின்றது. அதன் தொடர்பாக "எண்ணிமத் தலைமுறை" "கூகுள் தலைமுறை" முதலாம் புதிய சொல்லாடல்களும் தோற்றம் பெற்றுள்ளன.

கற்றல் தொடர்பாக முன்வைக்கப்படும் ஒரு முக்கிய கருத்து ஆழ்ந்த *(Deep)* கற்றலாகும். தனித்த ஒரு துறையில் ஆழ்ந்து கவனம் செலுத்த முடியாத குறுக்கீடுகளும் தடைகளும் ஏற்படும் வாய்ப்புக்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. அவற்றை மீறி உற்றறி சிந்தனையும் கருத்துத் தெறிப்பும் கலந்த சிந்தனையும் ஆழ்கற்றலிலே விளைத்திறனுடன் செயற்பட்ட வண்ணமிருக்கும். புதிய அறிவைப் பழைய அறிவுடன் ஒன்றிணைத்து இயக்குதலும் ஆழ்ந்த கற்றலாகின்றது. எண்ணிமத் தொழில்நுட்பத்தின் துணையோடு ஆழ்ந்த கற்றலை வலுப்படுத்தலும் வளப்படுத்தலும் சாத்தியமானவை.

உரைய *(Narrative)* ப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பழைய கற்றல் - கற்பித்தல் முறைமை இன்று எண்ணிமப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் கற்பித்தலுக்கு நிலைபெயர்ந்துள்ளது. அந்நிலையில் பழைய செயற்பாடுகளிலும் பெறுமானங்களிலும் இருந்து விடுபட வேண்டியுள்ளது.

அந்நிலையில் மாற்றங்களை முகாமை செய்தலை ஆசிரியரும் மாணவரும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பெற்றோரும் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

பல்வேறு முகவர்களுக்கிடையேயான அறிவும் தகவல்களும் விரைந்து பகிர்ந்து கொள்ளப்படத்தக்கதாக இருக்கும் நிலையில், பிரதிகூலமடைந்தோரும் விளிம்பு நிலை பெறமுடியாதிருக்கின்றனர். அறிவின் மக்களாட்சி மயப்பாடு சமூக அடிநிலையினருக்குச் சென்றடையாதிருத்தலைக் காண முடிகிறது.

பரந்துபட்ட இணையத் தள அறிவினூடே தனிமாணவர் ஒருவித திணறல் நிலையையும், ***"இணையப் பதகளிப்பையும்"*** அனுபவிக்கத் தொடங்குகின்றனர். அவற்றின் பின்னணியில் "எண்ணிம எழுத்தறிவு" *(Digital Literacy)* என்பது விரிந்த கருத்தாடல்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. எழுத வாசிக்கத் தெரிந்திருக்கும் நிலை "எழுத்தறிவு" எனப்படும். குறிப்பிட்ட பாடத்துறையில் அறிவிருத்தலைக் குறிப்பிடுவதற்கும் பாடத்துடன் இணைத்து "எழுத்தறிவு" என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படுதல் உண்டு. "தகவல் எழுத்தறிவு", "மனவெழுச்சி எழுத்தறிவு" முதலாம் தொடர்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. இருபத்தோராம் நூற்றாண்டின் அறிவுப் பெருக்கத்தோடு முழுமையாக இணையும் ஆற்றலும் ஆற்றல்களை வெளிப்படுத்தும் திறன்களும், எண்ணிமத் தொழில்நுட்பங்களோடு தொடர்புபடுத்தப்பட்டு "எண்ணிம எழுத்தறிவு" விளக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனூடே ஒருவர் தமக்குரிய அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளலும் வலியுறுத்தப்படுகின்றது.

அவற்றுடன் தொடர்புடையதான "முக்கோணத் தேர்ச்சிகள்" என்ற கருத்தாக்கமும் முன்வைக்கப்பட்டுள்ளது. முக்கோணத் தேர்ச்சிகளுள் (அ) உற்றறி சிந்தனைப் பற்றிய கோட்பாடுகள் (ஆ) தெறித்துச் செயற்படும் ஆற்றல் (இ) அவற்றை எண்ணிம வளங்கள் மீது பிரயோகித்தல் முதலியவை உள்ளடக்கப்படுகின்றன.

எண்ணிமச் சூழலில் தனிநபரின் கற்றற் கோலங்களும் வாழ்க்கைக் கோலங்களும் மாற்றமடைந்த வண்ணமுள்ளன. இணையம் சமூகத்தின் கண்ணாடியாகின்றது. சிறப்புத் தேவைகளைக் கொண்ட கற்போருக்கு இணைய வசதிகள் ஈடுகொடுக்கத்தக்க வகையில் இன்னமும் முழுமை பெறவில்லை என்ற கருத்து ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளது.

இலண்டன் பொருளியற் பள்ளிக் கூடத்தைச் சேர்ந்த எல்லின் கெல்ஸ்பர் எண்ணிமச் சூழல் தொடர்பான ஒரு புதிய கருத்தை முன்வைத்துள்ளார். "எண்ணிம கீழ்வகுப்பு" *(Digital Underclass)* என்ற சமூக வகுப்பின் தோற்றத்தை அது குறிப்பிடுகின்றது. எண்ணிம நிலைகளால் ஒதுக்கி வைக்கப்பட்டோர் அவ்வாறு சுட்டப்படுகின்றனர். அது விவாதத்துக்குரிய ஒரு கருத்தாகவுமுள்ளது.

அதேவேளை இணையவழியான பிறிதொரு பயனுள்ள செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இணைய வழியான சீர்மியம் செய்யும் நடவடிக்கைகளும், தீர்வுகளை நோக்கி நகரும் ஆற்றுப்படுத்தலும், மேற்கொள்ளப்படுகின்றன. "ஒவ்வொரு சிறுவரையும் கருத்திற் கொள்ளல்" என்ற செயற்றிட்டம் உடல்நலம், பாதுகாப்பு, உற்றடைதல், நேர்முகப்பங்களிப்பை மேற்கொள்ளல், பொருண்மிய நல்லேற்பாட்டை நோக்கி நகர்ந்து கொள்ளல் முதலியவை அவற்றினூடாக ஈட்டப்படுகின்றன.

உடல் நலம், உளநலம், மனவெழுச்சிநலம், சமூகநலம் போன்ற அனைத்தையும் இயக்கக்கூடிய இணைய அமைப்புச் சூழலில் மனித ஆக்கம் ஒரு புறம் நிகழ எதிர்மானிடப்படுத்தலும் இன்னொருபுறம் நிகழ்ந்த வண்ணமுள்ளது.

சமூக இயக்கம், சமூக முரண்பாடு, சுரண்டற் கோலங்கள், வர்க்க நிலைவரம், மாற்றத்துக்குரிய விசைகள் முதலியவற்றின் பின்புலத்திலே தான் "எண்ணிம சமூகம்" என்பதை நோக்க வேண்டும். சமூகத்தின் பிறநிலைவரங்களை மறந்து "எண்ணிம சமூகம்" என்பதை மட்டும் தனித்து நோக்குதல் மேலோட்டமான அணுகுமுறையாகவே இருக்கும்.

சமூக மாற்றத்தை இயங்கியல் தருக்கத்தின் வழியாகத் தரிசிக்க வேண்டிய தேவையை உலகமயமாக்கலும், எண்ணிமச் சூழலும் உருவாக்கி வருகின்றன. பல்வேறு கற்றல் வசதிகளை உருவாக்கி வரும் எண்ணிமச் சமூகத்தை பல்தேசிய நிறுவனங்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் நவீன காலனித்துவத்தைக் கட்டமைப்புச் செய்து வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44

# சுதேசமயமாகும் சர்வதேசப் பாடசாலைகள்?

■ சோ.சந்திரசேகரன்

இலங்கையில் வாழும் வெளிநாட்டாரின் பிள்ளைகளுக்காக அமைக்கப்பட்ட சர்வதேசப் பாடசாலைகள் இன்று உள்ளூர்ப் பிள்ளைகளையும் உள்வாங்கி, கேள்விக்கிடமற்ற வகையில் விரிவடைந்து வருகின்றன. முன்பு கொழும்பில் மட்டும் அமைக்கப்பட்ட இப்பாடசாலைகள் இன்று நாடெங்கும் பரவியுள்ளன. நாட்டில் இன்று 700 சர்வதேசப் பாடசாலைகளும் 70 தனியார் பாடசாலைகளும் இருப்பதாகவும் அங்கு 5 இலட்சம் பிள்ளைகள் படித்து வருவதாகவும் கல்வியமைச்சர் தெரிவிக்கின்றார். இவ்வகையில் இன்று இவ்விருவகைப் பாடசாலைகளும் கல்வி முறையின் ஒரு முக்கிய கூறாகத் தென்பட்டாலும் சர்வதேசப் பாடசாலைகள் அரசாங்கத்தால் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டவை அல்ல. எனவே இவை அரசாங்கக் கல்வி முறைக்கு அப்பால், கல்வி அமைச்சின் எதுவித கண்காணிப்பும் இன்றித் தன்னிச்சையாக இயங்கி வருவதாகத் தெரிகின்றது. தேசிய கல்வி முறையுடன் ஒன்றாத ஒரு பாடசாலை ஏற்பாடாக இது அமைந்துள்ளது.

இக்கட்டுரையில் தனியார் பாடசாலைகள் (70) பற்றி விரிவாக ஆராய்வதற்கில்லை. அவை அரசினால் வரையப்பட்ட பாட ஏற்பாட்டை நடமுறைப்படுத்துகின்றன. அவற்றில் அரசாங்க உதவி பெறும் தனியார் பாடசாலைகளும் உண்டு. இவற்றை மேற்பார்வை செய்ய கல்வி அமைச்சில் ஒரு தனிப்பிரிவும் உண்டு. இவற்றின் கல்வி நடவடிக்கைகள் பெரும்பாலும் அரசாங்கப் பாடசாலைகளை ஒத்தவை. ஆயினும் அவை கட்டணம் அறவிடுபவை.

ஆயினும் இன்று நாட்டில் இயங்கிவரும் சர்வதேசப் பாடசாலைகள் சில அம்சங்களில் வேறுபட்டவை. பெரும்பாலான சர்வதேசப் பாடசாலைகள் பிரித்தானிய பாட ஏற்பாட்டை (இலண்டன் க.பொ.த சா/நி, க.பொ.த உ/நி) கற்பிப்பன. அத்துடன் அங்கு பயிற்றுமொழி ஆங்கிலம் மட்டுமே. இப்பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சுக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை. இவை கல்வி அமைச்சில் பதியப்படாதவை. சில சர்வதேசப் பாடசாலைகள் இலங்கை அரசாங்கத்தின் முதலீட்டுச் சபையில் அங்கீகாரம் பெற்றவை. வெளிநாட்டாரின் முதலீட்டுடன் வர்த்தக அடிப்படையில் தொடங்கப்பட்டவை. மற்றவை கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்தில்

கட்டுரையாளர்
கல்வியியல்துறைப் பேராசிரியர் (ஓய்வு)
பன்னூல் ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபார நிலையமாக தனியார் நிறுவனங்களாகப் பதியப்பட்டவை. இவ்வகையில் இவை முற்றாகவே இலாப நோக்கத்துடன் இயங்கும் கல்வி நிறுவனங்கள்.

எவ்வாறு இலவச சுகாதார சேவைக்கு மத்தியில் தனியார் மருத்துவ நிலையங்கள் நாடெங்கும் இயங்குகின்றனவோ அதேபோன்று அரசாங்க இலவசக் கல்வி முறைமைக்கு மத்தியில் சர்வதேசப் பாடசாலைகளும் தனியார் பாடசாலைகளும் இயங்குகின்றன. தனியார் மருத்துவ நிலையங்களுக்கு இடமளிக்கப்பட்டிருக்கும் போது கல்வித்துறையிலும் தனியார் முயற்சிக்கு இடமளிப்பதில் தவறில்லை என்ற கருத்து வலுவாக முன்வைக்கப்படுகின்றது. அரசாங்கத் தரப்பில் சர்வதேசப் பாடசாலைகள் ஏதேனும் ஒரு அரச கண்காணிப்புக்கு உள்ளாக வேண்டும் என்ற கருத்தும் இன்று வலுப்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் இந்தப் பாடசாலைகள் சில வழிகளில் அரசாங்கத்தின் கல்விச்சுமையைக் குறைப்பதாகவும் அமைந்துள்ள. முதலில் ஐந்து இலட்சம் பிள்ளைகளுக்கு இப்பாடசாலைகள் கல்வி வாய்ப்புகளை வழங்கியுள்ளதைக் குறிப்பிட வேண்டும். நல்ல அரசாங்கப் பாடசாலைகளில் இடம் கிடைக்காமல் சர்வதேசப் பாடசாலைகளை நாடிய மாணவர்களும் உண்டு. இவ்வகையில் இப்பாடசாலைகள் மறைமுகமாக அரசாங்கத்துக்கு உதவியாக அமைவதாகவும் கூறலாம்.

மறுபுறம் நாட்டில் ஆங்கில மொழிக்கல்விக்கு உள்ள தேவையை சர்வதேசப் பாடசாலைகள் நிறைவு செய்கின்றன. கோளமயமாக்கத்தின் காரணமாகவும் தனியார்துறை நிறுவனங்களின் தேவைகளைப் பொறுத்தும் இன்று ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஏராளம் தேவைப்படுகின்றனர். அத்துடன் வெளிநாட்டு முதலீட்டுக்கு வழங்கப்படும் ஊக்கத்தின் காரணமாக ஏராளமான வெளிநாட்டு நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இங்கு பணியாற்ற ஆங்கிலக் கல்வி கட்டாயம் தேவை. அத்துடன் இலங்கையர் மத்தியில் பெருகிவரும் வெளிநாட்டு ஆர்வம் ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தியுள்ளது. சர்வதேசப் பாடசாலைக் கல்வியானது தேவையான "மென்மை"த் திறன்களை வழங்குவதாகவும் வெளிநாட்டில் வேலை செய்ய இளைஞர்களுக்குத் தேவையான திசைமுகப்படுத்தலை வழங்குவதாகவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் சர்வதேசப் பாடசாலை பாட ஏற்பாட்டில் சுதேச அம்சங்கள் இல்லை. அங்கு நடைமுறைப்படுத்தப்படும் பாட ஏற்பாடு பிள்ளைகளைத் தமது தேசிய வாழ்க்கையில் இருந்தும் சொந்த கலாசார விழுமியங்களில் இருந்தும் அந்நியப்படுத்துகின்றன. அப்பாடசாலைகள் செல்வந்த வகுப்பினருக்கே உரியன என்ற முறைப்பாடுகளும் உண்டு.

இதனை சற்று விரித்துக் கூறினால், பிரித்தானிய கலைத்திட்டத்தைப் பயிலும் இலங்கைப் பிள்ளைகள் பிரித்தானியப் பிரஜையாக மாறுவதற்கான கல்விமுறையிலேயே இணைந்துள்ளார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கையிலேயே வாழப்போகின்றார்கள். இந்நிலையில் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வரலாறு, தமது சமயம், தாய்மொழி என்பவற்றையும் கற்றால்தான் இலங்கை சமூகத்துடன் முறையாக இணைந்துகொள்ள முடியும். இக்காரணத்தினால் சில சர்வதேசப் பாடசாலைகள் தமது கலைத்திட்டத்தில் இப்பாடங்களையும் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்போது கல்வி அமைச்சர் இவ்விடயம் தொடர்பாகப் புதிய அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளதாகத் தெரிகின்றது. சகல தனியார் பாடசாலைகளும் சர்வதேசப் பாடசாலைகளும் உள்ளூர் மாணவர்களுக்கு இம்மூன்று பாடங்களையும் கட்டாயமாகக் கற்பிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தலே அதுவாகும். வெறும் சுற்றறிக்கையோடு நில்லாது, இவ்வாறான ஆணை வர்த்தமானப் பத்திரிகையில் வெளியீடாக கல்வி அமைச்சின் செயலாளருக்குக் கல்வி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் தெரிகின்றது.

மேல்நாட்டுப் பாணியில் இயங்கி வருகின்றன சில அல்லது பல சர்வதேசப் பாடசாலைகளை சுதேச மயப்படுத்தும் நடவடிக்கையாக இதனைக் கொள்ள வேண்டும். இந்த அறிவுறுத்தல் வெளிக்கொண்டுவரும் ஒரு முக்கிய உண்மை, இதுவரை காலமும் பல சர்வதேசப் பாடசாலைகள் தமது பாட ஏற்பாட்டில் இவ்வாறான முக்கிய பாடங்களைக் கற்பிக்கவில்லை என்பதாகும். ஆங்கில மொழியறிவைப் பெற்றால் மட்டுமே எல்லாவற்றையும் சாதித்து விடலாம்; ஆங்கில மொழியறிவு சமன் கல்வியறிவு என்று கருதும் பெற்றோர்களும் உள்ளனர்.

இப்படிப்பட்டவர்கள் உள்ளுக்குள் இவ்வாறான அரச ஆணையை முழுமையாக ஏற்றுக்கொள்வார்களோ தெரியாது. அத்துடன் சட்டரீதியாக அரசாங்கத்தில் கட்டுப்பாட்டுக்குள் வராத சர்வதேசப் பாடசாலைகளுக்கு இவ்வாறு கட்டளை பிறப்பிக்க முடியுமா? என்பதும் தெரியவில்லை.

சர்வதேசப் பாடசாலைகள் அரச சட்டுப்பாட்டிற்கு உட்படாது தன்னிச்சையாக இயங்குவது, அரசாங்கக் கல்விக்கொள்கை வகுப்பாளர்களுக்குப் பிடிக்காத விடயம் படாதபாடுபட்ட சகல பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்று தேசியக் கல்வி முறைக்குள் சகல பாடசாலைகளும் (பிரதமர். சிறிமாவோ காலத்தில் - 1961) கொண்டு வரப்பட்டன. விடுபட்ட சில தனியார் பாடசாலைகளும் அரசாங்கப் பாட ஏற்பாட்டையும் ஏனைய கல்விக் கொள்கைகளையும் பின்பற்ற ஒப்புக்கொண்டன. அத்துடன் தனியார்கள் பாடசாலைகளை ஏற்படுத்துவதும் சட்டப்படி தடைசெய்யப்பட்டது. ஆனால் கடந்த காலங்களில் இவற்றையெல்லாம் மீறி, ஏராளமான, தனியார்/ சர்வதேசப் பாடசாலைகள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பின்புலத்தில் 2003 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவின், கல்வி அறிக்கை இவ்விடயம் தொடர்பாகச் செய்த பரிந்துரைகள் முக்கியமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேவைக்கு ஏற்ப தனியார் - சர்வதேச பாடசாலைகள் அமைக்க தனியாருக்கோ கூட்டு அமைப்புகளுக்கோ அனுமதி வழங்கப்படல் வேண்டும். இவை கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும்.
- இப்பாடசாலை விவகாரங்களைக் கொண்டு நடாத்துவதற்குக் கல்வி அமைச்சில் விசேட பிரிவு ஒன்று இருத்தல் வேண்டும்.
- அரச சார்பற்ற துறையினர் பாடசாலைகளை அமைக்கும் வகையில், 1961 ஆம் ஆண்டுக் கல்விச் சட்டத்தின் ஏற்பாடுகள் திருத்தப்படல் வேண்டும் அல்லது அகற்றப்படல் வேண்டும்.
- தனியார்/ சர்வதேசப் பாடசாலைகளை அமைப்பதற்கான தகுதிவிதிகள் அமைச்சினால் உருவாக்கப்படல் வேண்டும். இப்பாடசாலைகள் இயங்குவதைக் கண்காணிப்பதற்கான முறைமையொன்று ஏற்படுத்தப்படல் வேண்டும்.

இந்தப் பரிந்துரைகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் கொள்கை வகுப்பாளர்களின் சிந்தனைப் போக்குகளை அறிந்துகொள்ள முடிகின்றது. அவர்கள் சர்வதேசப் பாடசாலை என்னும் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்கின்றனர். இவ்வகையில் தனியார்துறை கல்வித்துறையில் பங்குகொள்வதும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆனால் அவை கல்வி அமைச்சின் கண்காணிப்பிற்குள் வரவேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. அவ்வாறான ஒரு முக்கிய முயற்சியே சர்வதேசப் பாடசாலைகள் சமயம், தாய்மொழி, வரலாறு ஆகிய பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்ற கல்வி அமைச்சின் பணிப்புரையாகும்.

விஞ்ஞான அறிவு தொடர்பான ஆழ்ந்த கருத்துக்களை முன்வைத்தவர்களுள் தோமஸ் கூன் முக்கியமானவர். "விஞ்ஞானப் புரட்சியின் கட்டமைப்பு" என்ற அவரது நூல் 1962ஆம் ஆண்டில் வெளிவந்தது. பல்வேறு வாதப் பிரதிவாதங்களை அந்தநூல் ஏற்படுத்தியது. விஞ்ஞானம் தொடர்பான நியாயப்பாடுகளை அது கேள்விக்கு உள்ளாகியது. அவர் ஓர் இயற்பியல் அறிஞராக இருந்ததுடன் விஞ்ஞானத்தின் வரலாறு மற்றும் சமூகவியல் ஆகிய துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டினார். விஞ்ஞானிகளின் சமூகப் பின்புல இயல்புகள் மீது ஆய்வு நோக்கிலே கவனம் செலுத்தினார்.

விஞ்ஞானிகள் தமது கோட்பாடுகளுக்கு அர்ப்பணமுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். திறனாய்வு முன்வைக்கப்படும் பொழுது தாம் உருவாக்கிய கோட்பாட்டில் திருத்தங்களைச் செய்ய முற்படுகின்றனரேயன்றி கைவிடும் நோக்கமின்றி இருக்கின்றனர். விஞ்ஞான சமூகத்தின் கருத்தேற்றங்களுக்கு அவர்கள் கறாராக உட்பட்டு விடுகின்றனர். அந்த நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட "ஆட்சி நிரலில்" பங்குபற்றுவோராய் மாறிவிடுகின்றனர்.

-சபா.ஜெயராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வாழ்க்கை விருத்திச் செயற்றிட்டங்கள்:

## நடைமுறைகளும், சில வழிகாட்டல்களும்

■ ஆ.நித்திலவர்ணன்

நீண்டகால உள்நாட்டு யுத்தம், அரசியல் சீரின்மைகள் காரணமாக பாதிப்புக்குள்ளாகியிருக்கும் இலங்கையின் கல்வித்துறையை எல்லா மட்டங்களிலும் மேம்படுத்த வேண்டிய தேவை இன்றுள்ளது. இதன் ஒரு அங்கமான க.பொ.த உயர்தர மாணவர்கள் தமது வாழ்க்கை விருத்திச் செயற்றிட்டங்களை தமக்கும், பாடசாலைக்கும், சமூகத்திற்கும் மற்றும் நாட்டிற்கும் பயனுடைய வகையில் மேற்கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இக்கட்டுரையானது க.பொ.த உயர்தர வகுப்புக்களுக்கான வாழ்க்கை விருத்திச்செயற்றிட்டம் தொடர்பாக பின்வரும் உபதலைப்புக்களின்கீழ் ஆராய்கின்றது.

1. கட்டுரையாளரின் பார்வையில் சில நடைமுறை அனுபவங்கள்
2. பாடசாலைகளில் வாழ்க்கை விருத்திச் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலை
3. இலங்கை கல்வியமைப்பில் "செயற்றிட்டம்" அறிமுகமும் விருத்தியும்
4. தனியாள் செயற்றிட்டம்
5. குழுச்செயற்றிட்டம்
6. செயற்றிட்டக் கணிப்பீடு
7. எதிர்காலத்தில் க.பொ.த உயர்தர மாணவர்கள் தமது வாழ்க்கை விருத்திச் செயற்றிட்டங்களினை வினைத்திறனாக செய்வதற்கான வழிகாட்டல்கள்

கட்டுரையாளர்

விரிவுரையாளர்
கல்வியியல்துறை
யாழ்ப்பாணம்

### கட்டுரையாளரின் பார்வையில் சில நடைமுறை அனுபவங்கள்

- இலங்கையில் க.பொ.த உயர்தரம்வரை கற்கும் மாணவர்களில் மிகவும் குறைந்தளவானவர்கள் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்கின்றனர். ஏனையவர்கள் வாழ்க்கைத் தகைமைக்கு தேவையான திறன்களை பூரணமாகப்பெற்றுக்கொள்ளாமலே பாடசாலைக்கல்வியை விட்டு வெளியேற்றப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கை பல்கலைக்கழகப் பட்டதாரிகளில் கணிசமான தொகையினர் நவீன தொழில் உலகுக்குத் தேவையான தகைமைகள், திறன்கள் அற்றவர்களாக இருப்பதனால், வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதற்கு உதாரணமாக அண்மையில் நடைபெற்ற மேதின ஊர்வலமொன்றில், பட்டதாரி மேலங்கி, தொப்பி அணிந்த ஒருவர் சைக்கிளில் விறகுகளை விற்பனைக்காக கட்டிச்சென்ற காட்சியை குறிப்பிடலாம். எல்லாத்தொழிலும் சமனானது எனினும், "பட்டதாரிகள் அவர்களின் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பின்றியிருத்தலை" அது குறிப்பால் உணர்த்தியிருந்தது. இன்னொரு கோணத்தில் இதனை நோக்கின் "இலங்கைப்பட்டதாரிகள் தற்கால தொழில் உலகுக்குத் தேவையான திறன்களை பாடசாலைகளில் இருந்தும் பல்கலைக்கழகங்களி லிருந்தும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது" எனவும் கருதலாம்.

- சில வருடங்களுக்கு முன்னர் "ஜனசபா உத்தியோகத்தர்" என்ற பதவிநிலைக்கு பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்ட போது, தமது கிராம அபிவிருத்திக்கான செயற்றிட்ட முன்மொழிவு ஒன்றினையும் சுயமாக தயாரித்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புமாறு கேட்கப்பட்டபோது, பல பட்டதாரிகள் செயற்றிட்ட முன்மொழிவை தயாரிக்க முடியாது இடர்பட்டனர். இதற்காக பல தனியார் ரியூசன்கள் பெருமளவு பணத்தை அறவிட்டு வழிகாட்டல் வகுப்புக்களை நடாத்தியிருந்தன.

- கட்டுரையாசிரியர் பல்கலைக்கழகத்தில், இளநிலைப்பட்டதாரிக ளுக்கும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கும் கற்பிக்கும் அனுபவத்தின் அடிப்படையில், அவர்களில் பலர் தமது கற்கையின் ஒருபகுதியான ஆய்வை, திறம்பட செய்யும் திறனற்றவர் களாக இருப்பதை அவதானித்துள்ளார். இவர்கள் தமது க.பொ.த உயர்தர செயற்றிட்டத்தினூடாகப் பெறவேண்டிய திறன்களை பாடசாலைகளில் முழுமையாகப் பெறவில்லை என்பதும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

## இலங்கைப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர செயற்றிட்டத்தின் தற்போதைய நிலை

மாணவரொருவர் தனியாள் மற்றும் குழுச்செயற்றிட்டத்தை திருப்பிகரமாகப்பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்பது, க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான அடிப்படைத்தகைமைகளில் ஒன்றாக இருக்கின்றது. இருந்தபோதிலும் பாடசாலைகளில் எல்லா மாணவர்களும் திருப்திகரமாக இதனைச்செய்வதில்லை என்பது அனைவராலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாகும். சில பிழையான நடைமுறைகளுக்கான உதாரணங்களை நான் இங்கே முன்வைக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகப் பாவனைக்கு

- பிரபல பாடசாலையொன்றில், மாணவர்கள், தமது செயற்றிட்ட அறிக்கைகளை கையொப்பம் இடுவதற்காக பாடசாலை அதிபரிடம் கையளித்தபோது, அவர் அவற்றை விரித்து முகர்ந்து பார்த்தார். ஏனெனில் கடந்த வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்டதெனில் பூச்சியரித்த மணம் அதிலிருக்கும் என்பதை அறிவதற்காக சில மாணவ மாணவிகள் அதே பாடசாலையில் அல்லது வேறு பாடசாலையில் முன்னைய வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மேலுறைகளை மாற்றிவிட்டு மீண்டும் சமர்ப்பிக்கும் பிழையான பழக்கமுடையவர்களாக இருக்கின்றனர்.
- அண்மையில் வன்னிப்பாடசாலையொன்றில் மாணவர் ஒருவர், தனது பாடசாலை நூலகத்துக்கு க.பொ. த உயர்தர தனியாள் செயற்றிட்டத்தினூடாக, தனது சொந்த செலவில், மின்னிணைப் பைப் பெற்றுக் கொடுத்துள்ளதாக பத்திரிகைச் செய்தியொன்றில் பாராட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதே நடைமுறை பல பாடசாலைகளிலும் பின்பற்றப்படுவதை அவதானிக்கலாம். மாணவர்கள், தமது தனியாள், அல்லது குழுச்செயற்றிட்டத்தினூடாக தமது பெற்றோரின் பணத்தில், பாடசாலைக்கு சில சொத்துக்களை வாங்கிக்கொடுத்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள், பொது நோக்கில் பயனுடையவை எனினும் மாணவர்கள், செயற்றிட்டத்தி னூடாக அடையவேண்டிய தேர்ச்சிகளை அடைவதற்கு உதவப் போவதில்லை.
- க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கும் பெரும்பாலான மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதியை மட்டும் இலக்காகக்கொண்ட இறுதிப் பரீட்சைக்கு தயாராவதையே, நோக்காகக்கொண்டு செயற்படுகின்றனர். தனியாள், மற்றும் குழுச்செயற்றிட்டங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவதில்லை. பல பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் செயற்றிட்டம் தொடர்பாக எதிர்மறையான மனப்பாங்கை கொண்டிருப்பதை அவதானிக்கலாம். நீண்டகால நோக்கில் வாழ்க்கை விருத்திச்செயற்றிட்டங்களின் பயன்பாட்டை அவர்கள் கருத்தில் கொண்டு செயற்படுவதில்லை.

### இலங்கை கல்வியமைப்பில் "செயற்றிட்டம்" அறிமுகமும் விருத்தியும்

பாடசாலைகளின் பாடவிதானத்தில் ஒரு பகுதியாகிய செயற்றிட்டம், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நவீன கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு அம்சமாகும். இது அமெரிக்கா, ஜேர்மன் கல்வித்தொகுதியை மூலமாகக் கெண்டது. 1950 ஆம் ஆண்டுகளில் சில பாடசாலைகளில் சமூகக்கல்விப்பாடத்தில் ஒருவகைச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. 1975, 2000 ஆம் ஆண்டுகளின் கல்விச்சீர்திருத்தங்கள் செயற்றிட்டம் பற்றி அழுத்திக் கூறியிருக்கின்றன. தற்போதைய கல்வியமைப்பின்படி க.பொ.த உ.தரத்தில் கல்வி பயிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா மாணவர்களும் தனிப்பட்ட செயற்றிட்டம், குழுச்செயற்றிட்டம் என்ற இரண்டு செயற்றிட்டங்களைச்செய்து முடித்தல் வேண்டும்.



**தனியாள் செயற்றிட்டம்**

தனியாள் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான தலைப்பு ஒன்று தெரிவு செய்யப்பட்டு அது பாடசாலையின் செயற்றிட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். தரம் 12 இல் முதலாம், இரண்டாம் தவணைகளுள் இச் செயற்றிட்டம் நிறைவு செய்யப்படுவதுடன், வகுப்புப் பொறுப்பாசிரியர் அல்லது பாடப் பொறுப்பாசிரியர் இதற்குரிய வழிகாட்டலை மேற்கொள்ள வேண்டும்.

தனியாள் செயற்றிட்டத்தில் ஈடுபடுவதனூடாக மாணவர்கள், தமது சுய ஆற்றலை வெளிப்படுத்தக் கூடியதாயிருப்பதுடன், நேரடியாகப் பல்வேறு நிறுவனங்களுடனும், சமூகத்துடனும் தொடர்பினைப் பேணவும் பல்வேறு தனிநபர்களுடன் செயற்படுதல் பற்றிய விளக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதலுமே எதிர்பார்க்கப்படுகிறது.

**குழுச் செயற்றிட்டம்**

குழுச் செயற்றிட்டத்துக்காகப் பாடசாலை மாணவர் 10 பேர் அடங்கிய குழுக்கள் பாடசாலை செயற்றிட்டக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும். இக் குழுக்கள் பாடசாலையின் விஞ்ஞானம் வர்த்தக கலைத்துறை மூன்றையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் அமைக்கப்படுதல் வேண்டும்.

**செயற்றிட்டக் கணிப்பீடு**

ஐந்து நியதிகளின் கீழ் செயற்றிட்டக் கணிப்பீடு செய்யப்படுவதுடன் செயற்றிட்டத்துக்கான பொறுப்பாசிரியர் குழு ஒவ்வொரு நியதிகளுக்கும் அமைய மாணவர் செயற்பட்டுள்ள விதத்தை அவதானித்து புள்ளி வழங்குதலை மேற்கொள்ள வேண்டும் இந்த செயற்றிட்டங்களுக்காக இறுதிப் புள்ளியாக 20 வழங்கப்படுவதுடன் அப்புள்ளி 10 இற்கு மாற்றப்பட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு வழங்கப்படும்.

*கட்டுரையாளர் இரண்டரை வருடங்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்புக்களுக்கான வாழ்க்கை விருத்திச்செயற்றிட்டத்திற்கு பொறுப்பாசிரியராக கடமையாற்றியதன் அனுபவத்தின் அடிப்படையிலும்; 14-05-2014 அன்று, சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு நடாத்திய வாழ்க்கை விருத்திச்செயற்றிட்ட செயலமர்வு அனுபவத்தின் அடிப்படையிலும், எதிர்காலத்தில் எனைய க.பொ.த உயர்தர மாணவர்கள், தமது வாழ்க்கை விருத்திச் செயற்றிட்டங்களினை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கான சில வழிகாட்டல்கள், கேள்வி- பதில் மூலமாக வழங்கப்படுகின்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்றிட்டம் என்றால் என்ன?**

ஒரு குறிக்கப்பட்ட வேலையை தரப்பட்ட கால வரையறைக்குள் நிறைவேற்றுவதற்காக செயற்படுத்தப்படும் ஒருதொகுதி செயற்பாடுகளை செயற்றிட்டமென வரைவிலக்கணப்படுத்தலாம். இலங்கையில் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் தனியாள் மற்றும் குழுச்செயற்றிட்டங்களினூடாக மாணவர்களின் திட்டமிடல், செய்தல், குறிப்பிட்ட காலத்தில் முடிவுறுத்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகிய திறன்கள் மதிப்பிடப்படுகின்றது.

**செயற்றிட்ட வகைகள் எவை? உதாரணங்களைக் குறிப்பிடுக.**

*1. ஆய்வு வகை செயற்றிட்டம்*

- வீட்டுத்தோட்டத்தில் பல்வேறு பறவைகளைப்பற்றி ஆராய்தல்,
- சமுதாய குடும்ப அலகில் வருமானம்

*2. பிரச்சினைவகைச் செயற்றிட்டங்கள்*

- பாடசாலைகளில் மாணவர் தொகை வீழ்ச்சியடைதல்
- இலங்கையில் மூளைசாலிகள் வெளியேற்றம்
- மிருகங்களின் நடத்தை மாற்றங்களை வைத்து காலநிலை எதிர்வுகூறல்

*3. ஆக்கவகைச் செயற்றிட்டம்*

- கவி, நாடகம், சிறுகதை மீட்டல்
- முத்திரைகளை அல்லது சிறு அலங்காரப்பொருட்களைச் சேகரித்தல்

*4. தொழில்நுட்ப அடிப்படைச்செயற்றிட்டம்*

- கருவி விருத்தி, உபகரண விருத்தி, பொறி அமைப்பு நிர்மாணிப்பு

*5. பொருளாதாரரீதியில் பயனுறுதிமிக்க செயற்றிட்டங்கள்*

- மலர்ச்செடித்தோட்டத்தை நடாத்துதல்
- பாடசாலைகளில் மருத்துவ மூலிகைகளை அல்லது காளான்களை நடுதல்
- வீட்டுத்தோட்டம் அமைத்தல்
- அலங்கார மீன்வகைகளை வீட்டில் வளர்த்தல்

*6. ஆய்வு அபிவருத்தி செயற்றிட்டம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்றிட்டத்தை செயற்படுத்த முதலில் என்ன செய்ய வேண்டும்?**

பாடசாலையில் செயற்றிட்டத்துக்கு பொறுப்பான ஆசிரியருடன் கலந்துரையாடவும். செயற்றிட்டம் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வுகளில் கலந்துகொள்ளவும். பாடசாலை அதிபர், செயற்றிட்ட பொறுப்பாசிரியர்கள் இவற்றை பாடசாலையில் ஒழுங்கு செய்ய வேண்டும். மற்றும் முன்னைய வருடங்களில் கற்ற சிரேஸ்ட மாணவர்களுடன் கலந்துரையாடல். பயனுள்ள நல்ல செயற்றிட்டத்தை செய்யாத சிரேஸ்ட மாணவர்களிடம் இதுபற்றிக் கேட்க வேண்டாம். ஏனெனில் "செயற்றிட்டம் பயனற்றது" என்ற எண்ணத்தை அவர்கள் எப்போதும் கொண்டிருப்பர். செயற்றிட்டம் செய்ய முன்னரே இவ்வாறான எண்ணம் தோன்றினால், செயற்றிட்டம் செயடவதனால் கிடைக்கும் நல்ல அனுபவத்தை நீங்கள் இழப்பீர்கள்.

**வெற்றிகரமான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த என்ன செய்ய வேண்டும்?**

1. திட்டமிடல்
2. செயற்றிட்ட முன்மொழிவையும், களவேலைப்புத்தகத்தையும் தயார் செய்தல்
3. செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்கான அனுமதியை பாடசாலை செயற்றிட்டக்குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளல்
4. செயற்றிட்டத்தை ஆரம்பித்தல்
5. ஆய்வின் சகல விடயங்களையும் குறிப்பேட்டில் குறித்தல்
6. செயற்றிட்ட அறிக்கை எழுத ஆரம்பித்தல்
7. தரவு சேகரித்தல்
8. தரவுப்பகுப்பாய்வு செய்தல்
9. துறைசார் நிபுணர்களின் உதவி பெறுதல்
10. மாநாடுகள், கருத்தரங்குகள், போட்டிகளில் கலந்துகொள்ளல்
11. ஏனையவர்களைச் சந்தித்து ஆலோசனை கேட்டல்
12. முடிவுத்திகதிக்கு முன்னராக செயற்றிட்டத்தை நிறைவு செய்தல்

**செயற்றிட்டத்துடன் CD/DVD இணைக்கலாமா?**

இணைக்கலாம். ஆனால் செயற்றிட்டத்தை மதிப்பிடுபவர், இதனை ஒரு வேலைச்சுமையாகக் கருதவும் இடமுண்டு. இவற்றை பாதுகாப்பான உறையில் இட்டு செயற்றிட்ட அறிக்கையுடன் இணைக்கலாம். உயர்பெறுமதியுள்ள பொருட்களை செயற்றிட்ட அறிக்கையுடன் இணைக்க வேண்டாம். ஏனெனில் செயற்றிட்ட அறிக்கை மீள ஒப்படைக்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டாது. கடிதங்கள், குறிப்புக்கள், ஞாபகமூட்டல்கள், நிகழ்ச்சிநிரல், சான்றிதழ் பிரதிகள், பத்திரிகை நறுக்குகள், விளம்பரங்கள், இணையத்தளப்பக்கங்கள், படங்கள், புகைப்படங்கள், வரைபுகள், சிற்றேடுகள், மற்றும் வேலைப்பாட்டு மாதிரிகள் என்பனவனவற்றையும் நீங்கள் பின்னிணைப்பாக செயற்றிட்ட அறிக்கையுடன் இணைக்கலாம்.

**செயற்றிட்ட அறிக்கையில் விடயங்கள் இடம்பெற வேண்டிய ஒழுங்கு யாது?**

1. செயற்றிட்டத்தலைப்பு, செயற்றிட்டத்தை செய்தவர் பெயர், பாடசாலையின் பெயர்
2. பொருளடக்கம்
3. செயற்றிட்ட சுருக்கம்
4. செயற்றிட்டத்துக்கான அறிமுகம்
5. செயற்றிட்டப்பயனாளிகள்
6. செயற்றிட்டத்துக்காக பயன்படுத்தப்பட்ட வளங்கள்
7. பயன்படுத்தப்பட்ட முறையியல்
8. படிமுறைகள்
9. தரவுப்பகுப்பாய்வும் முடிவுகளும்
10. கலந்துரையாடலும் பெறுபேறுகளும்
11. நன்றிநவிலல்
12. உசாத்துணை நூல்கள்
13. பின்னிணைப்புக்கள்

**செயற்றிட்டத்துக்கு எவ்வாறு புள்ளியிடப்படுகின்றது?**

செயற்றிட்டத்துக்கு புள்ளியிடும்போது பின்வரும் விடயதானங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

1. செயற்றிட்டத்தெரிவு :
   - செயற்றிட்டத்தலைப்பு,
   - செயற்றிட்ட நோக்கங்கள்
2. திட்டமிடல் :
   - முதனிலைத்தரவு மூலங்கள்,
   - தரவு சேகரிப்பும் தரவுப்பகுப்பாய்வும்
3. கால அட்டவணைக்கேற்ப செய்யப்பட்ட வேலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- களவேலைப்புத்தகப்பராமரிப்பும் வேலைகளின் கோவைப்படுத்தலும்
- குழு வேலை
- அறிவுறுத்தல்களைப்பெற்றுக் கொள்ளலும் அவற்றைப்பின் பற்றலும்

4. செயற்றிட்டப்பிரச்சினை மற்றும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால முன்மொழிவுகளை முன்வைத்தல்

5. இறுதி செயறிறிட்ட அறிக்கை மதிப்பீடு

**முடிவுரை**

மாணவர்கள், பாடசாலையில் பெற்றுக்கொள்ளும் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு என்பவை அவர்களின் வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும். இதனை நோக்காகக்கொண்டு பல்வேறு நல்ல அம்சங்கள் இலங்கையின் கல்வியியமைப்பில் காலத்துக்குக்காலம் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் க.பொ.த உயர்தர வகுப்புக்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் தனியாள் மற்றும் குழுச்செயற்றிட்டங்கள், மாணவர்களுக்கும், சமூகத்திற்கும் மிகவும் பயன்மிக்கவையாகும். அத்துடன் அவர்களின் வாழ்க்கை விருத்திக்கும் பயன்படக்கூடியவையாகும்.

ஆனால் நடைமுறையில், பாடசாலைகளில் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான செயற்றிட்டங்கள், அவை அறிமுகப்படுத்தப்பட்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில், முன்னெடுக்கப்படுவதில்லை. பெரும்பாலான மாணவர்களும் ஆர்வத்துடன் இவற்றில் ஈடுபடுவதில்லை. இதனால் அவர்களிடம் செயற்றிட்டம் செய்வதால் விருத்தியடையும் திறன்கள் விருத்தியடையமாட்டாது. பின்னாளில் அவர்களின் உயர்கல்வியிக்குத் தேவையான ஆய்வுத்திறன்களிலும் குறைபாடுகள் ஏற்படும்.

இதனை நீண்டநாட்களாக நடைமுறையில் அவதானித்ததை அடிப்படையாகக் கொண்டும் எனது நேரடி அனுபவங்களின் அடிப்படையிலும் இக்கட்டுரையை எழுதியுள்ளேன். எதிர்காலத்தில் பாடசாலை அதிபர்கள், செயற்றிட்ட பொறுப்பாசிரியர்கள், வழிகாட்டும் ஆசிரியர்கள் மற்றும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு பயன்படத்தக்க வகையில் சில வழிகாட்டல்களையும் கேள்வி-பதில் வடிவில் இக்கட்டுரையில் உள்ளடக்கியுள்ளேன். இக்கட்டுரை தொடர்பான பின்னூட்டல்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றேன். இவை எதிர்காலத்தில் இதுபோன்ற கட்டுரைகளை எழுதுவதற்கான தூண்டல்களை எனக்கு வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56

# கற்றலுக்கான பழக்கவழக்கங்களை விருத்தியாக்கிக் கொள்ளல்

■ க.சுவர்ணராஜா

கற்றலில் சிறந்து விளங்குவதற்கு மனிதர் தன்னிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள பழக்கவழக்கங்கள் ஒரு பிரதான காரணமாக அமைகின்றது. மறுபக்கத்தில் இந்த பழக்கவழக்கங்களுக்கு அடிப்படையாக அமைவது கற்றலாகும். ஆகவே கற்றலில் வெற்றி பெறுவதற்கு கற்போர் நல்ல பழக்கவழக்கங்களை தம்மிடையே வலுப்பெறச் செய்தல் முக்கியமாகும்.

ஒருவர் தாம் கற்றுக்கொண்ட செயலைப் பலமுறை திரும்ப திரும்ப பரிச்சயப்படுத்தும்போது சிறிது காலம் சென்றவுடன் நனவுடன் கூடிய அம்முயற்சியானது கவனமின்றி இலகுவாக செய்யமுடியும். ஏனெனில் திரும்ப திரும்ப பரிச்சயப்படுத்தப்பட்ட அச்செயலானது பழக்கவழக்கமாகி விடுகின்றது. உதாரணமாக, துவிச்சக்கரவண்டியை மிதிப்பதற்கு கற்றுக்கொண்ட ஒருவர் நன்கு பரிச்சயமானவுடன் வெகு இலாவகமாக மிதிப்பதற்கு பழக்கவழக்கப்படுத்தப்பட்டு விடுகின்றார்.

பொதுவாக கற்றல் பழக்கவழக்கமாக மாறுவதற்கு பின்வரும் விடயங்கள் அக்கற்றலில் இணைந்திருக்க வேண்டும்.

1. முழுமையான கவனத்தைச் செலுத்துதல்
2. அதிக விருப்பமுடையதாக இருத்தல்
3. கற்றலின் ஆரம்பத்தில் ஏற்படும் தோல்விகளையும் சவால்களையும் ஏற்கும் மனப்பாங்கு
4. ஏற்கெனவே தம்முடன் இருக்கும் புதிய கற்றலுக்கான பொருத்தமற்ற நடத்தைகளிலிருந்து விடுபடுதல்
5. கற்றலின் ஒவ்வொரு கட்டத்திலும் கற்போர் தன்னை சுயமதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல்

கட்டுரையாளர்

வவுனியா தேசிய கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

### பழக்கவழக்கங்களின் வகைகள்

நாம் பழக்கவழக்கங்களை பின்வருமாறு வகுத்து நோக்கலாம். அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. உடலியக்கப் பழக்கவழக்கங்கள் உதாரணம்:- செய்திறன்கள்
2. சொற்பழக்கவழக்கங்கள் உதாரணம்:- வாசிப்பு
3. சமூகப்பழக்கவழக்கங்கள் உதாரணம்:- மரியாதையுடன் நடத்தல்
4. அறநெறிப் பழக்கவழக்கங்கள் உதாரணம்:- நேர்மை
5. சிந்தனைப் பழக்கவழக்கங்கள் உதாரணம்:- நம்பிக்கை

பழக்கவழக்கங்கள் எவ்வாறு ஏற்படுகின்றன என்று மேலும் தேடலில் ஈடுபடும் பொழுது,

1. திரும்ப திரும்ப ஒன்றைச் செய்வதனூடாக
2. தொடர்ச்சியான பயிற்சியினூடாக
3. ஆர்வம், அக்கறை மேலெழுச்சி பெறுவதனூடாக
4. மனநிறைவு வரும் வரை பயிற்சி செய்தலினூடாக
5. பயிற்சிக்கான வாய்ப்புக்களை அதிகரிப்பதனூடாக
6. ஆயத்தநிலை பொருத்தமாக வைத்திருப்பதனூடாக

பழக்க வழக்கங்கள் நேர்நிலையாக விருத்தியடைவதற்கான அனைத்துச் சாத்தியக்கூறுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும். இவ்வாறு நாம் ஏற்படுத்திக் கொள்ளும் பழக்கவழக்கங்கள் எமக்கு நல்ல நண்பர்களாகவோ அல்லது மோசமான எதிரிகளாகவோ மாறிவிடும். நாம் நல்ல பழக்க வழக்கங்களை விருத்தியாக்கும் பொழுது அவை நமக்கு என்றும் பயன்படுவனவாகவும், நமது செயல்களில், செயற்பாடுகளில் வெற்றியை ஈட்டி தருவனவாகவும், நம்மைப் பற்றிய எண்ணங்களை மற்றவர்களிடையே உயர்த்தி விடுபவையாகவும் அமைந்து விடும். மாறாக நாம் ஏற்படுத்திக் கொள்ளும் தீய பழக்கவழக்கங்கள் நமது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நமக்கு எதிரியாக நின்று நம்மை அழிக்கவும் நமது செயற்பாடுகளின் வெற்றியை தடுப்பதாகவும் அமைந்துவிடும்.

**கற்றலுக்கான பழக்கவழக்கங்கள்**

எந்தவொரு செயற்பாட்டினதும் வெற்றியின் திறவுகோலாய் அமைவது அச்செயற்பாட்டில் ஈடுபடுபவர் விருத்தியாக்கிக் கொள்கின்ற அச்செயல் தொடர்பான பழக்கவழக்கங்கள் மூலம் சாத்தியப்படும். உதாரணமாக ஒரு விளையாட்டு வீரர் தாம் ஈடுபட்டுள்ள விளையாட்டில் வெற்றி பெறுவதற்காக விளையாட்டு தொடர்பான திறன்களை விருத்தியாக்கிக் கொள்கின்றார். ஒரு சங்கீத வித்துவான் சங்கீதம் தொடர்பான திறன்களை விருத்தியாக்கிக் கொண்டு சங்கீதத்தில் வெற்றியடைகின்றார். ஒரு முகாமையாளர் முகாமைத்துவத் திறன்களை விருத்தியாக்கிக் கொள்வதன் ஊடாகவே தன்னுடைய நிறுவனத்தினை திறமையாக முகாமைத்துவம் செய்து வெற்றியடைகின்றார். ஆகவே எந்தவொரு செயற்பாட்டின் பின்னணியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்செயற்பாட்டிற்கான திறன் விருத்தியும் அது தொடர்பான பழக்கவழக்கங்களும் அடித்தளமாகவும் உறுதியாகவும் அமைகின்றது. இந்நோக்கில் நாம் பார்க்கும்போது கற்றலில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்து கற்றலில் வெற்றியடைவதற்கு கற்றல் தொடர்பான பன்முகத் திறன்களை கட்டாயம் விருத்தியாக்குதல் வேண்டும். மேலும் கற்றல் தொடர்பான திறன்களை விருத்தியாக்குதல் என்பது கற்றலுக்கென நல்ல பழக்கவழக்கங்களை நம்மிடையே பொருத்தமாக அமைத்துக்கொள்ளும் போது அந்தப் பழக்கவழக்கங்கள் நமக்கு ஒரு நல்ல நண்பராய் நின்று கற்றலில் நாம் வெற்றியடைவதற்கு வழிகாட்டும்.

கற்றலுக்காக நாம் விருத்தியாக்கிக்கொள்ள வேண்டிய பழக்கவழக்கங்களை இரண்டு வகையாக பிரித்து நோக்கலாம். அவை:

- சுய முகாமைத்துவம்
- உடன்பாடான சிந்தனை முகிழ்ப்பு

**சுய முகாமைத்துவம்**

நமது உள்ளத்தை நாம் சுய முகாமைத்துவத்திற்கு ஆட்படுத்துதல் கற்றலுக்கான பழக்கவழக்கத்தை உருவாக்கிக் கொள்வதற்கான முக்கிய படியாகும். நமது உள்ளத்தை நாம் சுயமாக கட்டுப்படுத்தி அதனை கற்றல் வழியின்பால் திருப்புதலே கற்றலில் பாரிய வெற்றியை பெறுவதற்கான பெரும் முயற்சியாகும். உள சுய முகாமைத்துவம் அல்லது பேரறிகை என்பது கற்றல் செயன்முறையை திட்டமிடுதல், நெறிப்படுத்துதல், மதிப்பிடுதல் என்பவற்றை உள்ளடக்கியதொரு கலையாகும். உள சுய முகாமைத்துவம் ஏற்படும் போது கற்றலுக்கான தெரிவுகள் இலகுவாகும். கற்றல் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய உள வலிமை எளிதாக நம்மிடையே வளர்ந்துவிடும். ஆகவே கற்போர் ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய பிரதான பழக்கவழக்கம் உள சுய முகாமைத்துவம் ஆகும்.

கற்போரிடம் உள சுய முகாமைத்துவப் பழக்கவழக்கம் ஏற்படும் போது பின்வருவன தொடர்பான தெளிவு உள சுய முகாமைத்துவம் விருத்தியடைவதற்கு சாதகமான சூழமைவை உருவாக்கும்.

**1. சிறந்த கற்றல் நடையியலை இனங்கண்டு கொள்ளல்**

கற்றல் நடையியல் என்பது காட்சியுடன் கற்றல், கேட்டுக் கற்றல், அனுபவித்துக் கற்றல், ஊகித்துக் கற்றல் என்றவாறு வேறுபடும். இக் கற்றல் நடையியல்களில் ஒன்றையேனும் பயன்படுத்தும் பொழுது இங்கு கற்றல் மேலும் சிறப்பானதாக விளங்கும். எந்த நடையியல் கற்றலில் அதிக விளைவுகளைத் தரும் என்று கற்போர் இனங்கண்டு அந்த நடையியலை உச்ச பயன்பாட்டு ரீதியில் பயன்படுத்தும் போது உளத்தெளிவு கற்போரிடம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2. கற்றல் திறன்களை நெறிப்படுத்துதல்**

வாசித்தல், எழுதுதல், அவதானித்தல், நேர முகாமைத்துவம், குறிப்பெடுத்தல், பிரச்சினை தீர்த்தல் போன்றவற்றை கற்றல் திறன்கள் எனக் குறிப்பிடலாம். கற்போர் தனது கற்றல் திறன்களை நெறிப்படுத்தவும், அதனை தொடர்ந்து விருத்தியாக்கவும் முயலுதல் கற்றலுக்கான உள முகாமைத்துவத்தின் அடுத்த தெரிவாகும். ஒரு கற்போர் தனது கற்றல் திறன்கள் எந்தளவுக்கு போதுமான அளவு விருத்தியடைந்துள்ளன? கடந்த காலங்களில் தமது கற்றல் திறன்கள் மூலம் பெற்றுக்கொண்ட வெளியீடுகள், பெறுபேறுகள் எத்தகையன? இதுபோன்ற வினாக்களை எழுப்பி தன்னை சுயமதிப்பீட்டிற்கு உள்ளாக்கும் பழக்கவழக்கத்திற்கு உட்படல் வேண்டும்.

உதாரணமாக, ஒரு கற்போர் கடந்த ஒரு பாடத்திற்கான ஒப்படையில் குறைவான புள்ளிகளைப் பெற்றிருக்கிறார் எனில், அதில் தாக்கம் செலுத்திய தமது கற்றல் திறன் எதுவென இனங்கண்டு கொள்ளல் வேண்டும். வாசிப்புத்திறன் போதாமையால் அந்த ஒப்படையில் குறைவான புள்ளிகளைப் பெற நேரிட்டிருப்பின் இங்கு வாசிப்புத்திறனை விருத்தியாக்கும் பழக்கவழக்கத்தை உள்வாங்கிக் கொள்ளல் வேண்டும்.

சில கற்போர்கள் குறிப்பெடுத்தலில் கொண்டிருக்கும் தவறான நடைமுறைகள் அவர்களது அடைவு மட்டத்தில் பெரும் தாக்கம் செலுத்தும். சிலர் தாம் எடுத்த குறிப்பினை தாமே விளங்கிக்கொள்ள முடியாத சிக்கல்களுக்கும் உள்ளாகின்றனர்.

மேலும் சில கற்போர் பரீட்சைக்காக தம்மை ஆயத்தம் செய்வதிலும், பரீட்சையில் விடையளிப்பதிலும் நேர முகாமைத்துவம் தொடர்பாக விடும் தவறுகள் அவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளில் அதிக தாக்கத்தினை செலுத்துகின்றன.

ஆகவே தமது கற்றல் திறன்களை நெறிப்படுத்தி விருத்தியாக்கும் பழக்கவழக்கம் கற்போரிடம் இடைவிடாது தொடர வேண்டிய ஒரு பண்பாட்டுச் செயல்வாதமாகும்.

**3. பல்வேறு கற்றல் சூழல்களை பயன்படுத்துதல்**

கற்போர் தான் பங்கேற்கும் கற்றல் சூழலை நன்கு பயன்படுத்திக் கொள்ளும் பழக்கவழக்கத்தினை விருத்தியாக்கிக்கொள்ளல் கற்றலுக்கான ஒரு சிறந்த உள முகாமைத்துவம் ஆகும். பொதுவாக விரிவுரைகள், ஆய்வுகூட பரிசோதனைகள், கலந்துரையாடல்கள், கற்றல் குழுக்கள், சகபாடியுடன் இணைந்து கற்றல், கள வேலைகளில் ஈடுபட்டுக் கற்றல், செயல்திட்டங்கள், ஆய்வுகள் என்பனவற்றை கற்றல் சூழல் எனலாம். இந்த கற்றல் சூழலை பயனுள்ளதாக பயன்படுத்தும் உள முகாமைத்துவம் கற்போருக்கு அவசியம்.

உதாரணமாக, விரிவுரைகளின் போது அதனை கவனியாது வேறு செயற்பாடுகளில் ஈடுபடல், தேவையான போது குறிப்பெடுக்காது விடுதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகங்களை தீர்த்துக்கொள்ள முனையாமை, குழுவேளைகளில் அக்கறையின்றி இருத்தல், தமது உயரிய பங்களிப்பினை செலுத்தாது இருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கற்போர் தான் பங்கேற்கும் கற்றல் சூழலில் எவ்வாறு நடந்துகொள்ளல் வேண்டும், எவ்வாறான ஆயத்தத்துடன் அங்கு செல்ல வேண்டும், தமது பங்களிப்பினை எவ்வாறு உயர் மட்டத்தில் வழங்கலாம், புதிய விடயங்களை எவ்வாறு முயன்று கற்றுக்கொள்ளலாம், எவ்வித மனக் கட்டுப்பாட்டுடன் அங்கு நடந்துகொள்ளல் போன்ற விடயங்களில் அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும்.

ஒரு கற்றலை பயனுள்ளதாக்கிக்கொள்ள முனையும் பழக்க வழக்கமானது கற்றலில் எதிர்பாராத வெற்றிகளைக் குவிப்பதற்கு சாதகமாக அமையும்.

### 4. கற்றல் சுற்றுகையை நிறைவு செய்தல்

பொதுவாக கற்றலின் வெற்றி என்பது பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முறையில் கற்றல் சுற்றுகையை நிறைவுசெய்தல் வேண்டும். நாம் விடயங்களை கற்பதற்கென தெரிவு செய்தவுடன், அதனை முடிந்த வரையில் நிறைவாக கற்றுவிடல் வேண்டும். நுனிப்புல் மேய்தல், கற்றலை ஒத்தி வைத்தல், கற்றல் மனதில் பதிந்துள்ளதா என மதிப்பீடு செய்யாது கற்றலை நிறுத்துதல், தேவையான எல்லா விடயங்களையும் தேடி கற்காது விடுதல் முதலான கற்றல் சுற்றுகை நிறைவுபெறாத நிலையினையே எடுத்துக்காட்டும். பொதுவாக கற்றல் சுற்றுகையானது பின்வருமாறு அமையும்.

#### புதிய தகவல்களை மனனஞ் செய்தல்

பொதுவாக சட்டவிதிகள், எண்ணக்கருக்கள் என்பனவற்றை தேவைக்கேற்றவாறு மனனஞ்செய்து கொள்ளுதல் வேண்டும். மனனஞ் செய்யும்போது அவை சலிப்புடையதாகவோ அல்லது சோர்வூட்டுகின்ற தாகவோ காணப்படின் வெவ்வேறு நுட்ப முறைகளைப் பயன்படுத்தி கட்டாயம் மனனஞ்செய்து கொள்ளலாம். ஏனெனில் சில விடயங்கள் மனதில் நன்றாகப் பதியப்பட்டு இருக்க வேண்டும்.

#### தகவல்களை தன்மயமாக்குதலும் ஒழுங்கமைத்தலும்

கற்கும்போது பெறும் தகவல்களை ஏற்கெனவே உள்ள அறிவுடன் இணைத்துக்கொள்ளவும், எமக்குப் புரியும் வகையில் அதனை ஒழுங்கமைத் துக் கொள்ளலும், கற்றல் சுற்றுகையின் மற்றுமொரு படியாகும். தகவல்களை தன்மயமாக்குதலும், ஒழுங்கமைத்தலும் கற்றலின்போது கடினமான செயலாகக் காணப்பட்டாலும் நாம் முயற்சி செய்யும்போது அது மகிழ்ச்சி நிறைந்த செயலாகவும், விருப்பத்திற்குரிய கற்றல் தொழிற்பாடாகவும் மாறும். நாம் கற்றலில் ஈடுபடும்போது ஏற்கெனவே நம்மிடமுள்ள அறிவை புதிய அறிவுடன் தொடர்புபடுத்த வேண்டும். மேலும் நமது கற்றலுக்கான ஆர்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டப்படுவதுடன் கற்றல் தொடர்பான புதிய நுட்பங்களை கையாள வேண்டிய நிர்ப்பந்தமும் நமக்கு தேவைப்படுகிறது.

**கற்றலின்போது தகவல்களைப் பயன்படுத்துதல்**

நாம் கற்றலில் ஈடுபடும்போது திரட்டிக்கொண்ட தகவல்களை பகுத்தலும், தொகுத்தலும், அதனை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினை தீர்த்தலில் ஈடுபடலும் எமக்கு கற்றலில் திருப்தியை ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகும். கற்றல் சுற்றுகையின் திருப்தி தரும் ஒரு படியாக கற்றலின் போது தகவல்களைப் பயன்படுத்துதல் அமைகின்றது.

**கற்றுக்கொண்டதை மதிப்பீடு செய்தல்**

நாம் கற்றுக்கொண்டவற்றை மதிப்பீடு செய்தல் கற்றல் சுற்றுகையின் மற்றுமொரு படியாக அமைகின்றது. கற்றல் தொழிற்பாட்டினை வலுப்படுத்துகின்றதாகவும், கற்றல் தொடர்பாக ஆனந்தமூட்டுகின்ற ஒரு படிமுறையாகவும் கற்றுக்கொண்டதை மதிப்பீடு செய்தல் என்ற படிமுறை அமைகின்றது. நமது தீர்ப்புக்கள், முன்னுணர்வுகள், எடுகோள்கள் என்பனவற்றை தீர்மானிப்பதாக இப்படிமுறை அமைகின்றது.

**உடன்பாடான சிந்தனையை வளர்த்துககொள்ளல்**

கற்றலுக்கான உள சுய முகாமைத்துவத்தின் அடுத்ததொரு விடயம் கற்றலுக்காக உடன்பாடான சிந்தனையை வளர்த்துக் கொள்ளல். உடன்பாடான சிந்தனையை வளர்த்துக்கொள்ளல் என்பது கற்றல் தொடர்பாக உயரிய நம்பிக்கை கொள்ளல், சுயமதிப்பினை விருத்தியாக்கிக் கொள்ளல், இலக்குகளை அமைத்துக் கற்றல், கற்றலை மகிழ்ச்சியுள்ள ஒரு செயலாகக் கருதுதல் என்பனவாகும். நாம் எதனை அடைய வேண்டுமென்று சிந்திக்கின்றோமோ அதனையே அடைய வேண்டுமென்று உணர்தலும் வேண்டும். நமது சிந்தனைகளும், உணர்வுகளும் ஒன்றுபடும்போதே நம்மிடையே உடன்பாடான சிந்தனை எழும்.

கற்றலுக்காக நாம் ஏன் உடன்பாடான சிந்தனையை வளர்த்துக் கொள்ளல் வேண்டுமென்ற ஒரு வினாவை முன்வைத்தால் அதற்கான விடை பின்வருமாறு அமையும். நாம் கற்றல் தொடர்பாக கொண்டிருக்கும் மனப்பாங்கே எமது கற்றலின் வெற்றியை தீர்மானிப்பதில் அதிகளவு செல்வாக்கு செலுத்துகின்றது.

மனப்பாங்கு என்பது திட்டமான முறையிலான செயற்பாடொன்றிற்கு அல்லது அவதானமொன்றிற்கான ஆயத்தமாகும் நிலையைச் சுட்டுவதாகும்.

நமது உணர்வுகள், நம்பிக்கைகள், அறிவு என்பன யாவும் நமது உள்ளார்ந்த சிந்தனைகளின் வெளிப்பாடு எனக் கூறலாம். நாம் உடன்பாடான இயங்குதலும், எதிர்மறையாக செயற்படுதலும் அல்லது துடிப்புடன் செயலாற்றுதல் என்பவை நமது உள்ளார்ந்த உணர்வுகளின் வெளிப்பாடுகள் என கொள்ளலாம். மனிதர்களை எடுத்து நோக்கும்போது, அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
நூலகம் யாழ்ப்பாணம்

ஒருவரிலிருந்து ஒருவரை வேறுபடுத்தும் பிரதான காரணி அவர்களது மனப்பாங்கு ஆகும்.

சில மனிதர்கள் தமக்கு கற்றல் மகிழ்ச்சிகரமான அனுபவம் என்கின்றனர். வேறு சிலரோ கற்றல் கசப்பானது, கடினமானது என்கின்றனர். இங்கு இவர்கள் கற்றல் தொடர்பாகக் காட்டும் உடன்பாடான மனப்பாங்கு கற்றலை தொடர்வதில் உள்ளார்ந்த ஊக்கத்தையும், கற்றல் தொடர்பாக வெளிக்காட்டும் எதிர்மறை மனப்பாங்கு கற்றல் தொடர்பான வெறுப்புணர்வையும் வெளிக்காட்டுகின்றது. கற்பது என்பது ஒரு சாதாரண கடமையாகவோ அல்லது எதிர்கால தொழிலுக்காகவோ என்றிருப்பவர்கள் கற்றலை ஒரு சாதாரண நிலையிலேயே நோக்குகின்றனர். கற்றல் என்பதை ஒரு கடமையாக கருதுவதை விட கற்றல் என்பதை ஒரு மகிழ்ச்சிகரமான செயற்பாடு என்ற உடன்பாடான மனப்பாங்கு சார்ந்த உருவாக்கம் கற்றலில் வெற்றியை ஈட்டித்தரும் ஒரு விடயமாகவும் அமையும்.

கற்றல் தொடர்பான உடன்பாடான மனப்பாங்கு நம்மிடையே உருவாக்குவதற்கு பல்வேறு காரணிகள் துணைபுரிகின்றன. அவற்றுள் முக்கியமானது நமது உள்ளார்ந்த உரையாடல்கள். எமது கற்றல் தொடர்பாக நாம் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், சமூகம் என்பவற்றிலிருந்து பல்வேறு பின்னூட்டல்களைப் பெறுகின்றோம். கற்றலின் முக்கியத்துவம் தொடர்பாக நாம் பல்வேறு வழிகளில் உணர்த்தப்படுகின்றோம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் உள்ளார்ந்த உரையாடல்களை ஏற்படுத்திக்கொள்ளல் வேண்டும். நமது உள்ளார்ந்த உரையாடல்கள் கற்றல் தொடர்பான ஊக்கத்தை தூண்டுவதாக ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

நமக்குக் கிடைத்த பின்னூட்டல்களை உடன்பாடாக நோக்குதல் பொருத்தமாக அமையும். நமக்குக் கிடைத்த பின்னூட்டல்களை நாம் பக்கச் சார்பாக அல்லது நம் சார்பாக மட்டும் நோக்கும்போது நமது உள்ளார்ந்த உரையாடல்கள் ஆக்கபூர்வமானதாக அமையமாட்டாது. உதாரணமாக நமது ஆசிரியர் நமது கற்றல் தொடர்பாக முன்வைத்த விமர்சனங்களை நாம் நடுநிலையாக நின்று நோக்கும்போதே நமக்கு நமது கற்றல் தொடர்பான பலம், பலவீனங்கள் நன்றாகத் தெரியும். நமது பலம், பலவீனங்கள் தொடர்பாக நாம் உள்ளார்ந்த உரையாடல்களை உருவாக்கும் போது அது கற்றல் தொடர்பாக நமக்கு உடன்பாடான மனப்பாங்கினை உருவாக்கும். எதிரிடையாக ஆசிரியர் முன்வைத்த விமர்சனங்களை நாம் சரியான கோணத்தில் பார்க்காவிடின் கற்றல் தொடர்பாக எதிரான மனப்பாங்கு உருவாக வழி ஏற்படும்.

உடன்பாடான மனப்பாங்கினை உருவாக்கும் வழிமுறைகள் குறித்து நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். இங்கு உடன்பாடான மனப்பாங்கினை வளர்த்துக்கொள்வது தொடர்பில் நம்மிடையே மூன்று பழக்கவழக்கங்கள் செல்வாக்குப் பெற்றுள்ளன. அவை:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அர்ப்பணிப்புடன் செயற்படல்
2. கூட்டுப் பொறுப்புடன் இயங்குதல்
3. சவால்களை உருவாக்குதல்

**அர்ப்பணிப்புடன் செயற்படல்**

எதனையும் சரியாக செய்தல் வேண்டும். அக்கறையுடன் செய்தல் வேண்டும். ஒன்றை செய்வதற்காக சில தற்காலிக சந்தோசங்களை இழக்கத் தயாராகுதல் வேண்டும் என்ற நிலைகள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை விருத்தியாக்கும். சில விடயங்களைத் தவிர்ப்பதால் நாம் நன்றாகப் படிக்கின்றோம் என்ற உடன்பாடு ஏற்படுத்தும் நிலையில் நமது கனவுகள் நனவாகும் சாத்தியங்களை உருவாக்கும்.

**கட்டுப்பாட்டுடன் இயங்குதல்**

கற்றல் தொடர்பான உடன்பாடான மனப்பாங்குடன் இயங்குவதற்கு வளர்த்துக்கொள்ளப்பட வேண்டியதொரு பழக்கவழக்கம் கட்டுப்பாட்டுடன் இயங்குதல் ஆகும். நமது உளம் முக்கியமான விடயங்களில் மட்டும் குவிக்கப்படுவதை நாம் உறுதிசெய்து கொள்ளப் பழகுதல் வேண்டும். பொதுவாக கட்டுப்பாட்டுடன் இயங்குவதற்கு பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துதல் அவசியமாகும். அவையாவன:

- இலக்குகளை அமைத்து முன்னுரிமை அடிப்படையில் தொழிற்படல்
- பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்துதல்
- ஓய்வாக இருப்பதற்குப் பழகிக்கொள்ளுதல்
- வெற்றியைக் கொண்டாடுதல்
- நமக்கு நாமே நேர்மையாக இருத்தல்
- மனச்சாட்சியுடன் பரிச்சயமாகி செயற்படுதல்

**சவால்களை உருவாக்குதல்**

கற்றலில் நம்மை நாமே ஊக்கப்படுத்திக் கொள்வதற்கு சவால்களை உருவாக்கவும், ஏற்றுக்கொள்ளவும் தயாராக இருத்தல் வேண்டும். சவால்கள் சரியான முறையில் நோக்கப்பட்டால்தான் அது நம்மிடையே உடன்பாடான மனப்பாங்கினை உருவாக்கத் துணை செய்யும். நமக்கு நாமே ஆர்வமூட்டிக் கொள்வதற்கும், மாற்றங்களை இலகுவாக ஏற்படுத்திக் கொள்வதற்கும் சவால்கள் தான் நம்மைத் தூண்டுகின்றன. கற்றல் தொடர்பான சவால்கள் பின்வருமாறு அமைகின்றன. அவையாவன:

- தினம் தினம் கற்றல் தொடர்பான விடயங்கள் மாற்றமடைதல்
- தினமும் திறமையாகச் செயற்படலும் கடந்து போனவற்றை நினைத்து கவலைப்படாமல் இருக்க வேண்டிய நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்றலுக்கான நல்ல சந்தர்ப்பங்களை தேடி அறிதல்
- புதிய விடயங்களை முயற்சித்துப் பார்த்தல்
- பல்வேறு கற்றலுக்கான வாய்ப்புக்களில் சிறந்ததை பயன்படுத்துதல்
- புதிய மனிதர்களை சந்திக்க வேண்டியிருத்தல்
- உடல், உள நிலைமையை நன்றாகப் பராமரித்தல்

மேற்கண்ட சவால்களை விருப்புடன் ஏற்று நடக்கும்போது கற்றல் தொடர்பான உடன்பாடான மனப்பாங்கு எளிதில் உருவாகி விடுவதோடு கற்றல் தொடர்பான சுய ஆர்வமும் விருத்தியாகும். அர்ப்பணிப்பு, கட்டுப்பாடு, சவால்கள் என்பனவற்றை நாம் நமது பழக்கவழக்கங்களாக உருவாக்கிக் கொள்ளும்போது நமது சுயமதிப்பு நல்ல நிலையை அடைந்து உடன்பாடான சிந்தனைப் பழக்கம் இயல்பாக நமக்குள் தோன்றும்.

**கற்றல் தொடர்பான உடன்பாடான மனப்பாங்கினை உருவாக்குவதற்கான ஆலோசனைகள்**

கற்றலில் நாம் வெற்றி பெற சிறப்பான பழக்கவழக்கங்களும், உள முகாமைத்துவமும் நம்மிடையே உருவாக்கப்படல் வேண்டும். இனி, கற்றல் தொடர்பான சில பழக்கங்களை விருத்தியாக்கும் வழிமுறைகளை நோக்குவோம். அவையாவன:

நாம் தினமும் சந்திக்கும் வகுப்பறைக் கற்றல்கள் ஏதாவது ஒரு விதத்தில் முக்கியமானவை. அங்கு ஏதாவது ஒரு புதிய விடயத்தினைக் கற்றுக்கொள்ள முடியும். இதுபோன்ற விருப்பத்துடன் வகுப்பறைச் செயற்பாடுகளில் முடிந்த வரை ஒன்றிணைய முயற்சித்தல் வேண்டும். வகுப்பறையில் ஆசிரியருடனும், ஏனைய சகபாடிகளுடனும், நல்ல மனோநிலையில் இணைந்து செயற்படு வதற்கு முன்வரல் வேண்டும்.

மிகச் சுவையான விடயங்களை ஒவ்வொரு கற்றலிலும் பெற முடியும், நமக்கு தெரிந்த விடயங்களை மேலும் விருத்தியாக்கிக் கொள்வதற்கு விரிவுரைகள் நமக்கு உதவும். நமக்குள் உள்ள ஆற்றல்களை, திறன்களை, அறிவை நாமே மதிப்பிட்டுக் கொள்வதற்கு விரிவுரைகள் உதவும் என்ற பெரு விருப்புடன் விரிவுரைகளுக்கு சமுகமளித்தல் வேண்டும்.

நாம் கற்கும் பாடத்தின் ஒவ்வொரு அத்தியாயமும், நமது எண்ணக்கரு விருத்திக்கு படிப்படியாக உதவும். ஏற்கெனவே நாம் கற்றுள்ளவற்றின் தொடர்ச்சியாகவே புதிய அத்தியாயம் அமையும். புதிய அத்தியாயம் எமக்கு கற்றலில் மேலும் புதிய மாற்றங்களை உருவாக்க உதவும் என்ற மனப்பாங்கோடு ஒவ்வொரு அத்தியாயத்தையும் நாம் அணுகுதல் வேண்டும். சில அத்தியாயங்கள் மகிழ்ச்சிக்குரியவை. சில அத்தியாயங்கள் சலிப்பைத் தருபவை என்றவாறு நாம் மனதிற்குள் உருவாக்கும் படங்கள், கற்றல் தொடர்பான எதிர்மறையான மனப்பாங்குகளையே நம்மிடம் உருவாக்கும். மாணவர்களில் சிலர் பாடங்கள் தொடர்பாகவும் சலிப்பான பாடங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையான பாடங்கள் என்று பிரித்து கற்க முனைகின்றனர். இந் நிலை அவர்களது அடைவு மட்டத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும். ஆகவே இத்தகைய பழக்கவழக்கங்களை விட்டு விலகிவிடுதல் நன்று.

ஒவ்வொரு நண்பரும் நமக்கு புதிய புதிய விடயங்களைக் கற்றுத் தருவன. ஒவ்வொரு நண்பரிடமிருந்து கற்றலுக்கான புதிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற உணர்வுடன் நண்பர்களுடன் இணைந்து கற்றலில் ஈடுபட வேண்டும். நாம் சில நண்பர்களை மட்டும் தெரிவு செய்து அவர்களுடன் மட்டும் இணைந்து கற்பதை மட்டுப்படுத்துவதால் புதிய புதிய விடயங்களையும், கற்கும் முறைகளையும் நம்மால் தெரிந்துகொள்ள முடியாமல் போய்விடும்.

மறுகோணத்தில் நின்று பார்க்கும் போது நாம் நண்பர்களுடன் இணைந்து கற்கும் போது நாம் கற்றவற்றை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். இவ்வாறு நாம் கற்றவற்றை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது நமது கற்றலின் ஞாபக விருத்தி அதிகரிப்பதோடு நாம் கற்றுள்ளவை தொடர்பாக நண்பர்களின் மதிப்பீடுகளையும், பிரதிபலிப்புகளையும் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் எதிர்கால கற்றலுக்கான மனவரைப் படம் நம்முன் உருவாக்கப்படும். நமது உள்ளார்ந்த கலந்துரையாடலுக்கான தலைப்புகளும் நமக்கு கிடைக்கும்.

கற்றலின் போது வினாக்களை எழுப்பிக் கற்றல் ஒரு சிறந்த பழக்கமாகும். வினாக்களை நாம் நம்முள்ளேயே எழுப்பிக்கொள்ளலாம். அத்துடன் ஆசிரியர் அல்லது விரிவுரையாளர்களிடமும் எழுப்பலாம். ஆசிரியர் அல்லது விரிவுரையாளர்களிடம் நமது வினாக்களை முன்வைப்பதால் மேலதிக கற்றல் எழுவதோடு நமது கற்றல் தொடர்பான சந்தேகங்களையும் தீர்த்துக்கொள்ள முடியும். நல்ல ஆசிரியர்களிடம் மாணவர்கள் முன்வைக்கும் வினாக்களுக்கு மிக விரிவாகவும், விளக்கமாகவும், உதாரணங்களுடனும் விடையளிக்க முற்படுவர். இவ்வாறான ஆசிரியர்களிடம் கற்கும் மாணவர்கள் அதிஷ்டசாலிகள் எனலாம்.

ஆகவே ஆசிரியர்களிடம் வினாக்களை வினவும் பழக்கமானது கற்போருக்கு நிறைந்த பயனை அளிப்பதாக அமையும். உடன்பாடான மனப்பாங்கு விருத்திக்கு மிக அவசியமானது கற்றலுக்கான இலக்குகளை பட்டியல்படுத்தி வைப்பதாகும். கற்றலுக்கான இலக்குகள் தெளிவாக தெரியும் போது கற்பதற்கான உடன்பாடு இலகுவாக உருவாகும். உதாரணமாக, ஒரு விடயத்தினைக் கற்பதால் உடனடியாக ஏற்படும் நன்மைகள், வேறு ஒரு விடயத்தினைக் கற்பதற்கு உதவியாக அமையும் தன்மை, என்று பிரித்து பார்ப்பதினால் கற்றலின் பயன் இன்னும் தெளிவாக நமக்குத் தெரிய வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66

# கல்வியின் பண்புத் தரவிருத்தி : ஒரு பன்முக நோக்கு

■ சசிகலா குகமூர்த்தி

**அறிமுகம்:**

ஒருநாட்டின் அபிவிருத்தியில் கல்வியின் தரமான செயற்பாடுகளும் காலத்தின் தேவைகளைக் கருத்திற்கொண்ட பங்களிப்புகளும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. கல்வியின் பண்புத் தரவிருத்தியில் பங்களிப்புச் செய்கின்ற காரணிகளுள் ஆசிரியரின் தொழில்சார்ந்த தகைமைகள், வாண்மைசார் திறன்கள், கற்பித்தல் - கற்றலுக்கான சிறந்த திட்டமிடல்கள், விளைதிறன்மிக்க கற்பித்தல் - கற்றல் செயன்முறைகள் போன்றன பிரதான இடத்தைப் பெறுகின்றன. இதற்கு ஆசிரியர் தமது வாண்மைத்துவ ஆற்றலை விருத்தி செய்தல் வேண்டும். ஆசிரியர் தனது வாண்மைத்துவத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு ஆசிரிய தொழில் வாண்மை தொடர்பான அறிவும் முயற்சியும் அவசியம். இதுவே கல்வியின் பண்புத் தரவிருத்தியில் அவர்களது பங்களிப்பை செயற்றிறன்மிக்கதாக்கும். இதனாலேயே 2009ஆம் ஆண்டின் இலங்கையின் பொதுக் கல்விக்கான புதிய சட்டகம் வாண்மைத்துவத்தின் பிரதான பண்புக்கூறுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஆசிரியர்களின் உயர்மட்ட செயலாற்றுகைக்கு முக்கியத்துவம் வழங்குகின்றது.

மாணவர்களது கற்றல் பேறுகளைக் காலத்தின் தேவைகளோடு பொருந்தும் வகையில் விருத்திசெய்தல் வேண்டும். சர்வதேச உலகில் எழுகின்ற புதிய சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான உயர் அறிகைசார் ஆற்றல்கள் *(Higher order cognitive skills)* மற்றும் உயர்நிலைப்பட்ட சிந்தனைகள் *(Higher order thinking skills)* என்பனவற்றை மாணவர்கள் மத்தியில் வளர்த்தெடுப்பது ஆசிரியரின் நவீன கடமைகளுள் பிரதானமானதாகக் கருதப்படுகின்றது. இதற்கு உயர்மட்டத்திலான செயலாற்றுகையுள்ள வாண்மைத்திறன்மிக்க ஆசிரியவளம் அவசியம். இந்த வகையிலே இக்கட்டுரையானது கல்வியின் பண்புத் தரவிருத்தியோடு தொடர்புபட்ட வகையில் சிந்திக்க வேண்டிய விடயங்கள் சிலவற்றினை முன்வைப்பதாக அமைகின்றது.

கட்டுரையாளர்

கல்வியியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். தற்போது சிரேஷ்ட விரிவுரையாளராக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பணிபுரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்புத் தரவிருத்தி



பண்புத் தரவிருத்தியென்பது தனித்து பௌதிக அபிவிருத்தியை மட்டும் கருத்திற் கொண்டதாக அமைய முடியாது. இது உள, மனவெழுச்சி, ஒழுக்க, ஆன்மிக, சமூக வளர்ச்சியுடன் கூடிய மனித வாழ்க்கையின் பண்பை மேம்படுத்தக் கூடிய பல்வேறு உத்திகளை உள்ளடக்கியதொரு செயற்கருமத் தொடராகும். கல்வியமைச்சின் முகாமைத்துவத்தர உறுதிப்பாட்டலகு பண்புசார் தன்மையின் உள்ளடக்கம் தொடர்பாகப் பின்வரும் பண்புக்கூறுகளை முன்வைத்துள்ளது.

- செயற்சாதனை
- நம்பிக்கைத் தத்துவம்
- உரிய இலட்சணம்
- ஆக்கக் கூற்றுக்கேற்றதாய் இருத்தல்
- காலபாவனை
- தொடர் பயன்பாட்டுடைமை
- அழகுணர்வு
- பொருளாதாரத் தன்மை

எந்தவொரு பொருளினதும் செயற்பாட்டினதும் தரநிர்ணயத்திற்கு மேற்குறித்த பண்புசார் இயல்புகள் அவசியமானவை. இத்தகைய பண்புசார் இயல்புகளை மாணவர் மத்தியில் வளர்த்தெடுப்பதற்கு பின்வரும் தேர்ச்சிகளை மாணவர் மத்தியில் விருத்திசெய்தல் வேண்டும்.

- தற்துணிவு
- சுயமாக வேலைசெய்யும் ஆற்றல்
- சுயமுகாமைத்துவம்
- சுய மதிப்பீடு
- பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்
- நேர்மனப்பாங்கு
- வாழ்க்கை நீடித்த கற்றல்
- சமூக கலாசார புரிந்துணர்வு
- நெகிழ்ச்சியுடைமை
- குழுவாக இணைந்து செயற்படல்
- தொடர்பாடற்திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறித்த தேர்ச்சிகளை மாணவர் மத்தியில் மேம்படுத்துவதற்குச் சாதகமான மனப்பாங்குகள் உருவாக்கப்படல் வேண்டும்.

**பண்புத் தரவிருத்திக்கான சாதகமான மனப்பாங்கு**

கல்வியின் பண்புத் தரவிருத்தி தொடர்பாக ஆராய்ந்தவர்கள் ஒரு நாட்டினது தேசிய மற்றும் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான சாதகமான மனப்பாங்குகள் பற்றிச் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வாய்வுகளின் படி ஒரு நவீன மனிதனிடம் இருக்க வேண்டிய பண்புகளாகப் பின்வருவன குறிப்பிடப்பட்டுள்ளன.

- புதிய அனுபவங்களை எதிர்நோக்குவதற்கான விருப்பம்
- சமூகமாற்றத்தை ஏற்பதற்கு ஆயத்தமாக இருத்தல்
- சரியான தகவல்கள் மற்றும் உண்மை நிகழ்வுகளின் அடிப்படையில் அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்ளுதலும் பொருத்தமான முடிவுகளை எடுத்தலும்
- அபிப்பிராயங்கள் பல வகைப்படும் என்பதனை ஏற்றுக்கொள்ளல்
- கடந்தகால வரலாற்றைவிடுத்து நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் முக்கியத்துவம் வழங்குதல்
- சமூக நிறுவனங்களில் நம்பிக்கை வைத்தல்
- தொழில்நுட்பஅறிவு, தொழிற்தகைமைகள் மற்றும் திறன்கள் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல்
- கல்வியில் அதிக அக்கறை செலுத்துதல்
- அடிப்படைத் தர்க்க நியாயங்கள் பற்றிய புரிந்துணர்வைப் பெற்றிருத்தல்

மேலே குறிக்கப்பட்ட மனப்பாங்குகளை கட்டியெழுப்புவதில் ஆசிரியர் தேர்ச்சி முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

**ஆசிரியர் தேர்ச்சி**

ஒருநாட்டில் ஆசிரியர்கள் எத்தரத்தினில் உள்ளனரோ அத்தரத்திலேயே அந்நாட்டின் கல்வியறிவும் காணப்படும் என்பது பொதுவான கருத்தாகும். முன்னைய காலங்களில் ஆசிரியர்கள் பிறக்கின்றனர் என்றும் அவர்களுக்கான தேர்ச்சிகள் உள்ளாந்த திறன்களாக உருவாகின்றன என்றும் நம்பப்பட்டது. ஆனால் இன்று ஆசிரியர்கள் பிறப்பதில்லை. அவர்கள் உருவாக்கப்படுகின்றனர். இவர்களுக்கான தேர்ச்சிகள் பல்வேறு செயற்பாடுகளினூடாக வளர்த்தெடுக்கப்படக் கூடியது என நம்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி என்ற பதமானது அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற கல்வித்தர மீளாய்வு தொடர்பான விவாதமொன்றின் முக்கிய கருவாக அமைந்தது. இவ்விவாதத்தில் தேர்ச்சி என்பது "ஒரு குறிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அறிவு, திறன் ஆகியவற்றை சரியான முறையில் பாவிக்கும் திறமை" எனக் குறிப்பிடப்பட்டது. சர்வதேச கல்விக் கலைக்களஞ்சியம் தேர்ச்சி என்பது பின்வரும் மூன்று தரத்திலான மனித செயற்பாடுகளை வலியுறுத்துவதாக உள்ளது.

1. அறிவு - இது ஈடுபடுதல், தெரிவுசெய்தல், குறியிடுதல், பிரதிபலித்தல், மதிப்பிடுதல் போன்ற புலக்காட்சி எண்ணக் கருவாக்கற் செயற்பாடுகளின் விளைவு.

2. மனப்பாங்கு - குறிப்பிட்ட நிகழ்வுகள் அல்லது பொருட்கள் சார்ந்த உணர்வு வெளிப்பாடுகளின் தோற்றப்பாடு

3. ஆற்றுகைத் திறன்கள் - மற்றவர்களால் அவதானித்து உறுதிப்படுத்தக் கூடிய தெளிவான உணர்வு வெளிப்பாடுகளை பிரதிபலிக்கக்கூடிய தன்மையைத் தனிமனிதனிடத்தில் ஏற்படுத்தும் உள இயக்கம்.

தேர்ச்சியைச் சுருக்கமாகத் தரப்பட்ட ஒரு செயற்பாட்டை ஆற்றுவதற்காகத் தேவைப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு எனக் கூறலாம். இந்த வகையிலே ஆசிரியர் தேர்ச்சி என்பது "ஆசிரியர் ஒருவர் பாடசாலையில் போதனைக்குத் தேவைப்படும் எண்ணக்கரு விளக்கம், திறன்கள், மனப்பாங்கு என்பவற்றை கொண்டிருத்தல்" என விளக்கமளிக்கலாம். கலகெர் *(Gallagher)* என்பவர் ஆசிரியர் ஒருவர் அறிவுசார், உணர்வுசார் முதிர்ச்சி உடையவராகவும், தனியாகவும் குழுவாகவும் மாணவர்களை கையாளும் திறன், மாணவர்களை முன்னேற்றும் திறன் பொருத்தமான விழுமியங்களைப் பேணும் திறன் போன்றவற்றைக் கொண்டிருத்தலை தேர்ச்சி என்றார்.

பொதுநலவாய அமைப்பின் குறிப்பொன்று "தேர்ச்சிமிக்க ஆசிரியர் ஒருவர் பிள்ளை விருத்தி பற்றிய அறிவு, பாடப் புலத்திலான அறிவு, தனது மாணவர்களை, அவர்கள் சார்ந்திருக்கும் சமூகத்தை வழிப்படுத்தும் திறன், நேர்ப்பாங்கான மனப்பாங்கு, முன்னுதாரணமான நடத்தைகள் போன்றவற்றைக் கொண்டிருப்பர்" எனக் குறிப்பிடுகின்றது.

கல்வி தொடர்பான சர்வதேச ஆணைக்குழு 1996ஆம் ஆண்டு யுனெஸ்கோவிற்கு கையளித்த அறிக்கையில் புத்தாயிரம் ஆண்டில் ஆசிரியர் ஒருவரின் வகிபங்கினைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இது ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் எவை என்பதையும் அடையாளப்படுத்தி உள்ளது. "ஆசிரியர்களுக்கு இளம் தலைமுறையினரை உருவாக்கும் முக்கிய பணியொன்று உள்ளது. எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்குபவர்களாக மட்டுமன்றி எதிர்காலத்தை பொறுப்புடன் அர்த்தமுள்ளதாக உருவாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் இளம் தலைமுறையினரை ஆசிரியர்கள் கட்டியெழுப்ப வேண்டும். சர்வதேசத்தின் புதிய சவால்கள் முகம்கொடுத்து, புரிந்துணர்வு மற்றும் நவீனமயமாக்கல் சிந்தனைகளுடன் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற வகையில் இளைஞர் சமூகத்தை உருவாக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டு உள்ளது. இதற்கு பலவகைப்பட்ட தேர்ச்சிகள் ஆசிரியர்கள் மத்தியில் வளர்த்தெடுக்கப்படுதல் வேண்டும்.

**ஆசிரியர் தேர்ச்சிகளின் பல்வகைமை**

ஆசிரியர் தேர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வெளிவந்த கருத்துக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஆசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தேர்ச்சிகள் எவை என்பது தொடர்பாகவும் பல கருத்துகள் வெளிவரத் தொடங்கின. ஹிக்ஸ், பிளக்கிங்டன் *(Hicks and Blackington)* என்போர் ஆசிரியர்களுக்குரிய தேர்ச்சிகளாகப் பின்வருவனவற்றை சுட்டிக்காட்டினார்.

- தனியாளுக்கான தகைமைகள்
- வாண்மைக்குரிய தகைமைகள்
- கற்பித்தற் துணைச்சாதனங்களின் மேலாண்மை
- போதனையைத் திட்டமிடல்
- போதனை முகாமைத்துவம்
- வகுப்பறைக் கல்விநிலையை விருத்தி செய்தல்
- சேர்ந்து தொழிற்படல்

மேலும் ஹவுஸ்டன் *(Housten)* என்பவர் "அறிவும் பல்வேறு ஆற்றல்களையும் உள்ளடக்கிய அறிகைசார் தேர்ச்சி, கோட்பாட்டு ரீதியில் அமையாது தொழிற்படுதிறன்களை உள்ளடக்கிய ஆற்றுகைசார் தேர்ச்சி, பொருத்தமான நேர்ப்பாங்கான விரும்பத்தகு விழுமிங்கள் மற்றும் பண்புகளைக் கொண்ட மனப்பாங்குசார் தேர்ச்சி என்பன ஒரு ஆசிரியருக்கு அவசியம்" எனக் குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர்களுக்கு அவசியமான தேர்ச்சிகளென இவான்ரேஸ், ஸ்டீபன் வோக்கர் என்பவர்கள் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றனர்.

- கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் விளைதிறன்மிக்க அணுகு முறையைப் பயன்படுத்தல்
- பாட வடிவமைப்பில் நேர்ப்பாங்கான கோட்பாடுகளைப் பயன்படுத்தல்
- கற்பித்தல் நுட்பங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தல்
- தொடர்பாடல் நுட்பங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்றலைத் தூண்டுவதற்கான வளங்களை, சந்தர்ப்பங்களை உருவாக்குதல்
- கற்றலைத் தூண்டும் வகையிலான மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தல்

கல்விக்கான கலைக்களஞ்சியம் "கற்பிக்கும் பாடப் புலத்தில் நிபுணத்துவம், உடல் மற்றும் உளரீதியிலான பொருத்தப்பாடு, உணர்வு முதிர்ச்சி, மனித இயல்புகளையும் விருத்திகளையும் புரிந்துகொள்ளுதல், கற்றல் தத்துவம் பற்றிய அறிவும் அதனைப் பயன்படுத்தும் ஆற்றலும், இன, மத கலாசார வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளல், வாண்மைவிருத்திசார் அக்கறையும் ஆர்வமும் இருத்தல்" போன்றவற்றை ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் எனச் சுட்டிக்காட்டுகின்றது. மேற்குறிப்பிட்ட தேர்ச்சிகளை விருத்தி செய்வதோடு ஆசிரியர் கற்பித்தல் - கற்றல் செயன்முறையை திட்டமிடுகையில் மாணவர் சார்ந்த சிந்தனைகளுக்கும் முக்கியத்துவம் வழங்குதல் வேண்டும்.

**கற்பித்தல் - கற்றல் செயன்முறையில் மாணவர் சார்ந்த சிந்தனைகள்**

மாணவர்களது கற்றல் பாங்குகளோடு *(Learning styles)* தொடர்புபடுத்தி செய்யப்பட்ட ஆய்வுகள் மாணவர்கள் கற்பவற்றை தமது முன்னறிவுடனும், அனுபவங்களுடனும் இணைத்துக்கொள்ளவும் அவற்றை யதார்த்த வாழ்க்கையில் பிரயோகித்து உச்சப் பயனைப்பெறவும் விரும்புகின்றார்கள் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றன. எனவே ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை தரம் நிறைந்ததாக்குவதற்குப் பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதல் சிறப்பானதாகும்.

- மாணவர்கள் கற்பவற்றை தமது முன்னறிவுடனும், அனுபவங்களுடனும் இணைத்துக் கொள்கின்றனர்.
- மாணவர்களது கற்றல் பாணிகள் வேறுபடுகின்றன. தேவைகளின் வேறுபாடுகளுக்கேற்ப கற்றல் முறைகளை மாற்ற விரும்புகின்றனர். இதற்காக நவீன கற்பித்தல் முறைகளை விரும்புகின்றனர்.
- மாணவர்கள் பாடத்தில் தரப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும், வினாக்களுக்கு விடையளிக்கவும் தமக்கிடையே ஒத்துழைத்துக் கூட்டாகச் செயற்படவே விரும்புகின்றனர்.
- கற்பித்தல் - கற்றல் செயன்முறையில் கற்றலானது இருவழித் தொடர்பாகவும் இடம்பெறலாம்.
- மாணவர்கள் கவர்ச்சிகரமாக கற்பதற்கு தூண்டும் முறையில் அமைகின்ற கற்பித்தல் செயன்முறைகளையே விரும்புகின்றனர்.
- மாணவர்கள் தொடர்ச்சியான முன்னேற்றத்தை விரும்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்கள் தாம் கற்றவற்றை ஆசிரியர்கள், சகமாணவர்கள் மற்றும் சமுதாயத்துடன் பகிர்ந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் முக்கியமானது.
- தகவல்களைத் தொகுத்தல், பகுப்பாய்வு செய்தல், விமர்சித்தல், மதிப்பீடு செய்தல் போன்ற உயர்நிலைச் சிந்தனைகளுக்கு வாய்ப்பளித்தல்.
- மாணவர்கள் கோட்பாட்டு அறிவினை பிரயோக அறிவாக மாற்ற முனைகின்றனர்.

கற்பித்தல் - கற்றல் செயன்முறையை திட்டமிடுகையில் அசிரியர் ஒருவர் மாணவர்களில் நல்ல பண்புத் தரத்தை விருத்தி செய்யும் வகையில் பின்வருவனவற்றில் கவனம் செலுத்துதல் வரவேற்கத்தக்கதாகும்.

- அறிவு, திறன், நல்ல மனப்பாங்குகளை தமது மாணவரிடம் விருத்தி செய்தல்
- சமூகம் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை விருத்திசெய்தல்
- கலாசாரம், தேசப்பற்று என்பவற்றை விருத்திசெய்தல்
- சமூகமயமாக்கலுக்கு உதவுதல்
- அமைதி, நல்லிணக்கம் என்பவற்றை விருத்தி செய்யும் வகையில் தனியாகவும், நிறுவன ரீதியாகவும் பங்காற்றுதல்
- வாழ்விற்கும் தொழிலுக்கும் வழிகாட்டி உதவுதல்
- புதிய தொழில்நுட்பங்களின்படி கற்பிக்கவும், புதியதொழில்நுட்ப முறைக்கு மாணவர்களை நெறிப்படுத்தவும் ஊக்கமுடன் செயற்படுதல்
- மனிதவள அபிவிருத்திக்கு வாழ்நாள் முழுவதும் பல வழிகளிலும் பங்களிப்புச் செய்தல்


**முடிவுரை**

மேற்குறித்த அம்சங்களின் அடிப்படையில் நோக்குகையில் கல்வியின் பண்புத் தரவிருத்தி கருதி இன்றைய கல்விச் செயற்பாடுகளின் நடைமுறைகளை மீளமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளதுடன் கல்வியின் பண்புத் தரவிருத்திக்குத் தேவையான தேர்ச்சிகளை ஆசிரியர்களில் விருத்தி செய்யும் வகையில் ஆசிரியர் கல்விக்கான நிகழ்ச்சித் திட்டங்களும் தமது நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நோக்கங்களை மீளவடிவமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமடு பதிப்பகத்தின்
புதிய வெளியீடு




விலை 340.00

CHEMAMADU BOOK CENTRE

U.G.50, People's Park, Colombo -11
Tel: 011-2472362, Fax:011-2448624
E=Mail:chemamadu@yahoo.com
Website:www.chemamadu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHEMAMADU BOOK CENTRE

**IMPORTERS**
**OFFICE/ SCHOOL STATIONARY**

*UG.50 PEOPLE'S PARK,*
*COLOMBO -11*
*TEL: 011-2472362, 2321905,*
*FAX:011-2448624*

*E-MAIL:chemamadu@yahoo.com*
*WEB:chemamadu.com*
*MOB:077-7279983, 077-3147442, 077-8323*



## All Types of Stationery



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org